REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 மார்ச் 2 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 89 இல. 52 | March 02, Tuesday, 2021 | 24 பக்கங்கள் | 30/-

பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் வேண்டும்;

மாணவி ஒருவரின் கோரிக்கைக்கு உடனடி தீர்வு வழங்கிய ஜனாதிபதி

பாடசாலை மாணவி ஒருவர் முன்வைத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக தீர்வு வழங்கியுள்ளார்.

திருகோணமலை, மதவாச்சி பாடசாலை மாணவியொருவர் பாடசாலை விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்து தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

கோமரங்கடவல பிரதேச செயலாளர் பிரிவில் கிவுலேகடவல வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 06

சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றி

சுமுகமாக ஆரம்பமாகிய க.பொ.த சாதாரணப் பரீட்சை

முறைகேடுகள் தொடர்பாக பதிவுகள் இல்லை

லோரன்ஸ் செல்வநாயகம்

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை நேற்று நாடளாவிய ரீதியில் 4513 பரீட்சை நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பரீட்சை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற்றதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

முதல் நாளான நேற்றைய தினம் எந்தவொரு மோசடி அல்லது குறிப்பிடத்தக்க சம்பவங்களும் நாட்டின் எந்தப் பகுதியிலும் 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதிகள் நேற்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளுக்கு கையளிக்கப்பட்டன. ஜனாதிபதியின் சட்டப் பணிப்பாளர் ஹரிகுப்த ரோஹணதீர, அறிக்கையினை மல்வத்து மகாநாயக்க தேரர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

பெருந்தோட்டத் தொழிலாளருக்கு 1000 ரூபா நாளாந்த சம்பளம்

அடிப்படை சம்பளம் 900; பட்ஜட் கொடுப்பனவு ரூ.100

லோரன்ஸ் செல்வநாயகம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாயாக வழங்க நேற்றைய பேச்சுவார்த்தையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இ.தொ.கா முன்வைத்த 900 ரூபாய் அடிப்படைச் சம்பளமாகவும் 100 ரூபாய் பட்ஜட் கொடுப்பனவுமாக இணைத்து, ஆயிரம் ரூபாயை வழங்க இறுதித் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இ.தொ.காவின் கோரிக்கையை ஏற்றது சம்பள நிர்ணய சபை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில், தொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே, இவ்வாறு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 1000 ரூபா சம்பள விடயத்தில் கோரிக்கையொன்றை முன்வைத்து அதனை சம்பள நிர்ணயசபை பரிசீலனை செய்து ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

இதன்போது அரசாங்கம் தரப்பில் 3 பேரும் தொழிற்சங்கம் சார்பாக 8 பேரும் தோட்ட கம்பனிசார்பாக 8 பேரும் கலந்துக்கொண்டனர். இதன்போது தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பள வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே தீர்மானித்தபடி 900 ரூபா அடிப்படை சம்பளம் மற்றும் நூறு ரூபா வரவு செலவுத்திட்ட கொடுப்பனவு என ஆயிரம் ரூபாவாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கும் வர்த்தமானி அறிவிப்பை வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான வர்த்தமானியை வெளியிடுவதற்கு தொழில் ஆணையாளர் அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளார்.

இதன்போது தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிப்பதற்கு ஏற்கனவே சம்பள நிர்ணய சபையில் மேற்கொள்ளப்பட்ட 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் நேற்று கையளிக்கப்பட்டது. ஜனாதிபதியின் சட்ட பணிப்பாளர் இதனை கையளித்தார்.

முதலமைச்சர் வேட்பாளரை ரெலோவும் நியமிக்கலாம்

சந்தர்ப்பம் உள்ளதாக கட்சிப் பேச்சாளர் தெரிவிப்பு

தமிழ் ஈழ விடுதலை இயக்கமும் (ரெலோ) சிறந்ததொரு முதலமைச்சர் வேட்பாளரை இனங்கண்டு பிரேரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆகவே முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் கூடி முடிவெடுத்தே தீர்மானிக்கும் 06

டாம் வீதியில்

பயணப் பொதிக்குள் பெண்ணின் சடலம்

கொழும்பு டாம் வீதியில் பயணப் பொதியொன்றினுள் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

துண்டுகளாக வெட்டப்பட்ட நிலையில் சடலம் இந்த பெட்டியினுள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கொலைக்கான 06

உயிர்த்த ஞாயிறு தொடர்பிலான குற்றச்சாட்டு;

மைத்திரிக்கு எதிரான நடவடிக்கை குறித்து உயர் நீதிமன்றமே தீர்மானம்

அவர் மீது திட்டமிட்ட குற்றச்சாட்டு எதுவுமில்லை

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதா? இல்லையா? என்பதை உயர் நீதிமன்றமே தீர்மானிக்கும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வந்த ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் அமைச்சரிடம் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டத. இதற்குப் பதிலளித்த அவர், முன்னாள் ஜனாதிபதி தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதா? 06

அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு

அறிக்கைக்கு எதிராக நான்கு முறைப்பாடுகள்

அரசியல் பழிவாங்கல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பாக நான்கு வழங்கறிஞர்கள் தலைமை நீதிபதியிடம் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இறுதி அறிக்கை குறித்து விசாரணை நடத்தக் கோரி வழக்கறிஞர்கள் தலைமை நீதிபதிக்கு எழுத்துபூர்வகமாக முறைப்பாட்டினை தாக்கல் செய்துள்ளனர். சேனக பெரேரா, நாமல் ராஜபக்ஷ, அச்சலா செனவிரத்ன மற்றும் ஜெயரத்னராஜா தம்பிஐயா 06

ஜனாதிபதியின் கருத்தினை வரவேற்று சந்திக்க தயார்

திருமலை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

ரொட்டவெவ குறூப் நிருபர்

காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளை சந்திப்பதாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கு தாம் ஆதரவளிப்பதாக திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி 06

நல்லடக்க அனுமதியை அரசு வழங்கும் என எனக்கு தெரியும்

அதனாலேயே பாக். பிரதமரை சந்திக்க செல்லவில்லை

ராஜகிரிய குறூப் நிருபர்

கொரோனாத் தொற்றில் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதி கிடைக்குமென பெப்ரவரி (10) இல் உறுதியானதாலே, இம்ரான்கானைச் சந்திக்கத் தேவையில்லையென முடிவு செய்ததாக தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம் அதாஉல்லா தெரிவித்தார். முப்பது வீதமாக வாழும் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை எழுபது வீதமாக வாழும் பௌத்தர்களுடன்தான் பேசித் தீர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு பேசிய அதாஉல்லா எம்.பி மேலும் தெரிவித்ததாவது: 06

அமெரிக்காவில் முப்படையினரை விமர்சித்தால் சிறைத்தண்டனை

எமது முப்படையை வேட்டையாட சிலர் நினைப்பது அநீதி

லோரன்ஸ் செல்வநாயகம்

அமெரிக்காவின் முப்படையினருக்கு எதிராக சர்வதேசரீதியில் விமர்சனங்கள் முன்னெடுக்கப்படுமானால் அது தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குவது அந்நாட்டின் சட்டப்படி முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கம், அமெரிக்க நீதிமன்றம் மற்றும் அமெரிக்க பிரஜைகள் அமெரிக்காவின் முப்படையினருடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புபட்டால் அது பெரும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கு ஏற்றவாறு அமெரிக்கா சட்டத்தை உருவாக்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் சர்வதேச நடவடிக்கை சட்டம் மற்றும் தேசப்பற்று சட்டம் என 2 முக்கிய சட்டங்களை அமெரிக்க காங்கிரஸ் நிறைவேற்றியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய 06

பொத்துவில் முதல் பொலிகண்டிவரை;

சிறிதரன் எம்.பியிடம் பொலிஸ் வாக்குமூலம்

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கேற்றமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். அவரின் காரியாலயமான அறிவகத்தில் வைத்து நேற்று (திங்கட்கிழமை) புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக தனது ருவிட்டர் பக்கத்தில் 06

அமானுஷ்ய சக்தியை விரட்டுவதாக கூறி சிறுமி கொலை;

தாய் மற்றும் பிரம்பால் தாக்கிய பெண்ணுக்கும் 12 வரை விளக்கமறியல்

6 பேரிடம் வாக்குமூலம்; நேற்று பிரேத பரிசோதனை

மீகஹவத்தை பிரதேசத்தில் அமானுஷ்ய சக்தியை விரட்டுவதற்காக பிரம்பு தாக்குதல் மேற்கொண்டமையினால் சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சிறுமியின் தாய் மற்றும் மத சடங்கினை மேற்கொண்ட பெண் ஆகிய இருவரும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் நேற்று மஹர நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மத சடங்கினை மேற்கொண்டபெண்குறித்தசிறுமியை பிரம்பால் அடித்துள்ள நிலையில் 9 வயதுடைய பாத்திமா ரிப்கா என்ற சிறுமியே 06

இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவு இன்று

நாளை காலிமுகத்திடலில் சாகச நிகழ்வு

ஸாதிக் சிஹான்

இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு கொழும்பு, கட்டுநாயக்க உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள 24 விமானப் படை முகாம்களில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் மார்ச் மாதம் 3, 4 மற்றும் 5ஆம் திகதிகளில் கொழும்பு காலி முகத்திடலில் வான் சாகசங்கள் பல காண்பிக்க 06

விக்கல் வீராச்சாமி

ஜனாஸாக்களை வச்சு அரசியல் வியாபாரமும் ஊக விற்பனையும் தாராளமா நடக்குது, ஆனா இன்னமும் ஆக்கபூர்வமான முடிவு இல்லை....

உண்மைதான், முடிவு வாறத்துக்குள்ள கொரோனா முடிவுக்கு வந்துடும் போல கிடக்கு....!!!

உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்து ஏற்றுமதி பொருளாதாரத்தை பலப்படுத்துவோம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஏற்றுமதி பொருளாதாரத்தின் மூலமே சுபீட்சத்தின் நோக்கை அடையலாம், அதற்கு விவசாய ஏற்றுமதி இன்றியமையாதது என தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்து வெளிநாட்டு சந்தைவாய்ப்பினை பெற்று ஏற்றுமதி பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவோம் என தெரிவித்தார்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கு ஏற்ப நாடுபூராகவும் விவசாய ஏற்றுமதி வலயங்களை ஆரம்பிக்கும் தேசிய நிகழ்வு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அங்குனுகொலபெலஸ்ஸ கசாகல ரஜமகாவிகாரையில் சனிக்கிழமை (27) ஆரம்பித்து வைக்கப்பட்டபோது அதில் கலந்துகொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது,

2019 ஆம் ஆண்டு 6300 கோடி ரூபாவாக இருந்த விவசாய ஏற்றுமதி வருமானம் ஒரு வருடகாலத்தினுள் 7000 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது. அன்று எமது புதிய அரசாங்கம் பதவியேற்று அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவியேற்கையில் அவர்களது அமைச்சுக்களை வாசித்த போது சிலர் சிரித்தார்கள். சிறிது காலம் செல்லும் வரை பிரதிஅமைச்சர் தயாசிரி ஜயசேகரவை பத்திக் அமைச்சர் என்றும் பிரசன்ன ரணவீர பிரதிஅமைச்சரை களிமண் அமைச்சர் என்றே அழைத்தனர். ஒருசிலர் அமைச்சு பொறுப்புக்களை ஏற்க தயக்கம் காட்டினர். எமது உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கு அனைவரினது கவனத்தினை ஈர்ப்பதற்காகவே இவ்வாறு பெயரிட்டோம்.

2005 ஆம் ஆண்டு மஹிந்த சிந்தனை அறிமுகப்படுத்தும் போதும் அதிகமானோர் இந்த பெயரிற்காகவும் சிரித்தார்கள். இருந்தாலும் நாம் இதனூடாக யுத்தத்தினை நிறைவுசெய்து நாட்டை கட்டியெழுப்பினோம். எமது நாட்டின் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்து வெளிநாட்டு சந்தைவாய்ப்பினை பெற்று ஏற்றுமதி பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவோம். உள்நாட்டு பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்காக பாடுபட்ட அனைத்து அரசாங்கங்களும் கடந்த காலங்களிலிருந்து பாடங்களை கற்றுக் கொள்ளவேண்டும்.

வெளிநாட்டவர்களினால் எமக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை ஆகியவற்றை மாத்திரம் நம்பியிருந்தார்கள். அண்மைகாலம் வரை நிலக் கடலை, மா,கொய்யா மற்றும் புளியை மாத்திரமன்றி ஈர்க்குகளையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தார்கள். இதனூடாக பாரியதொருதொகை வெளிநாட்டு செலாவணி எமது நாட்டிற்கு இல்லாமல் ஆக்கப்பட்டது. நாம் உற்பத்திகளை செய்யாவிட்டால் தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுக்க முடியாமல் போகும். நாம் இவற்றை பயிரிட ஊக்குவிப்பதினூடாக வெளி நாட்டு செலாவணி மீதமாக்கப்பட்டு விவசாயிகள் வருமானம் பெற்றுவருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வினை பிரதமர் மரக்கன்றொன்றினை நட்டு ஆரம்பித்துவைத்ததோடு இஹல அலுத் வெளகுளத்திற்கு பிரதமரினால் மீன் குஞ்சுகளும் இடப்பட்டன. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேசவாசிகளுக்கு பிரதமரினால் மா, மரமுந்திரிகை மற்றும் மிளகு ஆகிய மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

அமைச்சர்களான சமல் ராஜபக்ஸ, மஹிந்தஅமரவீர, டொக்டர் ரமேஸ் பதிரன மற்றும் நாமல் ராஜபக்ஷ பிரதி அமைச்சர்களான ஜானக வக்கும்புர, டி.வீ.சானக, பாராளுமன்ற உறுப்பினர்களான அஜித் ராஜபக்ஸ, உபுல் கலப்பத்தி, தென் மாகாண ஆளுநர் விலீகமகே ஆகியோருடன் பெரும் திரளானோர் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவு

வான் சாகசங்கள் நாளை காலி முகத்திடலில் ஆரம்பம்

ஸாதிக் ஷிஹான்

இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மூன்று நாள் வான் சாகசங்கள் கொழும்பு காலி முகத்திடலில் நாளை (03) ஆரம்பமாகவுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ள இந்த நிகழ்வில் இம்முறை இலங்கை விமானப் படையுடன் இந்திய விமானப் படையும் இணைந்து கூட்டாக தமது சாகசங்களை காண்பிக்கவுள்ளனர்.

நாளை 3ஆம் திகதி முதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை தினமும் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை கொழும்பு காலி முகத்திடலில் நடைபெறவுள்ள இந்த வான் சாகசங்களில் இலங்கை மற்றும் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான 38 விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் பங்குபற்றவுள்ளதாக விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன தெரிவித்தார்.

இவற்றில் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான 24 விமானங்களும் இலங்கை விமானப் படையின் அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள இந்திய விமானப் படைக்குச் சொந்தமான 14 விமானங்களும் இணைந்தே கொழும்பு காலி முகத்திடல் வான் பரப்பில் விமான சாகசங்களை காண்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொவிட் நிலைமையை கருத்திற்கொண்டு பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைச்சுக்களின் அனுமதியுடன் சுகாதார துறையினரின் வழிகாட்டல்களுடன் சகல நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த விமானப் படைத் தளபதி, சுகாதார வழிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றிய நிலையில் கொழும்பு காலி முகத்திடல் வான் பரப்பில் இடம் பெறவுள்ள வான் சாகசங்களை கண்டுகளிக்குமாறு பொது மக்களிடம் கேட்டுக் கொள்வதாக வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியாவின் பிரசித்தி பெற்ற சாகச விமானங்களான சூரியகிரண் என்ற விமானமும் சாரங் என்ற ஹெலிகொப்டரும்; தேஜஸ் என்ற தாக்குதல் விமானமுமே சாகசங்களை காண்பிக்கவுள்ளன. கொழும்பு காலி முகத்திடலில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இது தொடர்பான ஒத்திகையை பார்வையிட வருகை தந்த விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன இலங்கை வந்துள்ள இந்திய விமானப் படை அதிகாரிகளை வரவேற்று கலந்துரையாடியதுடன் சாகசங்களின் ஒத்திகையையும் பார்வையிட்டார்.

இதேவேளை, இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவு நாளான இன்றைய தினம் கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் பிரதான மரியாதை அணிவகுப்பும் மார்ச் 05ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விமானப் படையின் ஜெட் மற்றும் எம் ஐ –17 ரக ஹெலிகொப்டர் பிரிவுகளுக்கு ஜனாதிபதி வர்ணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெறவுள்ள நிகழ்வுகளில் பங்குகொள்ளவென இந்திய விமானப் படைக்குச் சொந்தமான 23 விமானங்கள் இலங்கை வந்தடைந்துள்ளதாக கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் மற்றும் படைத் தரப்புகளுக்குமிடையிலான உறவின் வெளிப்பாடாகவே இந்திய விமானப் படையும் கடற்படைகளும் இந்த நிகழ்வில் பங்குகொள்வதாக மேலும் தெரிவித்துள்ளது.

ஆங் சான் சூச்சி நீதிமன்றத்தில் ஆஜர்: புதிய குற்றச்சாட்டு பதிவு

மியன்மாரில் பதவி கவிழ்க்கப்பட்ட ஆளும் கட்சித் தலைவி ஆங் சான் சூச்சி இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பின்னர் முதல் முறை தனது வழக்கறிஞர் உடன் தோன்றியுள்ளார்.

வீடியோ இணைப்பு ஊடாக நேற்று நீதிமன்றத்தில் தோன்றிய சூச்சி, நல்ல உடல் நிலையுடன் காணப்படுவதாக அவரது வழங்கறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி 1ஆம் திகதி இராணுவ சதிப்புரட்சி இடம்பெற்றது தொடக்கம் அவர் இரகசியமான இடம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அது தொடக்கம் நாட்டில் பதற்றம் நீடிப்பதோடு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்களில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக இராணுவம் மற்றும் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூடுகளிலேயே பலரும் கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும் ஜனநாயக முறையில் தேர்வான அரசை மீண்டும் பதவிக்குக் கொண்டுவரக் கோரி நேற்றும் நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. கைது செய்யப்பட்டிருக்கும் சூச்சி மற்றும் ஆளும் ஜனநாயகத்திற்கான தேசிய லீக் கட்சியின் ஏனைய தலைவர்களை விடுவிக்கும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி வருகின்றனர்.

ஆளும் கட்சி அமோக வெற்றியீட்டிய கடந்த ஆண்டு தேர்தலில் மோசடி இடம்பெற்றதாகக் கூறியே இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. எனினும் அந்தக் குற்றச்சாட்டுக் குறித்து எந்த ஆதாரத்தையும் வெளியிட இராணுவம் தவறியுள்ளது.

இந்நிலையில் நேற்று நீதிமன்றத்தில் தோன்றிய சூச்சி மீது ஆரம்பத்தில் இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. வோக்கி டோக்கி கருவிகளை சட்டவிரோதமாக இறக்குமதி செய்ததாகவும் மியன்மாரின் இயற்கை அனர்த்த சட்டத்தை மீறியதாகவுமே அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதில் நேற்று மேலும் குற்றச்சாட்டுகள் சேர்க்கப்பட்டன. தேர்தல் பிரசாரத்தில் கொரோனா கட்டுப்பாடுகளை மீறியது மற்றும் அச்சம் மற்றும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியதான குற்றச்சாட்டுகளும் அடங்கும்.

ஆரம்ப குற்றச்சாட்டுகளுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்க முடியும் என்ற நிலையில் தற்போதைய குற்றச்சாட்டுகளுக்கான தண்டனை பற்றிய விபரம் உறுதி செய்யப்படவில்லை. இந்த வழக்கு வரும் மார்ச் 15 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இராணுவத்தால் சூச்சி கைது செய்யப்பட்டது தொடக்கம் உள்நாட்டில் அவர் மீதான ஆதரவு அதிகரித்தபோதும் ரொஹிங்கிய முஸ்லிம்கள் மீதான வன்முறையின்போது எதிர்வினையாற்றாதது தொடர்பில் அவர் மீது சர்வதேச அளவில் விமர்சனம் உள்ளது.

சிரியாவில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்

சிரியா மீது இஸ்ரேல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீசிய ரொக்கெட் குண்டுகள் தலைநகர் டமஸ்கஸின் தென் பகுதியில் விழுந்ததாக சிரிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது. ஈரானுடன் தொடர்புபட்ட சொத்துகளை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக உளவுத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

கோலன் குன்று பகுதியில் இருந்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றதோடு பெரும்பாலான ஏவுகணைகளை சுட்டுவீழ்த்த முடிந்ததாக சிரிய இராணுவம் வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைநகரின் புறநகர் பகுதி மீது ஒரு மாதத்திற்குள் இடம்பெறும் இரண்டாவது தாக்குதலாக இது உள்ளது.

இந்த செய்தி பற்றி கருத்து வெளியிடுவதை இஸ்ரேல் இராணுவம் மறுத்துள்ளது.

சிரியாவில் இஸ்ரேல் தனது இலக்குகளை கடந்த ஓர் ஆண்டில் விரிவுபடுத்தி உள்ளது. அங்கு ஈரான் பலம் பெற்றிருக்கும் ஈராக் எல்லையை ஒட்டிய தூர கிழக்கு பகுதியிலும் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனநாயக ஆர்வலர்கள் மீது பொலிஸ் குற்றச்சாட்டு பதிவு

ஹொங்கொங் பொலிஸார் ஜனநாயக ஆர்வலர்கள் 47 பேர் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்துள்ளனர்.

அதிகாரத்தைக் கீழறுக்க முயன்றதாக அவர்கள் மீது, குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஜனநாயக ஆர்வலர்கள் இன்று நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர்.

ஹொங்கொங்கில் உள்ள 50க்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் பொலிஸ் நிலையங்களில் தகவல் தெரிவிக்குமாறு நேற்று உத்தரவிடப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் சர்ச்சைக்குரிய தேசியப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த மாதம் பெரிய அளவில் நடத்தப்பட்ட சோதனையின்போது அவர்கள் கைது செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு ஜூலையில், ஹொங்கொங் சட்ட மன்றத்துக்கு, சட்ட விரோதமாய்த் தேர்தல் நடத்த முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஜனநாயக ஆதரவுக் குழுக்கள் போதுமான இடங்களில் வென்று அதன் மூலம் அரசாங்கத்தை முடக்கத் திட்டமிட்டதாகக் கூறப்படுகிறது.

2024 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட டிரம்ப் திட்டம்

புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் திட்டம் இல்லை என்று குறிப்பிட்டிருக்கும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அது குடியரசு கட்சியினரின் வாக்குகளை உடைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின் முதல் முறை பொது மேடையில் உரையாற்றிய போதே டிரம்ப் இவ்வாறு தெரிவித்தார். 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது பற்றியும் இதன்போது அவர் குறிப்பார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி, டிரம்பின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்து வருகிறார். அவரது 'அமெரிக்காவை முதன்மைப்படுத்தும் கொள்ளை அமெரிக்காவை கடைசி இடத்திற்கு கொண்டு சென்றிருக்கிறது' என்று குறிப்பிட்டிருந்தார்.

டிரம்ப் மீது பாராளுமன்றத்தில் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியுற்ற சில வாரங்களிலேயே அவர் இந்த உரையை நிகழ்த்தியுள்ளார்.

"நாம் ஆரம்பித்த இந்த சிறப்பான பயணத்தின் முடிவு வெகுதொலைவில் உள்ளது. புதிய கட்சியை ஆரம்பிப்பதில் விருப்பம் இல்லை. பைடன் நிர்வாகம் மோசமாக இருக்கப்போகிறது என்பது நமக்கு தெரியும். ஆனால், எந்த அளவு மோசமாக இருக்கப்போகிறது என்பதை நம்மால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. 2024 ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி படுதோல்வியை சந்திக்கும்" என்று அவர் குறிப்பிட்டார்.

டிரம்ப் குடியரசுக் கட்சியில் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தும் நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓர்லாண்டில் கன்சர்வேர்டிவ் அரசியல் செயற்பாட்டு மாநாட்டிலேயே அவர் உரையாற்றி இருந்தார்.

எனினும் டிரம்ப் மீதான பேஸ்புக் மற்றும் ட்விட்டர் உட்பட சமூக ஊடகங்களின் தடை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. அமெரிக்க பாராளுமன்றத்தில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற வன்முறையை துண்டியதாகவே டிரம்ப் மீது இந்தத் தடை கொண்டுவரப்பட்டது.

வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறியது தொடக்கம் புளோரிடாவில் இருக்கு தமது கொல்ப் விடுதியில் வசித்து வருகிறார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 மார்ச் 2 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

இன்றைய சுபதினம்

சார்வரி வருடம் புரட்டாதி 27

ராகுகாலம் : காலை : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: மரணசித்த யோகம்

நட்சத்திரம்: ரேவதி காலை 9.34

திதி: துவிதியை

தொழுகை நேரம்

01 முதல் 04 வரை

சுபஹ்	05.08
லுஹர்	12.24
அஸர்	03.42
மஃரிப்	06.22
இஷா	07.32

தவக்கால சிந்தனை

பகிர்தலில் மகிழ்வோம்

தவக்காலம் நமக்கு தரும் செய்திகளில் மிக முக்கியமான செய்தி பகிர்தலாகும். நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருப்பதை பகிர்ந்து வாழவேண்டும். இயேசு தன்னுடைய ஞானத்தை போதனைகள் வாயிலாகவும் தன்னுடைய திறமைகளை புதுமைகள் வாயிலாகவும் தன்னுடைய அன்பை சிலுவை மரத்தின் வாயிலாகவும் நம்மோடு பகிர்ந்து கொண்டார்.

நாம் நம்மிடம் இருப்பதை பகிர்வதன் மூலமாக மண்ணுலகிலும் விண்ணுலகிலும் நமக்கான இடத்தை உறுதி செய்கிறோம்.

ஒரு நாடு மிகப் பெரிய போரைச் சந்திக்கிறது. போருக்குப்பின் பாரிய வரட்சி ஏற்பட்ட நிலையில் அந்த நாட்டுப் பெண்களிடம் இருந்த நகையைத் தவிர வேறு எந்த செல்வமும் மிஞ்சவில்லை, இதைக் கண்ணுற்ற அரசன் எல்லாப் பெண்களுக்கும் ஒரு அறிவிப்பை விடுக்கின்றார்.

விருப்பமுடையவர்கள் உங்களுடைய எல்லா நகைகளையும் அரச கருவூலத்தில் ஒப்படைத்து நாட்டுக்கு உதவி செய்யுங்கள் என்பதே அந்த அறிவிப்பு.

சில பெண்கள் மட்டும் தங்களிடமிருந்த எல்லா நகைகளையும் நாட்டு வளர்ச்சிக்காக பகிர்ந்து கொள்கிறார்கள்.

காலம் கடந்தோடுகிறது. மிகவும் செழிப்பு மிக்க ஒரு தேசமாக அந்த நாடு உருவெடுக்கின்றது. அதன் பின்பும் கழுத்தில் கருப்பு சிலுவை அணிந்த பெண்கள் அதை தொடர்ந்து அணிகிறார்கள்.

ஏனென்றால் அந்த நாட்டு அரசிக்கு கொடுத்ததைவிட அதிக மதிப்பு மரியாதையை நாட்டு மக்கள் கழுத்தில் சிலுவை அணிந்த அந்த பெண்களுக்கு கொடுக்கிறார்கள்.

ஒரு கட்டத்தில் நகைகளை நாட்டு வளர்ச்சிக்காக பகிர்ந்து கொள்ளாத தாய்மார்களைப் பார்த்து கடிந்து கொள்ளத் தொடங்குகிறார்கள். அம்மா நீங்கள் மட்டும் உங்களுடைய நகைகளை நாட்டுவளர்ச்சிக்காகப் பகிர்ந்திருந்தால் இன்று நீங்களும் நாமும் நாட்டுமக்களால் மதிக்கப்பட்டிருப்போம் என்று சொல்கிறார்கள். திறமைகள் நமக்குள்ளும் செல்வம் பணப்பெட்டிக்குள்ளும் இருக்கும் போது அது அழகானதாக இருக்காது. மாறாக அவை பகிரப்படும்போது அழகுமிக்கதாக மாறுகிறது.

பகிர்தலின் மூலம் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் மதிப்புமிக்க நமக்கான இடத்தை உறுதி செய்வோம்.

அருட்பணி **அருண் ரெக்ஸ்...**

கைவிடப்பட்ட நகர அபிவிருத்தி திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு பிரதமர் அறிவுறுத்தல்

கடந்த அரசாங்க காலப்பகுதியில் கைவிடப்பட்ட நகர அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றை மீள ஆரம்பிப்பதற்கு நிதி மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அறிவுறுத்தியுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படவிருந்த மற்றும் இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பிரதமர் மதிப்பீடு செய்தார்.

பல அபிவிருத்தி திட்டங்கள் கடந்த அரசாங்கத்தின் ஐந்து ஆண்டு காலப்பகுதியில் கைவிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் பிரதமருக்கு சுட்டிக் காட்டினர். அவ்வாறு செயற்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ள திட்டங்களை மீள ஆரம்பிக்குமாறு பிரதமர் அறிவுறுத்தினார்.

நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக தூய்மைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அனைத்து திட்டங்களுக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஈட்டும் வருமானத்திற்கு மேலதிகமாக பொது திரைசேறியிலிருந்து தேவையான நிதியை ஒதுக்குமாறும் பிரதமர் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் யூ.டீ.ஹர்ஷான் தசில்வா, இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் எம்.ஆர். சொய்சா மற்றும் கொழும்பு மாநகர சபை ஆணையாளர் ரொஷானி திசாநாயக்க உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

தினேஷ் குணவர்தனவின்

72 வது பிறந்த தினம் இன்று

வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் 72 வது பிறந்த தினம் (02) இன்றாகும் .

அவர் நாட்டின் பழைய அரசியல் கட்சியாக விளங்கிய மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் ஆவார்.

குணவர்தன இலங்கையின் இடதுசாரி அரசியல் இயக்கத்தின் புகழ்பெற்ற அரசியல்வாதி ஆவார். ஒரு நேர்மையான மற்றும் தூய்மையான சிங்கள பௌத்தரான 06

விமானப்படை தினத்தை முன்னிட்டு

7757 விமானப்படை வீரர்கள் தரமுயத்தப்பட்டுள்ளனர்

ஸாதிக் ஷிஹான்

இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை விமானப் படையின் 7757 பேர் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக விமானப் படையின் பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

இவ்வாறு தரமுயர்த்தப்பட்டவர்களில்; 467 அதிகாரிகளும் 7,290 வீரர்களும் அடங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவு நாளான இன்றைய தினம் கட்டுநாயக்க விமானப் 06

விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளராக எம்.பீ.ஆர்.புஷ்பகுமாரவும் பத்திக் மற்றும் கைத்தறி ஆடை உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக பீ.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தியும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக்கடிதங்களை ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜெயசுந்தர வழங்குவதை படங்களில் காணலாம்.

ஏப்ரலில் உயர்தர முடிவு, ஜூனில் சாதாரண தர முடிவு வெளியாகும்

அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஏப்ரல் மாத முற்பகுதியில் கல்வி பொது தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளையும் ஜூன் மாதத்தில் சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடவும் எதிர்பார்த்துள்ளதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ . எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க உயர்தரத்தில் சித்தி பெற்றவர்கள் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக் கொள்வதில் தற்போது நடைமுறையில் உள்ள ஒன்றரை வருட காலத்தை முடிந்தளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் 06

லேக் ஹவுஸ் முகாமைத்துவ ஆசிரியர்

சமந்தவின் தந்தையின் இறுதி கிரியை இன்று

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ ஆசிரியர் (அரச தொடர்பு திணைக்களம்) சமந்த கருணாசேகரவின் தந்தையான குளியாபிட்டிய அஸ்வெந்துமவில் வசித்த ஓய்வு பெற்ற அதிபர் டீ.எம்.கருணாசேகர தனது 95வது வயதில் காலமானார்.

காலஞ்சென்ற ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் யு.எல். முதுமெனிக்கேயின் அன்பு கணவரான அவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார். தீகொட குமார, திஸ்ஸ கருணாசேகர, ஜயந்த கருணாசேகர, சமந்த கருணாசேகர மற்றும் அஜந்த கருணாசேகர ஆகியோரின் அன்புத் 06

இரண்டு வாரங்களுக்குள் 10 லட்சம் பேருக்கு தடுப்பூசி

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

லோரன்ஸ் செல்வநாயகம்

இரண்டு வாரங்களுக்குள் நாட்டில் 10 இலட்சம் பேருக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை வெற்றி கொண்ட மஹிந்த ராஜபக்ஷ கோட்டாபய ராஜபக்ச இணைந்த குழுவுக்கு கொரோனாவிலிருந்து நாட்டை மீட்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது பெரிதல்ல என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உலகில் 130 நாடுகள் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ள போது இலங்கைக்கு தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளமை அரசாங்கத்துக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர் இதுவரை எமக்கு 10லட்சம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன.

நாட்டில் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். எம்மை விட முன்னேற்றமடைந்த நாடுகளான நியூசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இன்னும் கூட தடுப்பூசியைப் 06

குறைந்த மாணவர்களுள்ள பாடசாலைகளை

மேம்படுத்துவதற்கு 4 மாதங்களில் திட்டம் தயாரிக்க வேண்டும்

அரசாங்க கணக்குகள் பற்றிய குழு அமைச்சுக்கு அறிவிப்பு

ஒப்பீட்டளவில் குறைந்த மாணவர்களை கொண்ட அரச பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 4 மாதங்களில் திட்டமொன்றை தயாரிக்குமாறு அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவித்தது. ஒப்பீட்டளவில் குறைந்தளவு மாணவர்களை கொண்ட அரச பாடசாலைகளின் செயல்திறனை ஆய்வு செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு பாராளுமன்றத்தில் கூடியது.

இந்த பாடசாலைகளில் காணப்படும் நீர் பிரச்சினைகள் உள்ளிட்ட கழிவறை பிரச்சினைகளை தீர்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டியதன் 06

பாரம்பரியம் நிகழ்ச்சியில்

நியூசிலாந்திலிருந்து மரீனா இல்யாஸ் ஷாபி

இன்று வெள்ளிக்கிழமை இரவு 8.15 அளவில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில் பேராதனை பல்கலைக்கழக பட்டதாரியும் விரிவுரையாளரும் தற்போது நியூசிலாந்தில் வசித்து வருபவருமான கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபி கலந்து சிறப்பிக்கிறார். 1994 ஆம் ஆண்டு மலேசியாவில் முதுமாணிப் பட்டம் பெற்ற இவர் 1980 களின் நடுப்பகுதியில் 06

மூத்த பத்திரிகையாளர்

கலாசூரி வீ.பீ.சிவப்பிரகாசம் காலமானார்



இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் கலாசூரி வீ.பீ.சிவப்பிரகாசம் நேற்றுமாலை ஐந்து மணியளவில் தனது பிறந்த ஊரான அக்கரைப்பற்றில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது எண்பத்தி ஐந்து.

1951ல் வீரகேசரி பத்திரிகையின் பிராந்திய நிருபராக தனது சேவையை ஆரம்பித்த இவர் 1956ம் ஆண்டில் 'ரேடியோ சிலோனில்' தட்டெழுத்தாளராக இணைந்து கொண்டார். இதனையடுத்து 1957ம் ஆண்டு ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தின் அக்கரைப்பற்று குறூப் நிருபராக இணைந்துகொண்ட இவர் சம காலத்தில் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் ஆரம்பகால நிருபராகவும் பணிபுரிந்துள்ளார். இதேவேளை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுஸ்தாபனம் ஆகியவைகளின் ஆரம்பகால நிருபராகவும் இறக்கும் வரை சேவையாற்றி வந்தார்.

அமரர் சிவப்பிரகாசம் ஊடகத்துறையில் எப்போதும் நடு நிலையை பேணும் ஒரு நிருபராக தன்னை அடையாளப் படுதிக்கொண்டமையாயால் எல்லா சமூகத் தினரும் விரும்பும் ஒரு நிருபராக மதிக்கப்பட்டார்.

அரச சேவையில் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக குறிப்பாக அம்பாறை கச்சேரியில் பணிபுரிந்த இவர் பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றார்.

ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் தலைவராக 06

புலிப்பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட

மக்களின் உரிமைகளை கண்டுகொள்ளாத தரப்பினர் இன்று விமர்சிப்பது கவலை

மர்லின் மரிக்கார்

மூன்று தசாப்த காலம் புலிப் பயங்கரவாதம் காரணமாகப் பாதிக்கப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் மனித உரிமைகள் குறித்து எவ்விதத்திலும் கவனம் செலுத்தாத சில சர்வதேச அமைப்புகள், இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் தவறான முடிவுகளைக் கொண்டிருப்பது கவலைக்குரிய விடயம் என்று மகாவலி வலயங்கள் சார்ந்த கால்வாய்கள் மற்றும் குடியிருப்புக்களின் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிறிபால கமலத் குறிப்பிட்டார்.

மகாவலி திட்டத்தின் டி வலயத்திற்கு உட்பட்ட மெதிரிகிரிய பிசோபுர, வெடிகச்சிய பிரதேசத்திலுள்ள பலோகொட்டுவ குளத்தின் புனரமைப்பு 06

பெற்றோர் ஆசிர்வாதத்துடன் O/L பரீட்சை எழுதும் சுனாமி பேபி அபிலாஸ்!

கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நேற்று க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகியது.

நேற்றைய தினம் மாணவர்கள் பெரும் உற்சாகத்துடன் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றியதை காண முடிந்தது.

உலகத்தினையே தன்பால் ஈர்த்த 'சுனாமி பேபி' எனப்படும் சுனாமியின் போது தெய்வாதீனமாக உயிர்த்தப்பிய ஜெயராஜா அபிலாசும் நேற்று க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட குருக்கள் மடத்தில் தற்போது வசித்து வரும் சுனாமி பேபி அபிலாஸ், செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றினார்.

நேற்று காலை தனது 06

unicef for every child 75

REQUEST FOR PROPOSAL (RFP)

Provision of Technical Support and Advisory Services to UNICEF Sri Lanka in the area of Public Finance Management

UNICEF Sri Lanka country office call for Request for proposal for Provision of Technical Support and Advisory Services to UNICEF Sri Lanka in the area of Public Finance Management.

The solicitation documents (RFP) together with the Terms of Reference (TOR) can be downloaded: http://bit.ly/rfp-pfm

The virtual Pre-bid meeting will be held at 3.30 p.m. on the 04th of March 2021. The deadline for the submission of the Request for Proposal is Friday the 18th March 2021 on or before 2.00 p.m. local time Colombo, Sri Lanka.

UNICEF reserves the right to accept or reject any bid. The procurement process will be governed by the rules and regulations of the UNICEF.

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் மாசி மாதம் 18ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 றஜப் பிறை 17

கொவிட் தொற்று வேளையிலும் அதிகரிக்கும் வீதி விபத்துகள்

இலங்கையில் கொவிட்19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் நிலவுகின்ற போதிலும் வீதி விபத்துக்களும் அதன் விளைவான மரணங்களும், பாதிப்புகளும் கூட அதிகரித்திருக்கின்றன. இதனை பொலிஸ் துறைப் பேச்சாளரான பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போது கொவிட்19 தொற்று பரவுதல் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தவென பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக இத்தொற்று இந்நாட்டில் பதிவாக ஆரம்பிக்க முன்னர் காணப்பட்டதை விடவும் மக்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றன. அப்படியிருந்தும் வீதி விபத்துகள் அதிகரித்திருக்கின்றன.

இந்நாட்டில் வீதி விபத்துகளையும் அதன் விளைவான மரணங்கள், காயங்களையும் கட்டுப்படுத்தும் நோக்கில் ஏற்கனவே வீதிப் போக்குவரத்து சட்டங்கள் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, தலைக்கவசம் அணியாது மோட்டார் பைசிக்கிள் ஓட்டுதல், போட்டி போட்டு வானங்களை செலுத்துதல், மது அருந்திய நிலையில் வாகனங்களை செலுத்துதல், வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறுதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுக்கு எதிராக கடும் சட்ட விதிமுறைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

அப்படியிருந்தும் வீதி விபத்துகள் அதிகரித்துள்ளன. அதுவும் கொவிட்19 தொற்று பரவும் அச்சுறுத்தல் நிலவும் காலப் பகுதியில் விபத்துகள் அதிகரித்திருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமாகும்.

இந்நாட்டில் ஏற்கனவே நாளொன்றுக்கு 06 08 என்றபடி காணப்பட்ட வீதி விபத்து மரணங்கள் கடந்த சில நாட்களாக தினமும் 8 10 வரை அதிகரித்திருப்பதாக பதிவுகள் தெரிவிக்கின்றன. அதிலும் நேற்று முன்தினம் 12 பேர் வீதிவிபத்துகள் காரணமாக உயிரிழந்திருக்கின்றனர். அவர்களில் நால்வர் ஏற்கனவே வீதி விபத்துகளுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்திருக்கின்றனர்.

இவ்வாறு வீதி விபத்துகளும் அதன் விளைவான மரணங்களும் அதிகரிப்பது வளர்முக நாடொன்றுக்கு ஆரோக்கியமானதல்ல. பொலிஸ் ஊடகத் துறைப் பேச்சாளர் அஜித் ரோஹனவின் கருத்துப்படி, வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகளின் கவனயீனம் காரணமாகவே வாகன விபத்துகள் அதிகரித்திருக்கின்றன.

வாகன சாரதிகளும் பாதசாரிகளும் வீதிகளைப் பயன்படுத்தும் போது கவனயீனத்தை முற்றிலும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் வீதி விபத்துக்களால் ஏற்படும் காயங்களும், மரணங்களும் அதிக பாதிப்புகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தக் கூடியவை. குறிப்பாக இந்நாட்டில் இடம்பெறும் வாகன வீதி விபத்துக்களில் மோட்டார் பைசிக்கிள் விபத்துகள் தான் அதிகம் இடம்பெறுகின்றன எனப் பதிவுகள் தெரிவிக்கின்றன. மோட்டார் பைசிக்கிள் சாரதிகளில் பலர் தலைக்கவசம் அணிவதை ஒரு பொருட்டாகக் கருவதாக இல்லை. தலைக்கவசம் என்பதை சட்டத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான ஒரு சாதனமாகவே பார்க்கின்றனர். வீதிப் போக்குவரத்து பொலிஸாருக்காக தலைக்கவசம் அணிபவர்கள்தான் மக்கள் மத்தியில் அதிகமுள்ளனர். இது முற்றிலும் பிழையான நடவடிக்கையாகும்.

தலைக்கவசம் அணிதல் சட்டமாக்கப்பட்டுள்ள போதிலும் அது ஒவ்வொருவரதும் ஆரோக்கிய நலன்களுக்கு முன்னுரிமை அளித்திருக்கும் ஏற்பாடாகும். ஏனெனில் ஏதாவது வீதி விபத்துக்கு முகம் கொடுக்கும் போது முதலில் தலையும் முகமும்தான் அதன் தாக்கத்தையும் பாதிப்பையும் எதிர்கொள்ளும். அவற்றை மருத்துவ சிகிச்சைகள் மூலம் இலகுவாகக் குணப்படுத்த முடியாது. முகமும், தலையும் அதிக எலும்புகளையும் நரம்புகளையும் மாத்திரமல்லாமல் மனிதனுக்கு அத்தியாவசியமான பல உள்ளுறுப்புகளையும் கொண்டிருக்கின்றன. அதனால் இவற்றைப் பாதுகாப்பதற்காகவே தலைக்கவசம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம், மோட்டார் பைசிக்கிள் உள்ளிட்ட எந்த வாகனமானாலும் சாரதிகளும் பாதசாரிகளும் வீதிப் போக்குவரத்தின் போது பொறுப்புடனும் முன்னவதானத்துடனும் செயற்பட தவறக் கூடாது. ஏற்கனவே பலப்படுத்தப்பட்டுள்ள வீதிப் போக்குவரத்து சட்டங்களைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

தற்போதைய சூழலில் வீதிப் போக்குவரத்தின் போது பொறுப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொள்வதன் அவசியம் குறித்து சாரதிகள் மற்றும் பாதசாரிகள் மத்தியில் பரந்த அடிப்படையிலான விழிப்புணர்வை ஏற்படுத்துவது பயன்மிக்கதாக இருக்கும். குறிப்பாக வீதிப்போக்குவரத்து சட்டங்களின் சிறப்பு, முக்கியத்துவம், அச்சட்டங்களை மீறிச் செயற்படும் போது ஏற்படும் பாதிப்புக்கள், தாக்கங்கள், அவற்றுக்கு சிகிச்சையளிக்கவென ஏற்படக் கூடிய செலவுகள், சிகிச்சை அளித்தும் விபத்துக்கு முன்னரான நிலைக்கு கொண்டு வர முடியாத பாதிப்புக்கள், விபத்தினால் உயிரிழப்பு ஏற்படுமாயின் குடும்பத்திற்கும் உறவினர்களுக்கும் ஏற்படக் கூடிய தாக்கங்கள், பாதிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக அறிவூட்டுவது அவசியம். இவை குறித்து வீதிப் போக்குவரத்து பொலிஸார் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரும் சமூக ஆர்வலர்களும் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் வீதி விபத்துகளை குறைத்துக் கொள்ள வழிவகுக்க முடியும்.

editor.tkn@lakehouse.lk

நல்லாட்சி அரசாங்கத்தினால் கைவிடப்பட்ட அறிவியல்நகர் பல்கலைக்கழக அபிவிருத்தி

கிளிநொச்சியின் நன்மை கருதி திட்டத்தை மீள ஆரம்பிக்குமாறு இராஜாங்க அமைச்சர் அஜிட் நிவாட் கப்ராலிடம் கோரிக்கை!

கடந்த 201314ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்டு, ஆட்சி மாற்றம் காரணமாகக் கைவிடப்பட்டு விட்ட கிளிநொச்சி அறிவியல்நகர் பல்கலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று, நிதி மூலதன சந்தை அரசதொழில் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளருமான கோ.றுஷாங்கன் இந்தக் கோரிக்கையை அவரிடம் விடுத்தார்.

கடந்த சனிக்கிழமை(27022021) யாழ் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்து பேரவை உறுப்பினர்களுடன் உரையாடிய போதே அஜித் கப்ராலிடம் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

568 ஏக்கர் பரந்த நிலப்பரப்பில் அமைந்துள்ள கிளிநொச்சி அறிவியல்நகர் யாழ் பல்கலைக்கழக வளாகத்துக்குரிய காணியை 2013ம் ஆண்டு அன்றைய ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடன் பேசி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்கலைக்கழகத்துக்குப் பெற்றுக் கொடுத்தார்.

இதன் மூலம் 1978ம் ஆண்டில் பேராசிரியர் துரைராஜா முன்மொழிந்த யாழ் பல்கலைக்கழகத்தின் 30 வருட கனவாக இருந்து வந்த பொறியியல் பீடத்தை அமைக்கும் வாய்ப்பு யாழ் பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்ததுடன், 30 வருடங்களுக்கு மேலாக நிரந்தர இடமில்லாமல் சிரமப்பட்டு வந்த விவசாய பீடமும் அறிவியல்நகரில் அமைந்தது.

தற்போது அங்கு புதிதாக தொழில்நுட்பபீடமும் ஆரம்பிக்கப்பட்டு 2500க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். எனினும், அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகமும், அதனைச் சுற்றியுள்ள பிரதேசமும் இன்னமும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்து வருகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டே பல்கலைக்கழகத்துக்கும், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் 2014ம் ஆண்டு அறிவியல்நகர் பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் வகுக்கப்பட்டு அதை நடைமுறைப்படுத்துவதற்கு 2300 மில்லியன் ரூபா நிதியுதவியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. துரதிர்ஷ்டவசமாக, 2015ம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக இந்தத் திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டது.

இப்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக கொண்ட புதிய ஆட்சி அமைக்கப்பட்டுள்ள நிலையில், அறிவியல்நகர் பல்கலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று பேரவை உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு மேலதிக இணைப்பாளருமான கோ.றுஷாங்கன் இராஜாங்க அமைச்சர் அஜித் கப்ராலிடம் கோரிக்கை முன்வைத்தார்.

இலங்கையின் 25 மாவட்டங்களில் வறுமையில் முதலிடத்தில் கிளிநொச்சி இருந்து வரும் நிலையில், இந்தத் திட்டத்தின் மூலம் மாவட்டத்தின் வறுமையைப் போக்கவும் பங்களிக்க முடியும் என்றும் இதன் போது றுஷாங்கன் சுட்டிக் காட்டினார்.

மேலும், அபிவிருத்திக்கான முதலீடுகளின் போது, வறுமையில் முதலிடங்களிலிருக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் இங்கு கேட்டுக் கொண்ட றுஷாங்கன், அப்போதுதான் உண்மையான சமத்துவம் நிலைநாட்டப்பட்டு எல்லா இடங்களிலும் சமநிலையான அபிவிருத்தி ஏற்படுத்தப்படும் என்றும் சுட்டிக் காட்டினார்.

கோ.றுஷாங்கன்...
(அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர்)

சர்வதேச போட்டியில் முதலிடம் பெற்ற கல்முனை மாணவிக்கு ஏ.ஆர்.மன்சூர் ஞாபகார்த்த விருது

இந்தோனேஷிய ஜாவா பல்கலைக்கழகத்தில் சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சிப் போட்டியில் தங்கம் வென்று, இலங்கைக்கு முதலிடம் பெற்றுக் கொடுத்த கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவி பாத்திமா ஷைரீன், 'சர்வதேச சாதனைக்கான ஏ.ஆர்.மன்சூர் ஞாபகார்த்த விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் சட்டத்தரணியாக பணியாற்றி வருகின்ற முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் புதல்வியான மரியம் நளீமுடீனை ஸ்தாபகத் தலைவியாகக் கொண்டு இயங்கி வருகின்ற மன்சூர் பவுண்டேஷன் செயற்குழுவினருக்கு அவர் வழங்கிய ஆலோசனை, வழிகாட்டலில் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பவுண்டேஷன் சார்பில் கல்முனை மாநகர பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்பு செயலாளருமான ரஹ்மத் மன்சூர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இம்மாணவியின் இல்லம் சென்று மேற்படி விருதையும் 50 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் கையளித்துள்ளார்.

இதன் போது பாத்திமா ஷைரின் தனது பல்வேறுபட்ட திறமைகளுக்காக பெற்றிருக்கின்ற நூற்றுக்கு மேற்பட்ட வெற்றிக் கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை பார்வையிட்ட கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், அம்மாணவியை பாராட்டினார்.

"சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சிப் போட்டியில் சுமார் 25 நாடுகளில் இருந்து ஏறத்தாழ 400 மாணவர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில், எமது மண்ணைச் சேர்ந்த இம்மாணவி, புவியியல் தொடர்பான போட்டியில் பங்குபற்றி, தங்கப் பதக்கத்தை வென்று, நமது நாட்டுக்கும் பிரதேசத்திற்கும் புகழைத் தேடித் தந்திருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்" எனவும் ரஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

"கல்முனை தொகுதியில் சேவையின் சிகரமாகத் திகழ்ந்த எமது தந்தை வழியில் எமது பிரதேசத்தில் கல்விக்காக கரம் கொடுக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கில் நிறுவப்பட்டுள்ள ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேசன் ஊடாக அதன் தலைவியும் எனது சகோதரியுமான சட்டத்தரணி மரியம் நளீமுடீன், கடல் கடந்திருந்தாலும் இம்மண்ணின் சாதனையாளர்களை கௌரவிக்கும் உன்னத பணியை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார். அதன் ஓர் அங்கமாகவே சர்வதேச சாதனை மாணவி இனாம் மௌலானா பாத்திமா ஷைரீன், மன்சூர் பவுண்டேஷன் நிறுவனத்தினால் விருதும் பண முடிப்பும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

இம்மாணவியின் திறமைகளை அவரது வீடு சென்று, நேரடியாக கண்டறிந்துள்ளோம். அவரது எதிர்காலத் திட்டங்கள், குறிக்கோள்கள் குறித்தும் கேட்டறிந்துள்ளோம்.

அவற்றுக்கு மன்சூர் பவுண்டேஷன் என்றும் பக்கத்துணையாக இருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்று பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் மேலும் குறிப்பிட்டார்.சர்வதேச சாதனை மாணவி பாத்திமா ஷைரீனின் ஆற்றல், திறமைகளுக்காக அவரை கௌரவிக்கு முகமாக கல்முனை மாநகர சபையில் பாராட்டுப் பிரேரணை நிறைவேற்றப்பட்டமையும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி சமூகத்தினால் 'துர் ரத்துல் மஹ்மூத்' (விலைமதிப்பற்ற முத்து) எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சின் 2021ஆம் ஆண்டுக்கான ஆராய்ச்சி ஊக்குவிப்புத் திட்டத்திற்கு இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(கல்முனை விசேட நிருபர்)

முறையற்ற வெளிநாட்டு பயணத்தை தவிர்க்க மட்டக்களப்பில் செயலமர்வு

சட்டவிரோதமான முறையில் முறையற்ற வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்ப்பதற்கான விழிப்பூட்டல்களை பொதுமக்களுக்கு வழங்கும் வகையில், மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வொன்று காணிப் பிரிவுக்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

மாவட்ட செயலக விளையாட்டு அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு அனுசரணை வழங்கியுள்ளது. விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்றுவிப்பாளர்களுக்கான செயலமர்வினூடாக பிரதேசத்திலுள்ள புலம்பெயரும் இளைஞர், யுவதிகளுக்கு விழிப்பூட்டலை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

'புலம்பெயர்தல் பாதுகாப்பாக இருப்பதற்கே' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இச்செயலமர்வில் சட்டவிரோதமான மற்றும் முறையற்ற வெளிநாட்டுப் பயனத்தினால் ஏற்படும் ஆபத்துகள் மற்றும் விபரீதங்கள் தெளிவுபடுத்தப்பட்டு முறையான வெளிநாட்டுப் பயணங்களுக்கான வழிமுறைகள் எடுத்துக் காட்டப்பட்டன. இச்செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ. ஈஸ்வரன், புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் இணைப்பாளர் திருமதி ஆர். மயூரன் மேரி, மட்டக்களப்பு பிரதேச பொதுச் சகாதார பரிசோதகர் ஏ. ராஜ்குமார், விளையாட்டு உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

யூ.எல்.எம்.ஹரீஸ்
(வாழைச்சேனை விசேட நிருபர்)

பிரதமர் மோடிக்கு கொரோனா தடுப்பூசி

● எதிரணியின் விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி!

உலகளவில் 25.5 இலட்சத்தை நெருங்கும் உயிரிழப்புகள்

கொவிட் இல்லாத மாநிலமாக அருணாச்சல் பிரதேசம்

இந்தியாவின் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று கொரோனாவுக்கான தடுப்பூசி போட்டுக் கொண்டார். இந்தியாவில் கொரோனா தடுப்பூசி போடும் பணி நாடு முழுவதும் கடந்த ஜனவரி 16ம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

இதில், முதல் கட்டமாக மருத்துவர்கள், தாதிகள், சுகாதார பணியாளர்கள் உள்ளிட்ட 3 கோடி முன்களப் பணியாளர்களுக்கு தடுப்பூசி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் 'கொவிஷீல்ட்' தடுப்பு மருந்தும், இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட பாரத் பயோடெக் நிறுவனத்தின் 'கொவோக்சின்' தடுப்பு மருந்தும் பயன்படுத்தப்படுகின்றன.

இதையடுத்து இந்தியா முழுவதும் முதியவர்கள் மற்றும் 45 வயதுக்கு மேற்பட்ட இணை நோயுள்ளவர்களுக்கு நேற்று முதல் கொரோனா தடுப்பூசி போடப்படுகின்றது.

இதனிடையே இந்த தடுப்பூசி போட்டுக் கொள்பவர்களுக்கு பின்விளைவுகள் ஏற்படுவதாக பரவலாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால், இந்த தடுப்பூசியை முதலில் பிரதமர் மோடி போட்டுக் கொள்ள வேண்டும் என்று பல்வேறு எதிர்க் கட்சிகள் கூறி வந்தன. இந்நிலையில் பிரதமர் மோடி தானும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டதாக டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்வீட் பதிவில் "டெல்லி எய்ம்ஸில் கொரோனா தடுப்பூசியின் முதல் 'டோஸை' எடுத்தேன். கொரோனாவுக்கு எதிரான உலகளாவிய போராட்டத்தை வலுப்படுத்த எங்கள் மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் விரைவான நேரத்தில் எவ்வாறு பணியாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மூத்த குடிமக்கள் உள்ளிட்ட தடுப்பூசி எடுக்க தகுதியுள்ள அனைவருக்கும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள அச்சப்பட வேண்டாம். ஒன்றாக, இந்தியாவை கொரோனாவில் இருந்து விடுவிப்போம்" என குறிப்பிட்டுள்ளார்.

புதுச்சேரியைச் சேர்ந்த மருத்துவ தாதி நிவேதா, பிரதமர் மோடிக்கு 'கொவாக்சின்' தடுப்பூசி ஏற்றினார். இதனைத் தொடர்ந்து மாநில முதல்வர்களும் தடுப்பூசி போட்டுக் கொள்ள இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தனியார் மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தி தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தகுதியான அனைவரும் கொரோனா தடுப்பூசி எடுத்துக் கொள்ள முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் நேற்று முதல் அரசு மருத்துவமனைகளில் இலவசமாகவும், தனியார் மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தியும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது. தனியார் மருத்துவமனைகளில் கொரோனா தடுப்பூசிக்கு 250 ரூபா கட்டணமாக வசூலித்துக் கொள்ளலாம் என தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி போட்டுக் கொள்ள விரும்புவர்கள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். 45 வயதுக்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்கள் மருத்துவச் சான்றிதழைப் பெற்றுத் தர வேண்டும். 60 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசி போட்டுக் கொள்ள ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்டவற்றில் ஏதேனும் ஒன்றின் நகலை தர வேண்டும் எனவும் சுகாதாரத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுஇவ்விதமிருக்க வடகிழக்கு மாநிலமான அருணாச்சல் பிரதேசத்தில் முதல் மருத்துவமனையிலிருந்த 3 கொரோனா நோயாளிகள் குணமடைந்துள்ளனர். நேற்றுக் காலை வரையான 24 மணி நேரத்தில் யாருக்கும் தொற்று கண்டறியப்படவில்லை. இதனால் இந்தியாவின் முதல் கொரோனா இல்லாத மாநிலமானது அருணாச்சல பிரதேசம்.

கடந்த 2020 ஜனவரியில் இந்தியாவில் கொரோனா தொற்று முதலில் கண்டறியப்பட்டது. பின்னர் அது பல்கிப் பெருகி மார்ச் இறுதியில் ஊரடங்கு போடும் நிலைக்கு இட்டுச் சென்றது. இன்னமும் மஹாராஷ்டிரா, கேரளா, பஞ்சாப் போன்ற பல மாநிலங்களில் தொற்று வீதம் கூடுவதும், குறைவதுமாக இருக்கிறது.

தடுப்பூசிகள் ஜனவரி முதல் செயல்பாட்டில் உள்ளன. 2ம் கட்ட தடுப்பூசி இயக்கத்தில் அதிகளவு தனியார் மருத்துவமனைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அருணாச்சல் பிரதேசத்தில் நேற்றுக் காலை வரையான 24 மணி நேரத்தில் எவருக்கும் தொற்று கண்டறியப்படவில்லை. கொரோனா தொற்றால் சிகிச்சை பெற்று வந்த 3 பேரும் குணமடைந்துள்ளனர்.

அங்கு இதுவரை 16,836 பேருக்கு தொற்று ஏற்பட்டது. 56 பேர் இறந்தார்கள். 16,780 பேர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர். சனிக்கிழமை 312 பேரின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. அதில் யாருக்கும் பாதிப்பு இல்லை என்பது உறுதியானது. இதுவரை அம்மாநிலத்தில் 32,325 சுகாதார மற்றும் முன்கள பணியாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 25.42 இலட்சத்தைத் தாண்டியது. பல்வேறு நாடுகளை சேர்ந்த 2,542,556 பேர் கொரோனா வைரசால் உயிரிழந்துள்ளனர்.

● இந்தியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட்-19 தடுப்பு மருந்து வழங்கும் பணி ஆரம்பம்

உலகம் முழுவதும் கொரோனாவால் 114,674,343 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 90,228,750 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் 90,296 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சீனாவின் உகான் நகரில் முதன் முதலில் தோன்றிய கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது.

வைரஸ் தொற்று பரவி ஏறத்தாழ ஒரு வருடங்கள் கடந்து விட்டாலும் இதன் வீரியம் இன்னும் குறைந்தபாடில்லை.

இந்நிலையில் தற்போதைய நிலை வரப்படி, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 11.46 கோடியைத் தாண்டி உள்ளது. இதன்படி உலகம் முழுவதும் தற்போது 114,674,343 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 90,228,750 பேர் குணமடைந்துள்ளனர்.

மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 25 இலட்சத்து 42 ஆயிரத்து 556 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா தொற்றுக்கு தற்போது 21,903,037 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மலையக மக்களின் விடிவுக்காக இறுதி வரை உழைத்த பெருமகன்



வடக்கில் பிறந்து, மலையக மண்ணை தாயகமாக்கி மக்கள் அவலம் துடைக்க ஓயாமல் பாடுபட்ட அமரர் அருட்தந்தை சந்தியாபிள்ளை கீதபொன்கலன் அடிகளாரின் 5 ஆம் வருட நினைவு

பெருந்தோட்ட வாழ் தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு, சிந்திக்கக் கூடிய கருத்துக்களை 70களில் முன்னெடுத்தவர் அமரர் அருட்தந்தை சந்தியாபிள்ளை கீதபொன்கலன் அடிகளார். இவ்வுலக வாழ்வில் தனது 69 ஆம் ஆண்டு கால பயணத்தில் மக்கள் பணிகளில் ஈடுபட்டவர் அவர். 40 வருடங்களுக்கு மேலாக சேவையில் ஈடுபட்டு வந்தவர். ஆனால் இந்த பணிகள் சுலபமானதல்ல, கஷ்டமானதும் சவால்கள் நிறைந்ததுமாகும்.

அடிகளார் 1946 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24ம் திகதி யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை சுருவில் கிராமத்தில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை சுருவில் ரோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பற்றிக் கல்லூரியிலும், வங்காலை கல்லூரியிலும் கற்றவராவார். அத்துடன் வங்காலை பாடசாலை, புனித பற்றிக் கல்லூரி யாழ்ப்பாணம், புனித அந்தோனியார் கல்லூரி கட்டுகஸ்தொட்டை ஆகியவற்றில் ஆசிரியராக பணிபுரிந்து லண்டன் பரீட்சையும் எழுதியவராவார்.

யாழ்ப்பாணம் புனித மடுத்தினார் கனிஷ்ட குருமடத்தில் சேர்ந்த இவர், 1964ம் ஆண்டு இலங்கை மாதா தேசிய குருமடம் (அம்பிட்டிய கண்டி) குருத்துவ மாணவனாக இறையியல், தத்துவ சாஸ்திரம், ஏழு வருட கால பயிற்சியை பெறுவதற்காக இணைந்து கொண்டார். 1972ஆம் ஆண்டளவில் அருட்தந்தை கண்டி மறைமாவட்டத்துடன் இணைந்தார். இக்காலகட்டத்தில் கண்டி மறைமாவட்டத்திலிருந்து ஊவா மறைமாவட்டம் ஒரு தனிபுதிய மறைமாவட்டமாகப் பிரிக்கப்பட்டது. ஒடுக்கப்பட்டு வாழ்வுக்கு போராடும் மக்களது குரலாக அமரர் அருட்தந்தை கீதபொன்கலன் அவர்கள் பதுளை மறைமாவட்டத்துடன் இணைந்தார்.

1974ம் ஆண்டு செப்டெம்பர் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அமரர் அருட்தந்தை, 1977ஆம் ஆண்டு முதல் பல காலகட்டங்களில் இனவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். 1983ம் ஆண்டு இனவன்செயல்களால் அடிகளாரின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டதுடன் மலையக மக்கள் மத்தியில் பல வருட காலமாக பணிகளில் ஈடுபட்டு வந்த நிலையங்கள், அமைப்புக்கள், குழுக்கள் ஆகியவற்றின் சேவைகளுக்கும் தடைப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் உஸ்கொட் நிலையமும் தீயிடப்பட்டது.

சில ஆண்டுகள் வெளிநாடுகளில் தங்கியிருந்ததோடு பெல்ஜியம் லுவோன் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பட்டப்படிப்பு மேற்கொண்டு பட்டதாரியானார். ஐரோப்பா, இந்தியா போன்ற நாடுகளில் தஞ்சமடைந்த மக்களை கண்டு அவர்களுக்கும் தனது சேவையைத் தொடர்ந்தார். ஐரோப்பா சென்ற போது அங்கு வாழ்ந்த 7ம் திகதி ஆயர் லீயோ நாணயக்கார அவர்களால் குரு நிலைக்கு உயர்த்பட்டு பின்னர், பதுளை மறைமாவட்டத்திற்கு பங்குத் தந்தையாக நியமனம் பெற்றார்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆன்மிகத்தினூடாக சமூகப் பணிகளையும் ஆற்றுவதற்காக சில நிலையங்களும் அமைப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டன. புனித பீட் உஸ்கொட் இயக்குனராகவும் அவர் விளங்கியதோடு கல்வி, பொருளாதாரம், தொழிற்பயிற்சிகள், இளைஞர்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோருக்கு அறிவூட்டல் பயற்சிகள் நடத்துவதில் பாடுபட்டார். கூட்டுறவு சங்கங்களையும் ஆரம்பித்து அம்மக்கள் உயர்வடைவதற்கு ஊக்கமளித்தார்.

1980 ஆண்டு காலப்பகுதியில் 'தொழிலாளர் முன்னேற்றக் கழகம்' எனும் மாற்றுத் தொழிற்சங்க அமைப்பை உருவாக்கி மக்களுக்கான சேவைகளை மேற்கொண்டார்.

தொழிலாளர்களின் விடிவுக்காக இலங்கை அகதிகளை பற்றி ஆராய்ந்து ஆங்கில நூலை வெளியிட்டார்.

அடிகளார் இந்தியாவில் தங்கியிருந்த போது சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை கருப்பொருளாகக் கொண்டு ஆய்வு நூலையும், மலையகத்தை ஆட்டிப் படைக்கும் பிரச்சினைகள் பற்றி மூன்று சிற்றேடுகளை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவில் தமிழ் தகவல் தொடர்பு இணைப்பு மத்திய நிலையம், இலங்கை அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் அமைப்பகம் நிலையம் ஒன்றினை ஏற்படுத்தியதோடு 'சிலோன் ருடே' பத்திரிகை ஆசிரியராகவும் விளங்கினார்.

மீண்டும் இலங்கை வந்த அருட்தந்தை மலையக பகுதியை தமது பணியிடமாக்கி, 1990ம் ஆண்டு லியோ மார்கா ஆசிரமத்தை ஆரம்பித்து மக்கள் பணிக்கு அடித்தளமிட்டார்.

மலையக பெருந்தோட்ட மக்களின் விடுதலைக்கு கல்வியே ஒரே வழி என்ற நோக்கோடு அரசியல், சமூகம், கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், சமயம், கலை, கலாசார முன்னேற்றத்திற்காக பல வழிவகைகளையும், விழிப்புணர்வு திட்டங்களையும் உருவாக்கினார். மலையக சிறுவர்கள் சிறுவயதிலேயே ஆரம்பக் கல்வியைத் தொடர முன்பள்ளி கல்விமுறையைத் தோட்டங்களில் அமுல்படுத்தினார். சிறுவர்களுக்குச் சத்துணவு வழங்கியமை, அங்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்களையும் நியமித்து அவர்களுக்குப் பயிற்சி முதலியவற்றையும் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.மலையக மாணவர்களுக்கான தொழில்நுட்ப கல்விப் பயிற்சி என பல்வேறு செயற்றிட்டங்களையும் அறிமுகப்படுத்தியவர். தோட்ட இளைஞர், யுவதிகள் பலருக்கு சுயதொழில் வாய்ப்புகளையும்ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்.

அந்த காலகட்டத்தில் ஊவா மாகாண பெருந்தோட்ட பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவிலிருந்தது. இளைஞர் யுவதிகளை ஆசிரிய சேவைக்கு உள்வாங்கச் செய்தார். அவர்களுக்கான ஆசிரியர் பயிற்சிகளை வழங்கி அரசின் அங்கீகாரத்துடன் தொண்டர் ஆசிரியர் என்ற வகையில் நியமனங்களையும் வழங்கியிருந்தார்.

மலையக பெண்கள் வஞ்சிக்கப்படுவதையும், குடும்பக் கட்டுப்பாடு என்ற போர்வையில் மலையகத்தில் தொடரும் கலாசாரத்தை உலகுக்கு எடுத்துக் காட்டியதோடு, பெண்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக பெண்கள் முன்னேற்ற அமைப்பினையும் ஆரம்பித்து வைத்தார். அம்மக்களுக்கு 40 பேர்ச் காணி வழங்கப்படல் வேண்டும் என ஆணித்தரமாக குறிப்பிட்டுள்ளார். மலையக பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி தயாரிக்கப்பட்ட 10 ஆண்டுத் திட்டத் தயாரிப்புக்களின் போதும், 5 ஐந்து ஆண்டு திட்டத் தயாரிப்புகளின் போதும் தனது கருத்துகள் மூலம் பங்களிப்பை செய்தவர். மலையக பெருந்தோட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஊவா சமூக வானொலி நிகழ்ச்சிகளிலும் தொலைக்காட்சி இணையத்தளங்களிலும் நேர்காணல் செய்ததோடு நிகழ்ச்சி உரைகளையும் நிகழ்த்தினார்.

உஸ்கொட் நிலையத்தில் பணியாற்றி வந்த காலத்தில் 'உதயம்' என்ற பெயரில் விழிப்புணர்வுக்காக ஓர் இலக்கிய சஞ்சிகை ஆரம்பிக்கப்பட காரணமாக இருந்தார். மேலும் அடிகளாரே இச் சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

அனுபவ அறிவோடு எழுத்தாற்றல் மிக்க அமரர் அருட்தந்தை பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகளை பத்திரிகைகளிலும், சஞ்சிகையிலும் வெளியிட்டு அவல நிலையை உலகறியச் செய்தவர். மலையக தேசியம் குறித்த தெளிவான சிந்தனை கொண்டிருந்த அமரர் அருட்தந்தை கீத பொன்கலன் இச்சமூகம் சார்ந்த 23 இற்கு மேற்பட்ட நூல்களை தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டமை விஷேடமாகும்.

'இந்திய வம்சாவளித் தமிழரும் இலங்கை அரசியலும்' என்ற அவரது நூல் 1505 ஆம் வருடம் முதல் 1994 வருடம் வரை ஆழமான ஆய்வுகளை நடத்தி எழுதப்பட்ட நூல் ஆகும். லியோ மார்கா ஆசிரமத்தில் நூலகமொன்றை நிறுவினார். மலையக வரலாற்றில் தடம் பதித்த மிகமுக்கிய ஒருவரான அமரர் நடேச ஐயர் அவர்களின் நினைவாக இந்நூல் நிலையம் அமைந்தது.

அருட்தந்தை தேசிய மட்டத்தில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்திலும் நடைபெற்ற அமர்வுகள், மகாநாடு, பயிற்சிப் பட்டறைகள் மற்றும் ஜெனீவா மனித உரிமை செயலகத்திலும் சர்வதேச ரீதியாக மக்கள் பிரதிநிதியாக பங்குபற்றி உரிமைக் குரலாக திகழ்ந்தார். இலங்கை, மலேசியாக, கென்யா போன்ற நாடுகளில் தோட்டத் தொழில்துறை சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டார். மலையகப் பெருந்தோட்ட மக்கள் தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், உறுதிப் பத்திரத்தினுடனான காணி, வீட்டுரிமை வழங்கப்பட வேண்டுமென்று அவர் எப்போதும் வலியுறுத்தினார்.

'உலகமயமாக்கலின் விளைவாக இலங்கை தோட்டத்தொழில்துறை' என்ற ஆய்வு நூலை எழுதி வெளியிட்டார். உலகில் தேயிலை உற்பத்தி செய்கின்ற அனைத்து நாடுகளினதும் உழைப்பாளிகள், சமூகங்கள் சார்ந்த குழுவினர்களையும், தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைக்கச் செய்ததில் அமரர் அருட்தந்தை கீத பொன்கலன் அவர்களும் மிக முக்கியமானவராவார்.

மக்கள் மத்தியில் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அமைப்புகளின் ஒருங்கிணைப்பு பணிகளுக்கு வழிகாட்டியாக முழு ஒத்துழைப்பையும் வழங்கியவர். சமூகத்திலுள்ள அனைத்து இன மக்கள் மத்தியிலும் இனம், மதம், அரசியல், தொழிற்சங்க வேறுபாடின்றி செயற்பட்டவர். எல்லாச் சமயங்களைச் சார்ந்தவர்களுக்கும் அமரர் அருட்தந்தை ஒரு சமாதானத் தூதுவராகத் திகழ்ந்தார்.

அடிகளாரின் சேவைகளைப் பாராட்டி முதுமாணி, தேசகீர்த்தி, தேசக்தி, சாமசிறி, மக்கள் பணியாளன் போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டன. தான் பிறந்த மண் தாண்டி வந்து மலையக மண்ணை தாயகமாக்கி, மலையக வரலாற்றில் மக்கள் பணியாளராக தடம் பதித்த பெருமகன் அவர். 29.02.2016 இல் திருகோணமலை நகரசபை அருகிலுள்ள கடலில் நீராடிய போது அவர் அகால மரணமானார்.

மலையக பெருந்தோட்ட சமுதாயம் என்றென்றும் அமரர் அருட்தந்தையை நன்றியுடன் நினைவில் வைத்திருக்குமென்பது உறுதி.

பெனடிக்ட் குரூஸ்...

மேம்படுத்துவதற்கு 4...

(03ஆம் பக்கத் தொடர்)

அவசியம் குழுவில் வெளிப்பட்டது. பாடசாலைகள் தொடர்பில் முறையான ஒருங்கிணைப்பு இன்மை காரணமாக வள ஏற்றத்தாழ்வு இருப்பதாக குழு தெரிவித்தது.

மாணவர்கள் தொகை 200 ஐ விட குறைந்த 5,161 பாடசாலைகள் இந்நாட்டில் உள்ளதாகவும், அவ்வாறான பல்வேறு பாடசாலைகளின் தரம் தொடர்பில் பல சிக்கல்கள் எழுந்துள்ளதாகவும், அது தொடர்பில் கண்டறியவேண்டும் எனவும், அதற்கான வளவாளர்களை தொண்டர் அடிப்படையில் இணைத்துக் கொள்ளுமாறும் குழு கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவுக்கு அறிவித்தது.

பாடசாலைக் கட்டமைப்பு ஆலோசனைக் கோவை, கல்வி நிருவாக நிபுணர்களின் கண்காணிப்பின் கீழ் காலத்துக்கேற்ற வகையில் மறுசீரமைக்கப்பட வேண்டும் எனவும் அரசாங்கக் கணக்குக் குழு கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியது.

மாணவர்களை பாடசாலைகளுக்கு உள்ளீர்க்கும் போது பாடசாலைகள் தொடர்பில் பெற்றோரின் மனப்பாங்கு மாற்றமடையும் வகையில் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் குழு சுட்டிக்காட்டியது.

பாடசாலைகளை திறத்தல், மூடுதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பன பாடசாலை கட்டமைப்பு ஆலோசனைக் கோவைக்கு அமைய இடம்பெறவேண்டும் என குழு தெரிவித்தது. பிரபலமடையாத பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை இடமாற்றம் செய்யும் போது அந்த இடமாற்ற கட்டளைகளை மேற்பார்வை செய்வதன் முக்கியத்துவம் தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது. பாடசாலையொன்றின் பரீட்சை பெறுபேறுகள் மாணவர்களை ஈர்க்கும் பிரதான காரணியாக உள்ளதால், இந்த பாடசாலைகளின் பரீட்சை பெறுபேறுகளை விருத்தி செய்துகொள்ள தேவையான விசேட வேலைத்திட்டமொன்றின் தேவையையும் குழு சுட்டிக்காட்டியது. அனைத்து பாடசாலைகளும் கல்வி நிருவாக அறிக்கையொன்றை வைத்திருக்க வேண்டும் எனவும், பல்வேறு வேலைத்திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும் போது அந்த அறிக்கையை அடிப்படையாக கொள்வது பொருத்தமாகும் என குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

லேக் ஹவுஸ் முகாமைத்துவ...

(03ஆம் பக்கத் தொடர்)

தந்தையாவார். அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று(02) மாலை 5.00மணிக்கு குளியாபிட்டிய பொது மயானத்தில் நடைபெறும்.

தினேஷ் குணவர்தனவின்...

(03ஆம் பக்கத் தொடர்)

அவர், தேசிய அல்லது சர்வதேச அளவிலான எந்தவொரு முக்கியமான சந்தர்ப்பத்திற்கும் தேசிய உடையை அணிபவராவார். வணிக முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றுள்ள இவர் , ஆங்கிலத்தில் சரளமாக பேசக்கூடியவராவார்.

பெற்றோர் ஆசிர்வாதத்துடன்...

(03ஆம் பக்கத் தொடர்)

பெற்றோரின் ஆசிர்வாதத்துடன் ஆலய வழிபாட்டினை பூர்த்திசெய்து மிகவும் உற்சாகத்துடன் தான் பரீட்சைக்கு தோற்றுவதாக அவர் தெரிவித்தார். சுனாமி அனர்த்தத்தின் போது கண்டெடுக்கப்பட்ட அபிலாஸ் தனது குடும்பத்தினை கண்டு பிடிப்பதற்காக நடைபெற்ற பரீட்சையில் சித்தி பெற்றதை போன்று தனது வாழ்க்கையின் பரீட்சையிலும் களமிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாய் மற்றும் பிரம்பால் தாக்கிய...

இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமியின் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை நேற்று ராகமை வைத்தியசாலையில் இடம் பெற்றது. இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரை 6 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தோஷம் நீக்குவதாக கூறி சிறுமிக்கு 5 மணி நேரம் பிரம்பினால் தாக்கியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். வீட்டிற்கு அருகில் உள்ள இடத்தில் சிறுமிக்கு அமானுஷ்ய சக்தியை (பிசாசு விரட்டுவதாக) விரட்டுவதாக கூறி தாய் அவரை அழைத்து சென்றுள்ளார்.

முதலாவதாக எண்ணை பூசும் நடவடிக்கை ஒன்று மெற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் சிறுமிக்கு அமானுஷ்ய சக்தியை விரட்ட வேண்டும் கூறி பிரம்புகள் உடையும் வரை தாக்கியுள்ளனர்.

பிற்பகல் ஒன்றரை மணியில் இருந்து மாலை 6 மணி வரை சிறுமி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பிதேச மக்கள் தெரிவித்துள்ளனர். சிறுமியை தாக்கியமையினால் உடைந்த பிரம்புகளின் துண்டுகள் கண்டுபிடிக்க முடிந்துள்ளது. தாக்குதலுக்குள்ளான சிறுமி மயக்கமடைந்தமையினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் வைத்தியசாலை அனுமதிக்கும் போதே சிறுமி உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மகளுக்கு எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. மகள் மிகவும் நல்ல நிலையிலேயே இருந்தார். என்னை அடிக்க வேண்டாம் என்று என் மகள் கூச்சலிட்டுள்ளார். எனினும் மகள் உயிரிழக்கும் வரை அடித்துள்ளார்கள் என உயிரிழந்த சிறுமியின் தந்தை குறிப்பிட்டுள்ளார்.

நல்லடக்க அனுமதியை அரசு...

எல்லாவற்றையும் அரசியலாக்கும் பிற்போக்கு வாதத்தை முற்றாகக் கைவிட வேண்டும்.

ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதை நிறுத்தக் கோரி,சிலர் கறையான்கள் மழை தேடித் தூது போவது போல் செயற்பட்டனர். சமூகத்தின் பிழைப்புக்கான சவால்களை, சில அரசியல்வாதிகள் தங்களது சொந்த அரசியல் பிழைப்பாக எடுத்துக் கொண்டதுதான் இதற்குக் காரணம்.

வர்த்தமானி அறிவிப்பிலிருந்த பிழையை, பாராளுமன்றத்தில் பகிரங்கமாக சுட்டிக்காட்டி வாபஸ் பெறுமாறு கோரினோம்.இது தொடர்பில் தனிநபர் பிரேரணைக்கும் நாம்தான் தயாரானோம்.இப்போது சாதகமான பதில் கிடைத்துள்ளது. பொதுமக்களை அங்குமிங்கும் அலைக்கழிக்காமல் ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் கொரோனா கட்டுப்பாட்டு தடுப்பு பகுதியை உருவாக்க வேண்டும்.நாட்டுக்குள்ளே பேசித் தீர்க்க வேணடிய பிரச்சினைகளை, எங்கோ சென்று பேசித் தீர்க்க முனைவது சாத்தியமற்றது. தமிழர்களின் பிரச்சினைகளை பேசவேண்டிய இடம் ஒஸ்லோவோ அல்லது லண்டனோ அல்ல. இலங்கையிலே இதுபற்றிப் பேச வேண்டும். நாட்டின் முக்கிய பௌத்த மதகுருமார்களை சந்தித்து,எமது தாய்நாடு நாடு தொடர்பில் முஸ்லிம்களின் நிலைப்பாட்டை தெளிவாகக் கூறினோம். நிலக்கீழ் நீரில் வைரஸ் கலக்குமா? இறந்த உடல்களிலிருந்து வைரஸ் வெளியாகுமா? என்பதை ஆராய்ந்து தீர்வு தருமாறுதான் தேசிய காங்கிரஸ் கேட்டது.

வைரஸ் தொடர்பிலான தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் ஒரு அறிக்கையைத் தர, எமது நாட்டின் நிபுணர்கள் வேறுவிதமாக பேசிக் கொண்டிருந்தனர். சிரேஷ்ட அரசியல்வாதி திஸ்ஸவிதாரண எனது பக்கத்து ஆசனத்தில் இருப்பவர், அவர் வைரஸ் தொடர்பில் சிறந்த நிபுணத்துவம் பெற்றவர். இது தொடர்பில் அவரிடம் பல கலந்துரையாடல்களை செய்துள்ளேன்.

கிழக்கில், கல்முனை வைத்தியசாலையில் 02 ஜனாஸாக்களும், காத்தான்குடி வைத்தியசாலையில் 02 ஜனாஸாக்களும் அடங்கலாக நாடுமுழுவதிலும் ஜனாஸாக்கள் குளிரூட்டியில் இருக்கின்றன. இவ்விடயம் எனக்கு பலத்த சங்கடத்தை தந்தது. இவ்விடயம் தொடர்பில் எமது மக்களுக்கு நம்பிக்கை தரும் விதமாக சட்டத்தரணிகளை அணுகி இவ்விடயத்தை கடுமையாக ஆலோசனை செய்து வருவதாகவும் அதாஉல்லா தெரிவித்தார்.

சுமுகமாக ஆரம்பமாகிய க.பொ.த...

நடைபெற்றதாக முறைப்பாடுகள் பதிவாகவில்லை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையில் சுகாதார நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டு பரீட்சை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த அவர் வைரஸ் தொற்றுக்குள்ளான 38 மாணவர்கள் நேற்று பரீட்சைக்கு தோற்றி இருந்ததாகவும் குறிப்பிட்டார். அந்த மாணவர்களுக்காக விசேட பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் அது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்ததாவது;

ஏற்கெனவே விடுக்கப்பட்டிருந்த அறிவிப்புக்கு இணங்க நேற்றையதினம் காலை 7.45 மணிக்கு மாணவர்கள் பரீட்சை நிலையங்களுக்கு சமூகமளித்திருந்தனர். நேற்றைய தினம் பரிட்சை நடவடிக்கைகள் முற்பகல் 11. 40 மணிக்கு நிறைவுபெற்றன.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக சுகாதார சட்ட விதிகளுக்கு உட்பட்டு உச்ச அளவில் சுகாதார வழிமுறைகள் சகல படிச்சி நிலையங்களிலும் பின்பற்றப்பட்டன.

ஏனைய வருடங்களைப் போலன்றி இம்முறை பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பல்வேறு நிபந்தனைகளுக்கு மத்தியில் செயற்பட வேண்டியிருந்தது.

எவ்வாறாயினும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய வாசல் வரை முகக்க வசங்களை அணிதல் கட்டாயமாக்கப்பட்டிருந்த நிலையில் பரீட்சை எழுதும் போது முகக் கவசத்தை நீக்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் மற்றும் பரீட்சை நிலையங்களில் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்காக விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தொடர்ந்தும் அந்த ஏற்பாடுகள் நடைமுறையிலிருக்கும்

என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு 6 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் தோற்றும் நிலையில் நாடளாவிய ரீதியில் 4513 பரீட்சை நிலையங்களும் பரீட்சை இணைப்பு செயற்பாடுகளுக்காக 542 நிலையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் முப்படையினரை...

நாடுகள் சபையில் அமெரிக்காவின் சார்பில் உரையாற்றிய தூதுவர் ஜோன் போல்டன்,

சர்வதேச குற்ற நீதிமன்றத்தின் எந்த ஒரு அதிகாரியும் அமெரிக்காவின் முப்படையினரை விமர்சிக்க முன் வருவார்களானால் அவர்கள் சிறைக்குள் தள்ளப்படுவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனிலும் அதே நடைமுறையே உள்ளது. அது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பலமான வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க முப்படைகளில் பாதுகாக்க அந்த நாடுகள் பலமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

எமது நாட்டைப் பொருத்தவரை முப்பது வருட யுத்தத்தை நிறைவு செய்து நாட்டு மக்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்த முப்படையினரை வேட்டையாட நினைப்பது பெரும் அநீதியான நடவடிக்கையாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் ஜெனீவா மனித உரிமை ஆணையாளர் மேற்கொண்டுள்ள செயற்பாடுகளை அரசாங்கம் முழுமையாக நிராகரிப்பதுடன் அரசாங்கம் என்ற வகையில் அதற்கு தேவையான நடவடிக்கைகள் அவதானமாக மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையானது ஐக்கிய நாடுகள் சபை அமைப்பில் தொடர்ந்து ஏழு தசாப்தங்களாக அங்கத்துவம் வகித்து வருகிறது. தொடர்ந்தும் நாம் அதன் அடிப்படை கோட்பாடுகளுக்கு இணங்கவே செயற்பட்டு வந்துள்ளோம். தொடர்ந்தும் நாம் குறித்த நாடுகளுடன் சுமுகமான நட்புறவைப் பேணி செயற்படுவோம். எனினும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவா மனித உரிமை பேரவை அமர்வில் இலங்கை தொடர்பான விடயங்கள் தொடர்ந்தும் பேசப்பட்டு வருகின்றன.

மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையை நாம் ஆரம்பத்திலிருந்தே ஒருதலை பட்சமானது என நிராகரித்து வருகின்றோம். எத்தகைய ஆய்வுகளும் இன்றி தன்னிச்சையான அடிப்படையற்ற விடயங்களே அதில் முன்வைக்கப்பட்டுள்ளன.

மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கூட அதனை ஏற்றுக்கொண்டு குறித்த அறிக்கையில் திருத்தங்கள் செய்வது பொருத்தமானது என குறிப்பிட்டுள்ளது. அது எமக்கு நீதியைப் பெற்றுத் தரும் அறிக்கையல்ல. மாறாக

அந்த அறிக்கையின் அடிப்படையே தவறானது.

அது தொடர்பான வாக்கெடுப்பு இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் இடம்பெறும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அது தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளது. ஜெனீவா நகரில் கடந்த வாரம் இலங்கை தொடர்பான விவாதங்கள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை அடிப்படையாக வைத்தே இடம் பெற்றுள்ளன. அந்த அறிக்கை யுத்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களோடு தொடர்புபட்டதல்ல என்பது தெளிவாக தெரிகிறது.

2019 நவம்பர் மாதத்தில் மனித உரிமை ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கை எமது நாட்டின் உள் விவகாரங்களில் நேரடியாக தலையிடுவதாக அமைந்துள்ளது. வெளிநாடுகளில் நலன்கள் அந்த நாட்டு அரசாங்கங்களின் அரசியல் இருப்பு என்பவற்றையே அது சார்ந்துள்ளது. அவை எந்த வகையிலும் இலங்கையின் நலன் சார்ந்த விடயங்களுடன் சம்பந்தப்பட்டதல்ல. எமது நாட்டை அரசியல் கால் பந்தாக உபயோகித்தே மேற்படி வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பான செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

யுத்த குற்றம் தொடர்பில் இப்போது பேசுகின்றனர். குற்றம் புரிந்தவர்கள் எங்கே உள்ளனர்? அவர்கள் இப்போது இந்த நாட்டில் இல்லை.

விமானப்படை தினத்தை...

(03ஆம் பக்கத் தொடர்)

படைத் தளத்தில் பிரதான மரியாதை அணிவகுப்பு நிகழ்வு விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன தலைமையில் இன்றைய தினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு வாரங்களுக்குள்...

(03ஆம் பக்கத் தொடர்)

பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளன.அதுபோன்று 136 நாடுகள் தடுப்பூசியை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை.எனினும் எமது ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டு மக்களின் நலன்களிலேயே கவனம் செலுத்தியுள்ளனர். அதற்கு முதலிடம் வழங்கி செயல்பட்டு வருகின்றனர். அதனால்தான் கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளில் இலங்கை 10வது இடத்தை பெற்றுக்கொண்டு ள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

ஏப்ரலில் உயர்தர...

(03ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைக்கான பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரலில் வெளியிடப்படவுள்ள நிலையில் பல்கலைக் கழகத்துக்கு தகுதி பெறும் மாணவர்களை செப்டம்பர் மாதத்தில் உள்ளீர்ப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தாமதமின்றி மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்யும் வகையில் அதற்கான முறைமை ஒன்றை தயாரிக்குமாறு கல்வியமைச்சர் அமைச்சு உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை தற்போது நடைபெற்று வரும் கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்வரும் ஜுன் மாதத்தில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த மாணவர்களுக்கான உயர்தர வகுப்பு கல்வி நடவடிக்கை ஜுலை மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கான காலம் வீணடிக்கப்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.(ஸ)

மக்களின் உரிமைகளை...

(03ஆம் பக்கத் தொடர்)

பணிகளை ஆரம்பித்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் இராஜாங்க அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,புலிகள் இயக்கப் பயங்கரவாதம் காரணமாக இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அன்று பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இந்நாட்டின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அன்றைய பாதுகாப்பு செயலாளரும் இன்றைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவும் இல்லையெனில் இப்பிரதேச மக்களின் வாழ்வை உறுதிப்படுத்த எவரும் இல்லாத நிலை நீடித்திருக்க முடியும்.

சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு தற்போது இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. இன்று எங்கள் நாட்டின் மனித உரிமைகள் தொடர்பில் கதைப்பவர்கள் எவரும் அன்று இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் மனித உரிமைகள் தொடர்பில் குரல் எழுப்பவுமில்லை. ஒரு வசனம் கூட கதைக்கவும் இல்லை. சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமுள்ள புள்ளிவிபரங்கள் தொடர்பில் எம்மால் திருப்பி அடைய முடியாது. தவறான தகவல்களைக் கொண்டிருக்கும் சர்வதேச அமைப்புகள் இலங்கையரின் கௌரவத்திற்கு கலங்கம் ஏற்படுத்துவது பாரிய தவறாகும்.

இங்குள்ள அயற் கிராமமான பள்ளியகொடல்ல கிராமத்தில் சுமார் 290 பேர் புலிப் பயங்கரவாதிகளால் அன்று படுகொலை செய்யப்பட்டனர். இந்த மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அன்று எவரும் முன்வரவில்லை. அதனால் அடிப்படை வாதிகளின் புள்ளிவிவபரங்களில் தங்கியுள்ள அமைப்புக்கள் இறைமையுள்ள நாட்டுக்கு அழுத்தங்களைத் தெரிவிக்க இடமளிக்க முடியாது.

சிறிதரன் எம்.பியிடம்...

பதிவிட்டுள்ள சிறிதரன், “பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் போராட்டத்தில் கலந்து கொண்டமை தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிசாரினால் நேற்று எனது காரியாலயமான அறிவகத்தில் வைத்து வாக்கு மூலம் பெறப்பட்டது” எனக் குறிப்பிட்டுள்ளார்.இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தில் கலந்துகொண்டமை தொடர்பாகவே ஞாயிற்றுக்கிழமை இந்த விசாரணை இடம்பெற்றுள்ளது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் போராட்டத்தில் கலந்து கொண்டமை தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிசாரினால் நேற்று எனது காரியாலயமான அறிவகத்தில் வைத்து வாக்கு மூலம் பெறப்பட்டது.

பாரம்பரியம் நிகழ்ச்சியில்...

(03ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம் சேவையில் பெரும் எண்ணிக்கையிலான நாடகங்களை எழுதியுள்ளார். அத்துடன் இவர் எழுதிய "பாறையில் பூத்த மலர்" தொடர் நாடகமும் ஒலிபரப்பானது குறிப்பிடத்தக்கது. மூத்த வானொலி நேயர்கள் மத்தியில் மிகவும் பிரபலம் பெற்ற மரீனா இல்யாஸ் ஷாபி தற்போது நியூ சிலாந்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருவதோடு தனது துணைவர் முதுமாணிப் பட்டம் பெற்ற ஷாபியுடன் இணைந்து பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இப் பேட்டி நிகழ்ச்சியை கலாபூஷணம் எம். எஸ். எம். ஜின்னா தொகுத்து வழங்குகிறார். முஸ்லிம் சேவை பொறுப்பதிகாரி எம். ஜே. பாத்திமா ரினோஸியா தயாரித்து வழங்குகிறார்.

கலாசூரி வீ.பீ.சிவப்பிரகாசம்...

(03ஆம் பக்கத் தொடர்)

சேவை யாற்றி வந்த இதே வேளை ஒரு முழு நேரப் பத்திரிகையாளராகவும் பணியாற்றிவந்தார். இறுதிக்கிரிகைகள் (இன்று 02) அக்கரைபற்று இந்து மயானத்தில் நடைபெறும். இவரது மனைவி மற்றும் இரு ஆண் பிள்ளைகளும் ஏற்கெனவே இறந்துள்ள தோடு இறுதிக் காலத்தில் அவர் தனது பேரப்பிள்ளைகளுடனே வாழ்ந்து வந்தார் என்பது குறிப்படத்தக்கது.

இலங்கை விமானப் படையின்...

திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதில் இலங்கை விமானப் படையுடன் இந்திய விமானப் படையும் இணைந்து தமது சாகசங்களை காண்பிக்கவுள்ளதாக விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் இன்று (2) பிரதான மரியாதை அணிவகுப்பும் மார்ச் 05ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விமானப் படையின் ஜெட் மற்றும் எம் ஐ –17ரக ஹெலிகொப்டர் பிரிவுகளுக்கு ஜனாதிபதி வர்ணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் இம்முறை விமானப் படை நிகழ்வுகளில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் அமெரிக்க பசுபிக் கட்டளையகத்தின் விமானப் படைத் தளபதிகள் வெளிநாட்டு அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளமை விஷேட அம்சமாகும். 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் 27ஆம் திகதி வரை பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மார்ச் முதலாம் திகதி சமய வழிபாடுகளும், 02ஆம் திகதி பிரதான மரியாதை அணிவகுப்பும், 3ஆம் திகதி முதல் 05ஆம் திகதி வரையான மூன்று நாட்களுக்கு மாலை 5 மணிக்கு கொழும்பு காலி முகத்திடல் வான் பரப்பில் வான் சாகசங்கள் பல காண்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயணப் பொதிக்குள் பெண்ணின்...

காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணை நடத்துகின்றனர். சடலம் இதுவரை அடையாளங் காணப்படவில்லை எனவும் சி.ஐ.டியினர் விசாரணை நடத்துவதாகவும் அறிய வருகிறது.(பா)

மைத்திரிக்கு எதிரான நடவடிக்கை...

இல்லையா? என்பதை உயர் நீதிமன்றமே தீர்மானிக்கும். இது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது.இதேவேளை, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு திட்டமிட்டே முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றம் சுமத்தியுள்ளது என விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்திலேயே இந்த விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது என்றார்.

மாணவி ஒருவரின் கோரிக்கைக்கு...

“கிராமத்துடன் உரையாடல்“ நிகழ்ச்சித்திட்டத்தின் போதே இந்த மாணவி மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

ஜனாதிபதி அந்த சந்தர்ப்பத்திலேயே விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் பணியை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தார்.

மாணவியின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இராணுவத்தின் பொறியியல் பிரிவு இரண்டு மணி நேரத்திற்குள் விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளருக்கு...

தீர்மானத்திற்கு நேற்றும் முதலாளிமார் சம்மேளனம் எதிர்ப்பை வெளியிட்டது. எனினும் தொழிற்சங்கங்கள் மேற்படி தீர்மானத்திற்கு ஆதரவளித்தன.அதனையடுத்து சம்பள அதிகரிப்பு தொடர்பில் இருக்கும் நியாயத்தை ஏற்றுக் கொண்ட தொழில் ஆணையாளர், அடிப்படைச் சம்பளம் 900 ரூபாய் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 100 ரூபாய் என்ற வகையில் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிக்கும் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்வதாக தெரிவித்துள்ளார்.

அறிக்கைக்கு எதிராக...

தம்பியா ஆகிய வழக்கறிஞர்களை இவ்வாறு முறைப்பாட்டினை அளித்துள்ளனர். அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கடந்த டிசம்பர் மாதம் கையளிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன தலைமையில் மூன்று பேர் கொண்ட இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு 2020 ஜனவரி 09 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு, FCID, CID மற்றும் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவு ஆகிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் காரணமாக 2015 ஜனவரி 08 முதல் 2019 நவம்பர் 16 வரை அரசியல் பழிவாங்கலினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பின்னணி குறித்து விசாரணை செய்யும் பொறுப்பு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

முதலமைச்சர் வேட்பாளரை...

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றிருந்தது. இதில் கலந்து கொண்ட போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் இடம்பெற்ற எமது கட்சியின் தலைமைக் குழுக்கூட்டத்தில் கட்சியின் பேச்சாளராக நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். அதனடிப்படையில் எமது கட்சியின் தலைமைக் குழுக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

நடந்து கொண்டிருக்கும் அரசியல் நிலமைகள் விவாதிக்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை ஆணையாளர் தெரிவித்த விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

உறுதியாக நடைமுறைப்படுத்தப்படும் என உதவி ஆணையாளர் தெரிவித்த கருத்தை வரவேற்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் விடுத்த கோரிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து அங்கத்துவ நாடுகளின் ஆதரவையும் கோரி நிற்கின்றோம். குறிப்பாக இந்தியாவின் ஆதரவை கோரி நிற்கின்றோம்.

ஆணையாளரின் விடயங்களில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு நீதி பொறிமுறை, பொறுக்கூறல் விடயத்தை பாராப்படுத்த வேண்டும் என்ற கோ

கொவிட் 19 சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக க.பொ.த சாதாரண தர பரீட்சைகள் ஆரம்பம்

மத்திய மாகாணத்தில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட 17 மாணவர்களுக்கு விசேட பரீட்சை நிலையங்கள்

(எம்.ஏ.அமீனுல்லா, ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட, கம்பளை நிருபர்கள்)

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலினால் பிற்போடப்பட்ட 2020 ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி நேற்று (01.03.2021) ஆரம்பமானது. சகல பரீட்சை நிலையங்களும் தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் 4513 நிலையங்களில் கொவிட் 19 சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி பரீட்சைகள் ஆரம்பமாகின.

அதற்கமைய மலையகத்தில் கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகளில் மாணவர்கள் நேற்று (01.03.2021) ஆர்வத்துடன் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

கொவிட் 19 சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக மாணவர்கள் அனைவருக்கும் முகக்கவசம் கட்டாயமாக்கப்பட்டு உடல் வெப்பம் அளவிடப்பட்டு கை கழுவுதலுக்கு பின்னரே பரீட்சை மண்டபங்களுக்கு உள்வாங்கப்பட்டனர். மாணவர்கள் நெரிசல் இல்லாத போக்குவரத்தை பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் வெளியாட்கள் எவரும் பரீட்சை மண்டபங்களுக்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி பரீட்சை நிலையத்திற்கு வழமையான மேற்பார்வையாளர் நோக்குனர்களுக்கு மேலதிகமாக கொவிட் வைரஸ் தொற்றுக் தொடர்பில் விசேட நோக்குனரொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் கொவிட் தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகவிருப்பார். சிலவேளை பரீட்சை நிலையத்தில் பரீட்சார்த்திக்கு காய்ச்சல் அல்லது அசாதாரண நிலைமை ஏற்படுகின்ற போது அதனை அவர் கையாளுவார்.

நுவரெலியா மாவட்டத்திலிருந்து இம்முறை 25 ஆயிரத்து 98 மாணவர்கள் தோற்றுகின்றனர். 179 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆன்மீக நிலையங்கள் மற்றும் வீடுகளில் இறை வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் பெற்றோரும், பொறுப்பாளர்களும் பிள்ளைகளை பரீட்சை நிலையங்களை நோக்கி வாழ்த்தி, வழியனுப்பி வைத்தனர்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் பரீட்சை நடவடிக்கைகளை சுகாதார பாதுகாப்புக்கு மத்தியில் நடத்துவதையிட்டு அரசாங்கத்திற்கு

நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாக பெற்றோர்கள் தெரிவித்தனர்.அவ்வாறு இல்லாவிட்டால் மாணவர்கள் பாரிய அளவில் மன உளைச்சலுக்கு ஆளாகுவதாகவும் அவர்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு படியிலும் பின்னோக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் பெற்றோர்கள் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஹற்றன் கல்வி வலயத்தில் 56 பரீட்சை நிலையங்களில் 4850 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.இதில் சிங்கள மொழி மூலம் 850 மாணவர்களும் தமிழ் மொழி மூலம் 4000 மாணவர்களும் தோற்றியுள்ளதாக ஹற்றன் வலயக்கல்விப்பணிப்பாளர் சிறிதரன் தெரிவித்தார்.

பரீட்சை இணைப்பு நிலையங்களாக ஆறு இணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சகல பரீட்சை நிலையங்களும் தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை நேற்று ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியின் முன்னால் கூடியிருந்த பெற்றோர்கள் சுகாதார பாதுகாப்பு கருதி பொலிஸாரினால் அப்புறப்படுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் மத்திய மாகாணத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் 17 மாணவர்கள் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர் . அவர்களுக்கான மாவட்ட மட்டங்களில் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண கல்வி திணைக்கள மாகாண பணிப்பாளர் ஈ .பி.ரீ .கேதிலக் ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி கண்டியில் 06 மாணவர்களும் மாத்தளையில் 04 மாணவர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 07 மாணவர்களும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பரீட்சை எழுத விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் இவர்களுக்கான மத்திய நிலையம் பல்லேகெல ஆயுர்வேத மருத்துவமனையிலும், மாத்தளை மாவட்டத்தில் மத்திய நிலையம் லக்கல பல்லேகம மருத்துவமனையிலும், நுவரெலியா மாவட்டத்தில் வலபனை மருத்துவமனையிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார். பரீட்சை எழுதுகின்ற போது , ஒரு மாணவர் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டால் உடனடியாக அவர்களை தனிமைப்படுத்தும் வகையில் இந்த விசேட பரீட்சை நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் எனவும் இவ்வாறு கொரோனா தொற்றுகாரணமாக எந்தவொரு மாணவர்களும் பரீட்சை எழுத முடியாமல் விடுமோ என்ற அச்சங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டாம் எனவும் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களுக்கு பாராட்டுவிழா

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தினரால் கண்டி மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் பாராட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. (28)

கண்டி அரங்கல ரோயல் கிளசிக் ரிசோட் ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் மத்திய மாகாண கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் யோ. சத்யேந்திரா பிரதம அதிதியாகக் கலந்துகாண்டு மாணவர்களுக்கு பரிசுப் பொதிகளையும் கிண்ணங்களையும் வழங்கினார்.

இவ்வைபவத்தில் 62 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்கு சுமார் பத்தாயிரம் ரூபா வரையான பரிசுப் பொதிகள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டன.

அத்துடன் கண்டி ரோயல் கிளசிக் ரிசோட் ஹோட்டல் முகாமைத்துவம் சகல மாணவர்களுக்கும் இலவசமாக மதியபோசன உணவு வழங்கி கௌரவித்தது.

குண்டும் குழியுமாக காணப்படும் நாவலப்பிட்டி - தலவாக்கலை வீதி

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

நீண்ட காலமாக குண்டும் குழியுமாக காணப்படும் நாவலப்பிட்டி பத்தனை வழியான தலவாக்கலை செல்லும் வீதியை புனரமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

சுமார் 30 கிலோ மீற்றர் தூரம் வரையிலான பாதை மிகவும் மோசமான நிலையில் உடைந்து காணப்படுவதால் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பொது போக்குவரத்து பஸ் சாரதிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்

நாள் தோறும் திம்புள்ளபத்தனை, கெலிவத்தை, போகாவத்தை குயின்ஸ்பரி, கெட்டபுலா, கடியனெல்ல, போஹில், கிரீன்வூட் , கல்லோயாபகுதிகளை சேர்ந்த மக்கள் இந்த வீதியை பயன்படுத்துகின்றனர். எனவே குறித்த வீதியை செப்பனிட அமைச்சர்களும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மலையக யுவதிகளுக்கு கைத்தொழில் பயிற்சிகள்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முயற்சியில்தொழில் பயிற்சி நிறுவனம் மீண்டும் ஒரு ஆக்கப்பூர்வமான முன்னெடுப்பை செய்துள்ளது. இலங்கை இந்திய சமுதாய பேரவையுடன் இணைந்து மலையக இளைஞர் யுவதிகள் 130 பேருக்கு கைத்தொழில் பயிற்சிகளை வழங்கியுள்ளது. பத்திக், பின்னல் வேலைப்பாடுகள், எம்ப்ரோடிங் போன்ற தொழிற்பயிற்சிகளை வழங்கியதன் மூலம் இந்த யுவதிகள் வீடுகளில் இருந்தபடியே சுயதொழில்களை மேற்கொண்டு வருமானத்தை பெறவாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக ஏழு நாட்கள் இடம்பெற்ற பயிற்சி வகுப்பில் எளிமையான முறையில் கற்கை நெறிகள் வழங்கப்பட்டுள்ளதால் பயிற்சிபெற்ற 130 யுவதிகளுமே பயன்பெற தகுதியுடையவர்கள்.

காங்கிரஸின் கனவுக்கூடமாக உருவாக்கம் பெற்று நீண்டகாலமாகவே பல்வேறு தொழில்நுட்ப வகுப்புகள் நடாத்தி வருவதால் மலையக இளைஞர் யுவதிகளுக்கு சுயத்தொழில் பயிற்சிகளை காங்கிரஸ் தொழிற்பயிற்சி நிலையம் வழங்கியுள்ளது.

ஹங்கமுவ ஆற்றில் முதலைகள் அதிகரிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நிவித்திகல ஹங்கமுவ கங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினையடுத்து முதலைகள் சஞ்சரிப்பதால் பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்து வருகின்றனர்..

அண்மைக்காலமாக இந்த ஆற்றில் முதலைகள் சஞ்சரிப்பதால் பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்து வருகின்றனர்.இதனால் மக்கள் ஆற்றில் இறங்கி நீராட அஞ்சுகின்றனர்.

இதனால் சரணாலயங்களுக்கும் வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் மற்றும் இரத்தினபுரி வனப்பரிபாலன காரியாலயங்களுக்கும் முறைப்பாடுகளை வழங்கியுள்ள போதிலும் இதுவரை அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற் கொள்ளவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சென்.கிளயார் வனப்பகுதியில் திடீர் தீ 30 ஏக்கர் வரையான பகுதி நாசம்

ஹற்றன் சுழற்சி நிருபர்) , தலவாக்கலை குறூப் நிருபர்



தலவாக்கலை சென்.கிளயார் வனப்பகுதியில் ஏற்பட்ட தீப்பரவலால் சுமார் 30 ஏக்கர் வரையான வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளது.

தலவாக்கலை சென்.கிளயார் வனப்பகுதி நேற்று இரவு 7 மணி முதல் தீ பிடிக்க ஆரம்பித்தது.

இதனையடுத்து தலவாக்கலை பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்துவதற்கு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டனர்.எனினும், தற்போது கடும் வறட்சி நிலவுவதால் தீ வேகமாக பரவி சுமார் 30 ஏக்கர் வரை தீக்கிரையானது.மனித செயற்பாடு மூலமே இத்தீப்பரவல் ஏற்பட்டிருக்கும் என சந்தேகிக்கும் பொலிஸார், அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஹெரோ இளைஞர் கழகத்தின் கரப்பந்தாட்டப் போட்டித்தொடர் வெற்றிகரமாக நிறைவு

பூண்டுலாயோ நிருபர்

ஹெரோ இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த மாதம் 26,27,28ஆம் திகதிகளில் பகலிரவு போட்டியாக பூண்டுலோயா ஹெரோ கரப்பந்தாட்ட மைதானத்தில் இடம் பெற்றது.இப்போட்டிதொடரின் போது முதலாவது இடத்தை தலவாக்கலை கோல்டன் ஸ்டார் அணியும், இரண்டாவது இடத்தை பூண்டுலோயா சிவானந்தா அணியினரும் மூன்றாவது இடத்தை பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலய அணியினரும் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கொத்மலை பிரதேச சபை உறுப்பினர்களான பாரதிராஜா, யோகமூர்த்தி, ரஜினிகாந்த் மற்றும் தோட்ட உதவி முகாமையாளர் டிலுக்ஷன் உட்பட ஹெரோ தோட்ட பொது மக்கள் ,ஹெரோ இளைஞர் கழகம், ஹெரோ விளையாட்டு கழகம் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இப்போட்டித்தொடருக்கு முழுமையான ஊடக அனுசரணையை கோடி பக்கம் யூடியூப் செனல் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறையனுபவம், தியாக மனநிலையோடு தவக்காலத்தை பயனுள்ளதாக அனுசரிப்போம்

தியாகம் நிறைந்த மனநிலையில் வாழும் பொழுது வருகின்ற அனைத்து சோதனைகளையும் இடையூறுகளையும் எதிர்கொள்ள இறையனுபவம் மட்டுமே வழிகாட்ட முடியும்.

கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகமானது இறை அனுபவத்தின் உச்சத்தை சுட்டிக்காட்டுகிறது. இயேசு ஒரு உயரமான மலையில் உருமாற்றம் அடைந்த நிகழ்வை பார்க்கிறோம்.

இயேசுவின் உருமாற்றம் தாபோர் மலையில் நிகழ்ந்தது என்பது என்ற கருத்து பாராம்பரிய வழக்கத்தில் இருக்கின்றது . இயேசுவின் உருமாற்றத்தின் போது அவருடைய ஆடை வெண்மையாக ஒளி வீசியது. அப்போது மேகம் வந்து அவர் மேல் நிழலிட அந்த மேகத்திலிருந்து கடவுளின் குரல் " இவரே என் அன்பார்ந்த மகன் " என்று ஒலித்தது.

இயேசுவின் இந்த இறை அனுபவம் சிலுவையின் வழியாக விண்ணக மகிமையைக் கொடுக்க ஆயத்தப்படுத்தும் அனுபவம். இந்த நிகழ்வைகக் கண்ட பேதுரு அந்த இடத்தில் தங்கி இறை அனுபவத்தோடு மட்டும் இருக்கலாம் என்று இயேசுவிடம் வெளிப்படுத்தினார்.

ஆனால் இயேசு சிலுவையின் வழியாகத்தான் இறை அனுபவத்தை பெற்று விண்ணகத்தின் முன் சுவையை அனுபவிக்க முடியும் என்று தன் சீடர்களுக்கு விளக்கினார். இந்த இறை அனுபவம் தான் இயேசுவுக்கு தியாகம் நிறைந்த வாழ்வு வாழ வழி காட்டியது.

இயேசுவின் வாழ்வை இரண்டு வகையான அனுபவங்களாக வகைப்படுத்தலாம். முதலாவதாக மலை அனுபவம் (இறை அனுபவம்), இரண்டாவதாக மக்கள் அனுபவம் (இறையாட்சிப் பணி). இந்த இரண்டு அனுபவங்கள் தான் இயேசு தியாகம் நிறைந்த மனநிலையோடு பற்பல போதனைகளையும் வல்ல செயல்களையும் செய்ய அடிப்படையாக இருந்தன.

ஏழைகள், பாவிகள், ஒடுக்கப்பட்டோர், நோயாளர்கள், சமூகத்தில் புறந்தள்ளப்பட்டோர் போன்றோர் வாழ்வு பெற மனித நேயத்தோடு இயேசு இறையாட்சி பணி செய்தார்.இது இயேசுவின் தியாக மன நிலையை வெளிப்படுத்துகிறது. தன் வாழ்வையே முழுமையாக நம்முடைய வாழ்வு மீட்புப் பெற தியாகம் செய்தார் இயேசுயூத சமூகத்தில் கொடூரமான அடையாளமாகக் கருதப்பட்ட சிலுவைச் சாவை ஏற்று, இரத்தம் சிந்தி தியாகத்தோடு தன் உயிரைத் துறந்தார்.

திருத்தொண்டர்
குழந்தை இயேசு பாபு...

நம்முடைய அன்றாட வாழ்வில் தியாகம் நிறைந்த மனநிலையோடு வாழும் பொழுது பல்வேறு துன்பங்களும் இடையூறுகளும் வரும். ஆனால் நம்முடைய அறச்செயல்கள் வழியாக இறை அனுபவத்தைப் பெற்ற வாழ்வில் பயணிக்கின்ற பொழுது வெற்றியை அடைய முடியும்.

துன்பத்தின் வழியாகத்தான் இன்பத்தை அடைய முடியும். தோல்வியின் வழியாகத்தான் வெற்றியை அடைய முடியும். சோதனைகளின் வழியாகத்தான் சாதனைகளை பெற முடியும். தியாகம் நிறைந்த வாழ்வின் வழியாகத்தான் மறுகிறிஸ்துவாக மாற முடியும்.

எனவே இந்த தவக்காலத்தில் இறை அனுபவத்தை பெற்று தியாக உள்ளத்தோடு பிறரின் வாழ்வை முன்னேற்றப் பாதையில் வழிநடத்த முயலுவோம். அப்பொழுது தவக்காலம் நமக்கு ஒரு அருளின் காலமாகவும் மீட்பின் காலமாகவும் மகிழ்ச்சியின் காலமாகவும் நிறைவின் காலமாகவும் மாறும். தியாகம் நிறைந்த மனநிலையோடு பயணிக்கத் தேவையான இறை அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள நம்மையே கடவுளிடம் அர்ப்பணிப்போம்.

தியாகத்தின் திருவுருவாம் எம் இறைவனிடம் எங்களுடைய அன்றாட வாழ்வில் தியாகம் நிறைந்த உள்ளத்தோடு வாழ்ந்து எந்நாளும் அவரது இறையாட்சி மதிப்பீட்டிற்க்குச் சான்று பகர தேவையான அருளைத் தரவேண்டி மன்றாடுவோம்.

நாங்கள் வாழ்வில் முன்னேற எங்கள் பெற்றோர்கள்தொடக்கம்எண்ணற்றவர்கள் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்களை நிறைவாக ஆசீர்வதிக்கவும் நாங்கள் தொடர்ந்து தியாகம் நிறைந்த வாழ்வின் வழியாக கிறிஸ்தவ மதிப்பீட்டிற்குச் சான்று பகர தேவையான அருளையும் ஞானத்தையும் தர வேண்டி இந்த தவக்காலத்தில் இறைவனிடம் மன்றாடுவோம்.

கல்லடி புனித டச்பார் அந்தோனியார் ஆலய திருவிழா

படம்.தகவல்: கல்லடி குறூப்நிருபர்

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி டச்பார் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்பணி சுவைக்கீன் ரொசான் அடிகளார் தலைமையில் அண்மையில் மிக விமரிசையாக நடைபெற்றது.திருவிழா கூட்டுத் திருப்பலியானது அருட்தந்தை யூட் டிலக்சன் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழா திருப்பலியில் பங்குத்தந்தை சு.ரொசான் அடிகளாருடன் அருட்தந்தையர்களான மரியதாஸ், லோரன்ஸ், டிலிமா, கிரைட்டன், ஜோன் ஜோசப் மேரி அடிகளார் மற்றும் அருட்சகோதரர் டினோஜன், அருட்சகாதரிகள் என பெருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தனர். பெருமளவிலான அந்தோனியார் பக்தர்கள் சுகாதார நடைமுறைளைப்பின்பற்றி புனிதரின் ஆசீரை பெற்றுக் கொள்ள வருகை தந்திருந்ததுடன் திருவிழா திருப்பலி 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு 3 திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்மை குறிப்பிடத்தக்கது. திருச்சுரூப ஆசிர்வாதத்துடன் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நிறைவுபெற்றது.

பலம் எது பலவீனம் எது என்பதை இனங்காண தவக்காலம் உதவுகிறது

ஜோசப் வாஸ் மன்ற சிலுவைப்பாதை தியானத்தில் துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் ஆண்டகை

கொழும்பு ஜோசப் வாஸ் மன்றம் ஏற்பாடு செய்த பெரிய சிலுவைப்பாதை தியானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு செக்கடித் தெரு புனித வேளாங்கண்ணி ஆலயத்தில் நடைபெற்றது.

அருட் தந்தையர்களின் வழிகாட்டலில் சிலுவைப்பாதை தியானம் மேற்கொள்ளப்பட்டது.

பெரிய சிலுவைப்பாதை தியானத்தின் இறுதியில் ஒப்புக் கொடுக்கப்பட்ட திருப்பலியில் மறையுரையாற்றிய கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் அடிகளார் மனித வாழ்க்கையின் பலவீனத்தையும் அதிலிருந்து வெளியேறுவதற்கு மேற்கொள்ளும் விசுவாச பயணத்தையும் அடிப்படையாக வைத்து கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

தவக்காலத்தின் இந்த நாற்பது நாட்களில் நாம் மேற்கொள்ளும் தவம், செபம், ஒறுத்தல் செயற்பாடுகளானது எமது வாழ்க்கைப் பயணத்தில் முக்கிய திருப்பு முனைக்கு வழிவகுக்கும்.

இந்த நாற்பது நாட்களில் நாம் மேற்கொள்ளும் ஒறுத்தல்கள் மூலம் ஆண்டவரே நாம் செய்த தவறுகளையும் நாம் இழைத்துள்ள குற்றங்களையும் நாம் அறிந்து கொள்வதற்கு உதவியருளும். எனது பலவீனங்கள் என்ன என்பதை எமக்குக் காட்டும். அவற்றை நான் இனங்கண்டு வாழ்க்கையிலிருந்து அவற்றை விலக்கி விட எமக்கு சந்தர்ப்பம் தாரும்.

அவ்வாறு அதனை இனங்கண்டு கிறிஸ்துவின் உயிர்ப்பை நாங்கள் கொண்டாடும் போது அதனை தகுதியானவர்களாக இருந்து கொண்டாடுவதற்கு சந்தர்ப்பம் தாரும் என மன்றாடுவோம்.

வாழ்க்கையின் சோதனைகளை பெற்றுக் கொள்ள நாம் தயாராக வேண்டும். அதை விடுத்து சோதனைகளுக்கு அடிமைகளாகி வாழ்ந்து விடக்கூடாது. சோதனைகள் மத்தியில் வாழும் போதுதான் எமது பலவீனம் எது, பலம் எது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

நாம் மனிதனாக சமூகத்திலே வாழ அழைக்கப்பட்டுள்ளோம். எம்மை போன்றே மற்றவர்களும் பலமுள்ளவர்கள்.அதனை நாம் எப்போதும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

ஒவ்வொருடைய வாழ்க்கையும் மற்றவரது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமாகும் என்பதை புனித அகுஸ்தினார் தனது வாழ்க்கை மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

என்னுடைய வாழ்க்கையில் நான் எதை எதை எல்லாம் எனது பலம் என கருதுகின்றேனோ அதே பலம் பிறரிடமும் உள்ளது. வாழ்க்கை எனும் ஓட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். அதில் எமது பலம் எது பலவீனம் எது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.அப்போதுதான் எமது விசுவாச பயணத்தை நாம் நேரிய வழியில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இயேசுநாதர் பாலைவனத்திற்கு சென்றது சோதனையை சந்திக்கவே. அந்த அனைத்து சோதனைகளையும் அவர் வெற்றிகொண்டார்.

ஆண்டவரின் கற்பனைக்கு எதிரான செயற்பாடுகளை அது தொடர்பான எமது பலவீனங்களை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பலவீனங்களில் இருந்து வெளியில் வந்து நாம் ஆண்டவருக்கு உகந்த வாழ்க்கை வாழ்வதற்கு இந்த தவக்காலம் நமக்கு வழிவகுக்கட்டும் என்றும் துணை ஆயர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் கொரோனாசூழ்நிலை காரணமாக இம்முறை பெரிய சிலுவைப்பாதை வீதிகளில் பவனியாக நடத்தப்படவில்லை. தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் ஊடாக விசுவாசிகள் அதில் பங்கேற்பதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எல். செல்வா...

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
9
2021 மார்ச் 2
செவ்வாய்க்கிழமை

மனநலம் குன்றிய மகனின் தாக்குதலில் தந்தை பலி

காலை நேரம் சிறுப்பிட்டியில் பரிதாபம்

பருத்தித்துறை விசேட, யாழ். விசேட, சுண்டுக்குளி நிருபர்கள்

யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியில் மனநலம் குன்றிய மகனது தாக்குதலுக்கு இலக்காகி தந்தையொருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை 6 மணியளவில் இராசவீதி சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தவர் 64 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி சீனிவாசன் என்பவராவர்.

ஓரளவு மனதளவில் பாதிக்கப்பட்ட மகனுக்கும் தந்தைக்கும் இடையில் காலை சிறு தர்க்கம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன் போது மகன் இரும்பு கம்பியால் தந்தையை அடித்துக் கொலை செய்துள்ளார்.

கொலை செய்த சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில் ஊர் மக்களால் பிடித்து அச்சுவேலி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். நபர் மனநோயினால் பிடிக்கப்பட்டு இருந்ததாகவும் தினந்தோறும் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் சண்டைகள் இடம்பெற்று வருவதாகவும் இளைய மகன் தெரிவித்தார்.

தந்தையினை தாக்கும் போது தன்னால் அதனை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்பட்டதாகவும் மூத்த அண்ணன் ஆக்ரோசமாக தனது தந்தையை தாக்கி கொலை செய்ததாகவும் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரான 33 வயதுடைய இளைஞன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேலதிக விசாரணைகளை மல்லாகம் நீதவான் நீதிமன்றம் ஊடாக அச்சுவேலி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

க.பொ.த சாதாரண தரம்

வடக்கில் 44 ஆயிரத்து 245 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு

பருத்தித்துறை விசேட நிருபர்

வடக்கு மாகாணத்தில் க.பொ.த சாதாரணப் பரீட்சை இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் இம் முறை வடக்கு மாகாணத்திலிருந்து 44 ஆயிரத்து 245 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இவர்களில் 23 ஆயிரத்து 679 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 20 ஆயிரத்து 566 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடக்குகின்றனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து 11 ஆயிரத்து 352 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 11 ஆயிரத்து 130 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தமாக 22 ஆயிரத்து 482 பேர் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 392 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 2 ஆயிரத்து 74 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தமாக 5 ஆயிரத்து 466 பேர் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 919 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், ஆயிரத்து 855 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தமாக 4 ஆயிரத்து 774 பேர் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 771 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 2 ஆயிரத்து 860 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தமாக 6 ஆயிரத்து 631 பேர் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 245 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 2 ஆயிரத்து 647 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தமாக 4 ஆயிரத்து 892 பேர் பரீட்சைக்கு தோற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உருளைக்கிழங்கின் வரியை அதிகரிக்க நடவடிக்கை

தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

கரவெட்டி தினகரன் நிருபர்

யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் குப்பிளான் பகுதியில் இடம்பெற்ற உருளைக்கிழங்கு அறுவடை விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

நிகழ்வில் அறுவடைக்கு தயாரான உருளைக் கிழங்குகளை சம்பிரதாயபூர்வமாக அறுவடை செய்து வைத்தார். பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன், வடமாகாண பிரதி விவசாய பணிப்பாளர் எஸ்.அஞ்சனாதேவி, யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், உள்ளூர் விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட இராஜாங்க அமைச்சர் விவசாயிகளின் பல்வேறு தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார். குறிப்பாக உருளைக் கிழங்கிற்கான வரியை அதிகரிப்பதன் ஊடாகவே உள்ளூர் விவசாயிகளுக்கு அதிக விலையை பெற்றுக் கொடுக்க முடியும் என அங்கஜன் இராமநாதன் இராஜாங்க அமைச்சருக்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் உருளைக்கிழங்கிற்கான வரியினை ஒரிரு வாரங்களுக்குள் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். தொடர்ந்து வரி அதிகரிப்பு சம்மந்தமாக விதை உருளைக்கிழங்கு பயிரினை விதைப்பதற்கு முன்னரே நடவடிக்கை எடுப்பதன் மூலம் பல விவசாயிகளை உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கு ஊக்குவிப்பதாக அமையும் என விவசாயிகள் கேட்டுகொண்டனர். அதற்கும் உரிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும் எனவும் குறிப்பிட்டார்.

புதிய நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடாவிட்டால் நடவடிக்கை

இ.போ.சக்கு பொலிஸ், மாநகர முதல்வர் எச்சரிக்கை

பருத்தித்துறை விசேட, சுண்டுக்குளி நிருபர்கள்

யாழ்ப்பாணத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அரச தனியார் நெடுந்தூர பேருந்து தரிப்பிடத்திலிருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் சேவையிலிடுபட வேண்டும் என மாநகர சபையால் அறிவுறுத்தப்பட்ட நிலையில் அதற்கு இ.போ.ச சாரதிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எனினும் மேற்படி சேவையில் ஈடுபடாத இ.போ.ச சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகரும், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனும் எச்சரித்துள்ளனர்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்தில் நேற்று காலையிலிருந்து தனியார் துறையினர் சேவையில் ஈடுபட்டு வரும் நிலையில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடுவதை புறக்கணித்தன.

இதனையடுத்து இ.போ.ச மத்திய பேருந்து நிலையத்திற்கு பொலிசாருடன் சென்ற மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் இலங்கை

போக்குவரத்து சபை சாரதிகள், நடத்துனர்களுக்கு குறித்த விடயத்தினை தெளிவுபடுத்தி, நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து தான் வெளி மாவட்டத்திற்கான சேவைகள் நடைபெறும் எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இதற்கு, தமது உயர் மட்டத்திலிருந்து தமக்கு எந்தவித அறிவித்தலும் வழங்கப்படவில்லை எனவும் விடயம் தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வட மாகாணத்துக்கு பொறுப்பான அதிகாரி அல்லது சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு விடயத்தை தெரியப்படுத்துமாறு இ.போ.ச ஊழியர்கள் தெரிவித்தனர்.

அதற்கு பதிலளித்த யாழ் மாநகர முதல்வர், கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நெடுந்தூர பேருந்து நிலையம் தொடர்பில் பல்வேறு பட்ட கூட்டங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் உயர் அதிகாரிகளை அழைத்த போதும் அவர்கள் சமூகமளிக்கவில்லை எனவும், தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டும் அவர்களுடைய பதிலளிக்கவில்லை எனவே இனியும் அனுமதிக்க முடியாது.

எனவே நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இருந்துதான் சேவைகள் இடம்பெற வேண்டும். அதனை தவறும் பட்சத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டார்.

இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ சாரதிகளுக்கு கூறுகையில்,

மாகாண ஆளுநரின் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். புதிதாக திறக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இன்றிலிருந்து அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகள் இடம் பெறுவதை உறுதிப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி குறித்த தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொலிசாராகிய எமக்குள்ளது. தனியார் பேருந்துகள் நேற்று காலையிலிருந்து சேவையில் ஈடுபட ஆரம்பித்து விட்டன. எனினும் இலங்கை போக்குவரத்து சபையினர் மாத்திரமே சேவையில் ஈடுபடவில்லை.

வடக்கு மாகாண ஆளுநருடன் இடம்பெற்ற பல்வேறுபட்ட கூட்டங்களின் போது இலங்கை போக்குவரத்து சபையின் உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்ட போதும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. அவ்வாறு சேவையை முன்னெடுக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

த.தே.கூவிலிருந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைய வேண்டும்

வவுனியா விசேட நிருபர்

தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் கூட்டமைப்பில் இணைய வேண்டும் என ரெலோவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திற்கு ஒரு பேச்சாளர் தேவை என்ற காரணத்தினால் எமது கட்சியின் பேச்சாளராக குருசாமி சுரேன் செயற்படுவார். அதனை ஏகமனதாக தலைமைக்குழு தெரிவு செய்துள்ளது. அவர் அனைத்து விடயங்களையும் கையாள்கின்ற அதேநேரம், எமது கட்சி எடுக்கின்ற தீர்மானங்களையும், அரசியல் ரீதியாக இங்கு இருக்கின்ற தூதரகங்களை சந்திக்கின்ற செயற்பாடுகளையும் அவர் ஊடாகவே இனி மேற்கொள்ளப்படும்.

தமிழ் கட்சிகள் எல்லோரும் ஒருமித்த கொள்கையின் கீழ் செயற்படக் கூடிய வடிவமைப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டும். அதை செய்வதற்கான முழு முயற்சியையும் நாம் செய்ய தயாராக இருக்கின்றோம். ஏனைய கட்சிகள் இணைகின்ற போது தனிப்பட்ட கட்சிகள் தமக்கு அதிகாரங்களை கூட்டுகின்ற செயற்பாட்டை மேற்கொள்ள முடியாது. தேர்தலில் தோற்றவர்களை சேர்க்கக் கூடாது என நாம் யோசிக்கவில்லை. அது மக்களின் விருப்பம். ஒற்றுமையை கொண்டு வர வேண்டும்.

வைத்தியர் வீட்டில் புகுந்து தாக்குதல்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள வைத்திய தம்பதிகளின் வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் வைத்தியர்களான கணவனும், மனைவியும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் புகுந்த நான்கு பேர் கொண்ட இனந்தெரியாத நபர்கள் உறங்கிக் கொண்டிருந்த வைத்தியர் மற்றும் அவரது மனைவி ஆகியோரின் மீது கம்பியினால் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், வீட்டில் இருந்த அவர்கள் இருவரினதும் கைத்தொலைபேசி, பேஸ், மோட்டர் சைக்கிள் திறப்பு, கைக்கடிகாரம், சி.சி.ரி.வி வீடியோ சேமிப்பு பெட்டகம் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளதுடன் வீட்டில் இருந்த பொருட்களை சேதப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆராய்வு

இலங்கையின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இந்திய உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மாதிரி கிராம வீட்டுத் திட்டங்கள் தொடர்பாக இந்திய துணைத் தூதுவர் பாலச்சந்திரன் நேரில் சென்று கவனம் செலுத்தி வருகிறார்.

அந்த வகையில் கடந்த வாரம் கிளிநொச்சி மலையாளபுரத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்திய வீட்டுத்திட்டங்கள் தொடர்பாக அங்கு விஜயம் செய்து ஆராய்ந்தார்.

கட்டப்பட்டு வருகின்ற ஒவ்வொரு வீட்டையும், அங்கு கிடைக்கும் வசதிகள் தொடர்பிலும் ஆய்வு செய்து, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ((NHDA) அதிகாரிகள் மற்றும் உள்ளூர்திட்ட அதிகாரிகள் முன்னிலையில் பயனாளிகளுடன் உரையாடி, அங்கு அவர்களின் வாழ்க்கைத்தர நிலைமைகள் பற்றியும் அறிந்து கொண்டார்.

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (ITEC) திட்டத்தின் கீழ் அவர்களது தகுதி வாய்ந்த ஊழியர்களுக்கு சில புலமைப்பரிசில்களை வழங்குதல் மற்றும் இந்தியாவில் நடைபெறும் வர்த்தக கண்காட்சிகளுக்கு வர்த்தகர் சங்க உறுப்பினர்கள் சென்று வருவதற்கான உதவிகளை சாதகமாக பரிசீலிக்க துணைத்தூதுவர் ஒப்புக் கொண்டார்.

கூரைத் தகடுகள் வழங்கி வைப்பு

வவுனியா சிவபுரத்தில் வயோதிபத் தம்பதிகள் வாழும் ஓலைக் குடிசைக்கு கூரைத் தகரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப் பகுதியில் வசிக்கும் தாயொருவர் தமது வாழ்விடத்தின் நிலையினைக் கூறி கூரைத் தகரங்கள் வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பாக சுவிஸ் ரஞ்சன் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக கனடாவில் வசிக்கும் புளொட் தோழர் கோபு என அழைக்கப்படும் ஸ்ரீ தமது பிறந்தநாள் நினைவாக இக் கூரைத் தகடுகளை வழங்க உதவி செய்துள்ளார்.

கஞ்சாவுடன் இருவர் கைது

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் விஷேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அதிரடிப் படையினர் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கின் குரல்

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக சாணக்கியன் போட்டி?

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் களமிறக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் அண்மையில் (27) வவுனியாவில் இடம் பெற்றது.இதன்போதே பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜாவும், கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக இரா.

சாணக்கியனும் களமிறக்கப்பட வேண்டுமெனபாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இதன் போது குறிப்பிட்டுள்ளார். வடமாகாண சபை தேர்தலில் மாவை சேனாதிராசா களமிறக்கப்பட வேண்டும். கடந்த மாகாணசபை தேர்தலில் அவர் தனது இடத்தை விக்னேஸ்வரனுக்கு விட்டுக் கொடுத்தார். இம்முறை அப்படியான முடிவை எடுக்கக்கூடாது. அவரது தலைமையில் இளைஞர்களை களமிறக்க வேண்டும்.

கிழக்கு மாகாண சபை தேர்தலில் இரா.சாணக்கியனை முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்க வேண்டும். முஸ்லிம் மக்களும் இவரை ஆதரிப்பர். எனவே, இவரை களமிறக்கி இலகுவாக வெற்றியடையலாமெனவும் சிறிதரன் குறிப்பிட்டுள்ளார். எனினும், இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை எனவும் தெரியவருகின்றது.

க.பொ.த.சா.த மாணவர்கள்

சுகாதார நடைமுறைகள் பேணி பரீட்சையில் பங்கேற்பு

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

நாடளாவிய ரீதியில் நேற்று (01) ஆரம்பமான க.பொ.த.சா. தர பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணி,பரீட்சை நிலையங்களுக்குச் சென்றனர். கல்முனை கல்வி வலய பிரதேசத்தில், கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை மற்றும் அல் பஹ்றியா மகா வித்தியாலய மாணவர்கள், மிகவும் ஆர்வத்துடன் முகக்கவசம் அணிந்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பரீட்சைக்கு சென்றனர். இவ்வாறு வரும் மாணவர்களின் உடல் வெப்பநிலைகள் பரிசோதிக்கப்பட்ட பின்னரே பரீட்சை வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்ட காத்தான்குடி வீதிகள் நேற்று திறப்பு

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட நான்கு வீதிகள், நேற்று அதிகாலை ஐந்து மணியுடன் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. இவ்வீதிகள் கடந்த ஆண்டு டிசம்பர் (30) முதல் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டன.இந்நிலையில் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் இந்த வீதிகள் முடக்கப்பட்டிருந்தன.

மோதினார் ஒழுங்கை, கபூர் வீதி,சின்னதோனா வீதி,ரெலிகொம் வீதி முதலாம் குறுக்குத் தெரு என்பன நேற்று அதிகாலை 5 மணியுடன் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டன.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் அன்றாட அலுவல்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை பிரதேச செயலாளராக ஜே.லியாக்கத் அலி கடமையேற்பு

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, தனது கடமைகளை கல்முனை பிரதேச செயலகத்தில் நேற்று (01) பொறுப்பேற்றார்.

இதற்கு முன்னர் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராகவும் இவர், கடமையாற்றினார். இவருக்குக்கான நியமனத்தை, அரச சேவைகள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வழங்கினார்.

இலங்கை நிர்வாக சேவை முதலாம் தரத்தைச் சேர்ந்த,ஜே.லியாக்கத் அலி காரைதீவு, சம்மாந்துறை பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும், ஓட்டமாவடி, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும், கல்முனை மாநகர சபையில் ஆணையாளராகவும் இதற்கு முன்னர் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வில், கல்முனை பிரதேச முன்னாள் பிரதேச செயலாளரும் தற்போதைய இறக்காம பிரதேச செயலாளருமான எம்.எம்.நஸீர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்சான், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலீஹ், மேலதிக மாவட்ட பதிவாளர் எம்.ரி.எம்.கலீல், கிராம நிர்வாக சேவை உத்தியோகத்தர் யூ.எல். பதிறுதீன், பிரதேச ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் கே.எல்.யாஸீன் பாவா உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவுக்கு தலைவர்கள் நியமனம்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட பிரதேச அபிவிருத்திக் குழுவுக்கு தற்காலிக தலைவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் இவ்வாறு மாவட்டங்கள் தோறும் அபிவிருத்திக் குழு

தலைவர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேசங்களுக்கான கூட்டங்களை தலைமை தாங்கி நடாத்தும் பொருட்டு தலைவர்கள், மேலதிக தலைவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்

இதனடிப்படையில் ஏறாவூர் பற்று, மண்முனைப்பற்று, போரதீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பிரிவுகளுக்காக இரஜாங்க அமைச்சர் எஸ். வியழேந்திரனும், கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று, கோறளைப்பற்று தெற்கு, மண்முனை வடக்கு, மண்முனை தென்எருவில்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தனும், கோறளைப்பற்று மேற்கு, கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர் நகர் மற்றும் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமடும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

இதுதவிர ஏறாவூர் பற்று, மண்முனை

மேற்கு, மண்முனை தென்எருவில்பற்று, போரதீவு பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலப் பிரிவுகளுக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு உப தலைவராக பரமேஸ்வரம் சந்திரகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரசாந்தனின் விளக்கமறியல் நீடிப்பு

(கல்லடி குறூப்நிருபர்)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனை, மேலும் 14 நாட்களுக்கு தடுப்புக் காவலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி ரிஸ்வான் உத்தரவிட்டுள்ளார் .

கொரோனா அச்சம் காரணமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பூ.பிரசாந்தன் மீதான வழக்கு விசாரணை,

நேற்று இணையவழி மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டது.இந்த விசாரணையில், மேலும் 14 நாட்களுக்கு எதிர்வரும் (15) வரை இவரை,விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இவர், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில்,குறித்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினாரென்ற குற்றச்சாட்டின் பேரில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய பிரசாந்தன்,மீண்டும் கைதானமை குறிப்பிடத்தக்கது.

திருஞான சம்பந்தர் குருகுலத்தில் திருவள்ளுவர் குரு பூஜை

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

களுதாவளை திருஞான சம்பந்தர் குருகுலம்; மற்றும் கனடா கல்வி அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில், சைவம்போற்றி தமிழ் வளர்ப்போம் என்ற தொனிப்பொருளில், திருவள்ளுவரின் குருபூஜை நடைபெற்றது.

திருஞான சம்பந்தர் குருகுலத்தின் இல்லத் தலைவர் ப.குணசேகரன் தலைமையில் இப்பூஜை நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருவள்ளுவரின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. இல்ல மாணவர்களால் விசேட பூஜை வழிபாடுகளும் நடைபெற்றன.அத்துடன் திருவள்ளுவரின் சிறப்பு பற்றியும், திருக்குறள் விளக்கம் குறித்தும் மாணவர்கள் விளக்கமளித்தனர்.

தேசிய அறநெறி ஆக்கத்திறன் போட்டியில் கதாப்பிரசங்கத்தில் முதலிடம் பெற்ற, கல்முனை மாணவி கிருபைராஜா ஹர்ஷனாவின் கதாப்பிரசங்கம், பல்கலைக் கழக மாணவன் க.டினோன்னின் வீணை இசை, இளம் பேச்சாளர் தமிழகரன் சனாதனனின் விசேட சொற்பொழிவு உட்பட திருஞான சம்பந்தர் குருகுலத்தின் நிர்வாக உறுப்பினர்களின் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

வளத்தாப்பிட்டியில் காட்டு யானைகள் கூட்டம்

(காரைதீவு குறூப் நிருபர்)

கல்முனை அம்பாறை பிரதான வீதியிலுள்ள வளத்தாப்பிட்டியில் நேற்று (01) காட்டு யானைகள் கூட்டம் ஊடறுத்துச் சென்றன. இதனால் போக்குவரத்து சிலமணி நேரம் ஸ்தம்பிதமடைந்தது. வயல் அறுவடைகள் ஆரம்பித்துள்ளதால் உணவு தேடி இந்த யானைக் கூட்டம் இப்பகுதியில் படையெடுக்கின்றன.

கடந்தவாரம் வளத்தாப்பிட்டியில் இளம் விவசாயி ஒருவர் யானை தாக்கி உயிரிழந்தார்.

மின்சாரம் தாக்கிய ஊழியர் காயம் காப்பாற்றியவரும் வைத்தியசாலையில்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

மின்சாரம் தாக்கிய ஊழியரைக் காப்பாற்றச் சென்றவரும்,மின்சாரம் தாக்கியவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மீராவோடை பகுதியில் அமைந்துள்ள, இறால் பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்த ஊழியர் ஒருவரே மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானார்.இதனை அவதானித்த இறால் பண்ணை உரிமையாளர், அவரைக் காப்பாற்றச் சென்ற போது, தடுக்கி விழுந்து காலில் உடைவு ஏற்பட்டது.

பின்னர், சத்திர சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில், மின்சாரம் தாக்கிய நபர் உயிராபத்தின்றி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மண்முனைப்பற்று பிரதேச சபை தவிசாளராக தருமரட்ணம் தெரிவு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மண்முனைப் பிரதேச சபை புதிய தவிசாளராக தருமரட்ணம் தயானந்தன் பத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மண்முனைப் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு நேற்று (01)திங்கட்கிழமை சபையின் மண்டபத்தில், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது. 17 உறுப்பினர்களைக் கொண்ட மண்முனைப் பிரதேச சபையில், புதிய தவிசாளரை தெரிவு செய்யும் கூட்டத்துக்கு 16 உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர்.

தவிசாளர் தெரிவுக்காக, தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் சாம்பசிவம் நகலேஸ்வரன், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தருமரட்ணம் தயானந்தன் ஆகியோரின் பெயர்கள் முன் மொழியப்பட்டன.

பகிரங்கமாக இடம் பெற்ற வாக்கெடுப்பில்,

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தருமரட்னம் தயானந்தனுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மற்றும் சுயேட்சைக்குழு உறுப்பினர், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்; தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் சாம்பசிவம் நகுலேஸ்வரனுக்கு ஐந்து உறுப்பினர்கள் வாக்களித்தனர். இதனடிப்படையில் மண்முனைப் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தருமரட்னம் தயானந்தன் 10 உறுப்பினர்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டார்.

வாக்களிப்பில் முன்னாள் தவிசாளர் மகேந்தரலிங்கம் கலந்து கொள்ள வில்லையென அறிவித்தார்.

புதிய தவிசாளரை தெரிவு செய்யும் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர், பிரகாஸ் மற்றும் மண்முனைப் பிரதேச சபையின் செயலாளர் சர்வேஸ்வரன் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

புதிய தவிசாளர் தெரிவையடுத்து அங்கு வருகை தந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திர காந்தன், புதிய தவிசாளருக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அத்துடன் அவரை தெரிவு செய்த தமிழ் முஸ்லிம் உறுப்பினர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

தெற்காசியாவில் கொவிட்-19 இலிருந்து விடுபட்ட முதலாவது நாடாக இலங்கை மாறும்

பசில் ராஜபக்ஷ

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தராதரங்களுக்கு அமைவாக ஒட்டுமொத்த நாட்டிலும் தடுப்பூசியை ஏற்றவுள்ளதுடன், தெற்காசியாவில் கொவிட்19 இலிருந்து விடுபட்ட முதலாவது நாடாக இலங்கையை உருவாக்குவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் சபைத் தலைவரான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.



கொவிட்19க்கு எதிராகப் போராட உதவும் முகமாக ரூபா 20 மில்லியனுக்கும் மேற்பட்ட பெறுமதியான பீசிஆர் உபகரணம் மற்றும் சோதனைக் கருவிகளை கொழும்பு துறைமுகநகரம் நிறுவனத்தின் நன்கொடை வழங்கும் நிகழ்வு அண்மையில் அலரிமாளிகையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டபோதே பசில் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார். சவால் மிக்க ஒரு காலகட்டத்தின் மத்தியில் ரூபா 20 மில்லியனுக்கும் மேற்பட்ட பெறுமதிகொண்ட பிசிஆர் சோதனை இயந்திரம் மற்றும் 5000 பிசிஆர் சோதனைக் கருவிகளை அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் தராதரங்களுக்கு அமைவாக ஒட்டுமொத்த நாட்டிலும் கொவிட்19 தடுப்பூசியை ஏற்றி கொவிட்19ஐ இல்லாதொழிக்கப்பட்ட நாடு என்ற அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

CHEC Port City Colombo (Pvt) Ltd இன் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜியாங் ஹவுலியாங் சார்பில் துணை முகாமைத்துவப் பணிப்பாளரான யூ யெக்கிங் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் சபைத் தலைவரான பசில் ராஜபக்ஷவிடம் இந்த உபகரணத்தை கையளித்தார். கொழும்பு துறைமுக நகரம் தக்கதருணத்தில் வழங்கிய இந்த நன்கொடையை ஏற்றுக்கொண்டதுடன் தமது நன்றியையும் தெரிவித்தார்.

இவற்றை உடனடியாக பாவனைக்கு எடுத்துக்கொள்ளும் வகையில் பீசிஆர் சோதனை இயந்திரம் மற்றும் சோதனைக் கருவிகளை ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோயியல் மற்றும் கொவிட்19 தடுப்பு நடவடிக்கைகளுக்கான இராஜாங்க அமைச்சிடம் அவர் கையளித்தார்.

இதனை பெற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சரான வைத்தியர் சுதர்ஷனி பெரனாண்டோபுள்ளே பீசிஆர் தொடர்பான சோதனை எண்ணிக்கை தற்போது நாளாந்தம் அதிகரிக்கப்பட்டுவரும் நிலையில், இந்த பிசிஆர் இயந்திரம் முதலில் கம்பஹா மாவட்டத்தில் பொருத்தப்படும் என குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோயியல் மற்றும் கொவிட்19 தடுப்பு நடவடிக்கைகளுக்கான இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, ஔடத உற்பத்திகள், வழங்குகை மற்றம் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சரான சன்ன ஜயசுமன, அறநெறிப் பாடசாலைகள்,பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சரான விஜிதபேருகொட, ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோயியல் மற்றும் கொவிட் 19 தடுப்பு நடவடிக்கைகளுக்கான இராஜாங்க அமைச்சின் செயலாளரான வைத்தியர் அமால் ஹர்ஷ டி சில்வா மற்றும் கொழும்பு துறைமுக நகரத்தின் செயற்திட்ட முகாமைத்துவத்திற்கான நிறைவேற்று அதிகாரப் பணிப்பாளரான ராஜா எதிரிசூரிய, அதன் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறைப் பணிப்பாளரான திருமதி யமுனா ஜெயரட்ண வெகுசன தொடர்பாடல்களுக்கான தலைமை அதிகாரி காசப்ப செனாரத் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பாடசாலை இணையத்தளம் அறிமுகம்

புத்தளம் தினகரன் நிருபர்

"இணைய உலகிற்கான இறக்கைகள்" எனும் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளுக்கான இணையத்தளம் தயாரிக்கப்பட்டு வெளியிடும் வைபவம் பரவலாக இடம்பெற்று வருகின்றன. புத்தளம் வலயத்திற்குட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றான புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி றஜியா சபியுத்தீன் இதனை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலை உதவி அதிபர், பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளின் முயற்சியின் விளைவாக பாடசாலைக்கான வலைத்தளமானது உருவாக்கப்பட்டு இந்நிகழ்வில் அனைவரின் பாவனைக்கும் விடப்பட்டது.

இந்நிகழ்வில் கணனி கழகத்தினால் நடாத்தப்பட்ட, மும்மொழியிலும் விரைவாக தட்டச்சு செய்தல், வினாவிடை போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு இல்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அபிவிருத்திக்குழுக்கூட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில் பிரதேச சபையின் உறுப்பினர்கள் அனைவரும் அழைக்கப்பட வேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

22 உறுப்பினர்களை கொண்ட பிரதேச சபையில் கட்சிரீதியாக ஒரு உறுப்பினர் கலந்துகொள்ளலாம் என பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழரசு கட்சியின் ஆளுகையின் கீழ் உள்ள பிரதேச சபையில் பத்திற்கு மேற்பட்ட தமிழரசு கட்சி உறுப்பினர்கள் காணப்படுகின்றார்கள். தங்கள் வட்டாரங்களில் உள்ள பிரச்சினைகளை பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் எடுத்துக்கூற முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக்குழுகூட்டத்தில் சகல உறுப்பினர்களும் கலந்துகொள்ள பிரதேச அபிவிருத்திக்குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இலஞ்சம் பெற்ற வனவள அதிகாரி கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அரியப்பட்ட மரத்துண்டுகளுடன் போக்குவரத்து செய்யும் உரிமத்தை வழங்க ஒரு நபரிடமிருந்து 50 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்ற வனவள அதிகாரி ஒருவரை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை அதிகாரிகள் கலென்பிந்துனுவெவ பகுதியில் கடந்த 26ம் திகதி கைது செய்தனர்.

கலென்பிந்துனுவெவ பகுதியில் வசித்து வரும் நபர் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய அவ்வதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். கஹகட்டகஸ்திகிலிய வன அதிகாரி அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு பணியாற்றி வந்த கலென்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த வனவள அதிகாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கெக்கிராவ வீதி கலென்பிந்துனுவெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட நபரொருவர் அரியப்பட்ட மரத் துண்டுகளை கொண்டு செல்வதற்கு குறித்த அதிகாரி ஐம்பதாயிரம் ரூபா இலஞ்சம் கேட்டுள்ளதுடன் அதில் 30 ஆயிரம் ரூபாய் முன்கூட்டியே பெற்றுக்கொண்டுள்ளார். மிகுதிப் பணத்தை குறித்த அதிகாரியின் வீட்டில் வைத்து பெற்றுக்கொள்ளும் போதே அதிகாரியை இலஞ்சம் மற்றும் ஊழல் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள குறித்த அதிகாரி அன்றைய தினம் இரவே மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இழப்பீட்டு உதவிகள் ஆறுதலே தவிர இழப்பை ஈடுசெய்யக்கூடியவை அல்ல

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன்

இழப்பீட்டு உதவிகள் பொதுமக்களை ஆறுதல்படுத்தக் கூடியதே தவிர பொதுமக்களின் இழப்பை ஈடுசெய்யக்கூடியவை அல்ல என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

இழப்பீட்டுக்கான தேசிய செயலகத்தால் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உயிரிழப்புக்கள், சொத்து இழப்புக்கள், ஆலய புனரமைப்பு பணிகளுக்காக கொடுப்பனவுகள் நேற்று (01) காலை மாவட்டசெயலக கேட்போர் கூடத்தில் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் அரசாங்க அதிபர் மகேசன் உரையாற்றும் போது

இழப்பீட்டிற்கான தேசிய செயலகத்தால் வழங்கப்படும் இழப்பீட்டு உதவிகள் பொதுமக்களை ஆறுதல்படுத்தக் கூடியதே தவிர பொதுமக்களின் இழப்பை ஈடுசெய்யக்கூடியதல்ல. இவ் இழப்பீட்டுக் கொடுப்பனவை பொதுமக்கள் தமது வாழ்க்கையின் முன்னேற்றதிற்கு பயன்படுத்துதல் வேண்டுமெனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 181 பயனாளிகளுக்கு இவ் இழப்பீடு வழங்கிவைக்கப்படுகின்றன.மேலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு சலுகை அடிப்படையில் நான்கு வீத வட்டியுடன் சுயதொழில் கடன் திட்டம் மற்றும் வீடு புனரமைப்புக்கான கடன் திட்டமும் வழங்கப்படுகின்றன.

தென்னங்கன்றுகளை மானிய விலையில் பெற புதிய அறிவுறுத்தல்கள்

புத்தளம் தினகரன் நிருபர்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் மூலமாக தென்னங்கன்றுகளை மானிய விலையில் பெற்றுக்கொள்வது தொடர்பாக பொது மக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் போல் தென்னங்கன்றுகளை நேரடியாக தென்னை பயிர்ச்சபையின், தென்னை நாற்று மேடையில் மானிய விலையில் பெற்றுக்கொள்ள முடியாது.

இம் முறைக்கு பதிலாக பிரதேசத்துக்கு பொறுப்பான தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் விண்ணப்ப படிவங்களை பெற்று பூரணப்படுத்தி வழங்கப்பட்ட பின் அவரின் நேரடி கள விஜய அவதானிப்பின் பின்னரே மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்படும்.

உறையிடப்பட்ட தென்னங்கன்று 200 ரூபாவுக்கும், உறையிடப்படாத தென்னங்கன்று 125 ரூபாவுக்கும் மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இது தவிர தென்னை தோட்டங்களை அபிவிருத்தி செய்ய தோட்ட உரிமையாளர்களுக்கு பல்வேறு விதமான திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு தோட்ட உரிமையாளருக்கு 10 இலட்சம் ரூபா வரை 8 வீத வட்டி அடிப்படையில் கடனும் வழங்கப்படவுள்ளது. சகல விதமான மானியங்களும் வரையறுக்கப்பட்டதும் நிபந்தனைகளுக்குட்பட்டதுமாகும்.

மேலதிக விபரங்களுக்கு பிரதேசத்துக்கு பொறுப்பான தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

28.02.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 611,849
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 25,242,160.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 26
www.nlb.lk

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2707 சீட்டிழுப்பு திகதி 28/02/2021
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 03 12 69 78

பரிசு	கட்டமைப்பு	பரிசுத்தொகை	வெற்றியாளர் எண்ணிக்கை
1 பரிசு	4 இலக்கங்கள் சரியாயின்	ரூ.1,000,000.00	01
2 பரிசு	ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின்	ரூ. 100,000.00	07
3 பரிசு	3 இலக்கங்கள் சரியாயின்	ரூ. 2,000.00	138
4 பரிசு	ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின்	ரூ. 1,000.00	372
5 பரிசு	2 இலக்கங்கள் சரியாயின்	ரூ. 100.00	8,508
6 பரிசு	ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின்	ரூ. 40.00	5,647
7 பரிசு	1 இலக்கம் சரியாயின்	ரூ. 20.00	139,369
8 பரிசு	ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின்	ரூ. 20.00	25,527

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 179,569
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,722,600.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,499,673.60
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk
ජාතික ලොටරිය මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

சீட்டிழுப்பு இலக்கம் 4412 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 28-02-2021
வெற்றி எழுத்து D வெற்றி இலக்கங்கள் 4 9 0 4 5 6
பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

1.ஆம் பரிசு	4 9 0 4 5 6	ரூ. 2,000,000/-	01
2ஆம் பரிசு	9 0 4 5 6	ரூ. 100,000/-	11
3.ஆம் பரிசு	0 4 5 6	ரூ. 10,000/-	105
4.ஆம் பரிசு	4 5 6	ரூ. 1,000/-	1,097
5.ஆம் பரிசு	5 6	ரூ. 100/-	10,914
6.ஆம் பரிசு	6	ரூ. 20/-	108,305

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

7.ஆம் பரிசு	4 9 0 4 5	ரூ. 10,000/-	09
8.ஆம் பரிசு	4 9 0 4	ரூ. 1,000/-	111
9.ஆம் பரிசு	4 9 0	ரூ. 100/-	1,100
10.ஆம் பரிசு	4 9	ரூ. 50/-	10,750
11.ஆம் பரிசு	D	ரூ. 20/-	43,368

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை - ரூ.10,220,360.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை கட்டாயமானது. வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதியில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.18,566,164.00
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

ஒரு திரி ஜம்பத
தரு திரி சம்பத DARU DIRI SAMPATHA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 28
திகதி 2021.02.28
வெற்றி இலக்கங்கள் D
வெற்றி இலக்கங்கள் 04 51 61 65

Prize	Prize Structure	Prize Money	No. of Winners
01 Prize	4 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின்	500,000/-	01
02 Prize	3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	100,000/-	03
03 Prize	3 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின்	1,000/-	47
04 Prize	2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	200/-	131
05 Prize	2 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின்	100/-	3,510
06 Prize	1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	40/-	2,857
07 Prize	1 இலக்கம் மட்டும் பொருந்துமாயின்	20/-	71,478
08 Prize	ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின்	20/-	16,339

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,094,820.00
அடுத்த சீட்டிழுப்புக்கான ஸ்டார் சுப்பர் பரிசு ரூ. 7,164,861.20
ஐந்து இலட்சத்துக்கு அதிகமான பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானது. வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
ஜாதிக லொடரிஸ் போர்ட் தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

தன நிதானய உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 28/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் - 449
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 21 42 50 52
ஆயிரம் முறை 1197

	கட்டமைப்பு	பரிசுகள்	ntw;wpahsu;fs; vz;zpf;if
1 ஆம் பரிசு	4 இலக்கங்கள் சரியாயின்	ரூ. 1,000,000.00	-
2 ஆம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின்	ரூ. 100,000.00	03
3 ஆம் பரிசு	3 இலக்கங்கள் சரியாயின்	ரூ. 3,000.00	87
4 ஆம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின்	ரூ. 1,000.00	161
5 ஆம் பரிசு	2 இலக்கங்கள் சரியாயின்	ரூ. 100.00	4,573
6 ஆம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின்	ரூ. 60.00	2,991
7 ஆம் பரிசு	1 இலக்கம் சரியாயின்	ரூ. 20.00	76,767
8 ஆம் பரிசு	ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின்	ரூ. 20.00	14,395

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,300,000.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 99,095
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை 84,774,417.60
• ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது
• பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது
• சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி பெற்ற சீட்டுகள் செல்லுபடியாகும்.
ஜாதிக லொடரிஸ் போர்ட் தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

உத்தியோகபூர்வ முடிவுகள்
சிவன
உங்களுக்கு வீடு - கைகளில் காசு
திகதி 28/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 318
ஆங்கில எழுத்து S வெல்லப்பட்ட இலக்கங்கள் 22 27 33 50

	பரிசுக் கட்டமைப்பு	பரிசுகள்	வெற்றியாளர் எண்ணிக்கை
சுப்பர் பரிசு	ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் சரியாக இருப்பின்	ரூ. 14,000,000/-	-
1ம் பரிசு	4 இலக்கங்களும் சரியாக இருப்பின்	ரூ. 1,000,000/- விதம்	-
2ம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின்	ரூ. 100,000/- விதம்	02
3ம் பரிசு	3 இலக்கங்கள் சரியாக இருப்பின்	ரூ. 1,000/- விதம்	68
4ம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின்	ரூ. 200/- விதம்	141
5ம் பரிசு	2 இலக்கங்கள் சரியாக இருப்பின்	ரூ. 100/- விதம்	3,631
6ம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின்	ரூ. 50/- விதம்	2,032
7ம் பரிசு	1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின்	ரூ. 20/- விதம்	49,558
8ம் பரிசு	ஆங்கில எழுத்து மட்டும் சரியாக இருப்பின்	ரூ. 20/- விதம்	7,616

இச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 1,904,380.00
ரூ.500,000.00 மற்றும் அதற்குக் கூடிய பரிசுகள் அரச வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்படும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
ஜாதிக லொடரிஸ் போர்ட் தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
Office: No.32,Deshamanya N.W.J.Mudalige Mw, Colombo 01.Sri Lanka
Tel: 011 4607000.011 2324324
Fax: 011 4669416
www.nlb.lk

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

கிழக்கு மாகாணம் - மார்ச் 2021

பிரதேசம் அம்பாறை

மின்பாவனையாளர் சேவை நிலையம் உஹண

2021.03.17 08.30-17.00
இடம்
கொனாகொல்ல, கலபிட்டகல

2021.03.20 08.30-17.00
இடம்
பண்டாரதூவ

2021.03.23 08.30-17.00
இடம்
கொனாகொல்ல இருந்து பியங்கல

2021.03.27 07.30-17.00
இடம்
பண்டாரதூவ

2021.03.30 08.30-17.00
இடம்
கொனாகொல்ல இருந்து பியங்கல

மின்பாவனையாளர் சேவை நிலையம் வீரகொட

2021.03.13 08.30-17.00
இடம்
சுஹதகம கிராமம்

2021.03.13 08.30-17.00
மஜீத்புரம், புத்தங்கல, 19ம் கொலனி, 18ம் கொலனி, உதயபுர, ரஜகம, கோமாரி குமாரிகம தயாபுர, வலதாபிட்டிய, மல்லிகைத்தீவு, கைத்தொழில் பகுதி

2021.03.15 08.30-17.00
இடம்
கோன்கஸ்ஹந்திய, குமாரிகம, கோமாரிய

2021.03.17 08.30-17.00
இடம்
சுஹதகம கிராமம்

2021.03.22 08.30-17.00
இடம்
26ம் கொலனி

2021.03.24 08.30-17.00
இடம்
சுஹதகம கிராமம்

2021.03.27 08.30-17.00
இடம்
சுஹதகம கிராமம்

2021.03.29 08.30-17.00
இடம்
பராக்ரம

2021.03.31 08.30-17.00
இடம்
26ம் கொலனி

மின்பாவனையாளர் சேவை நிலையம் அம்பாறை

2021.03.21 08.30-17.00
இடம்
கெமுனுபுர, கரங்காவ, கலஹிட்டியாகொட

மின்பாவனையாளர் சேவை நிலையம் மஹாஓயா

2021.03.16 08.30-17.00
இடம்
பதியத்தலாவ, மீகஸ்வத்தை, கெகிலுல்ல, ஹோலிகே

2021.03.16 08.30-17.00
இடம்
பொலலேபெத்த

2021.03.18 08.30-17.00
இடம்
பதியத்தலாவ, மீகஸ்வத்தை, கெகிலுல்ல, ஹோலிகே

2021.03.23 08.30-17.00
இடம்
பதியத்தலாவ, மீகஸ்வத்தை, கெகிலுல்ல, ஹோலிகே

2021.03.25 08.30-17.00
இடம்
பதியத்தலாவ, மீகஸ்வத்தை, கெகிலுல்ல, ஹோலிகே

2021.03.30 08.30-17.00
இடம்
பதியத்தலாவ, மீகஸ்வத்தை, கெகிலுல்ல, ஹோலிகே

மின்பாவனையாளர் சேவை நிலையம் அக்கறைபற்று

2021.03.11 08.30-17.00
இடம்
பனங்காடு, கோளாவில் சாகம வீதி, இத்தியடி, தீவுக்காலை, கபடாபிட்டி கண்ணகிபுரம்

2021.03.18 08.30-17.00
இடம்
40ம் கட்டை, தம்பிலுவில், தம்பட்டை, திருக்கோவில், விநாயகபுரம், குடிநிலம், காயத்ரி கிராமம்

2021.03.20 08.30-17.00
இடம்
ஆலயடிவேம்பு, வாச்சிக்குடா, பொத்துவில் வீதி, பதுர் நகர்

மின்பாவனையாளர் சேவை நிலையம் ஹிங்குரான

2021.03.16 08.30-17.00
இடம்
இறக்காமம், வரிபத்தான்சேனை, தீகவாபிய

2021.03.18 08.30-17.00
இடம்
முவன்கல, ஹிங்குரான

2021.03.19 08.30-17.00
இடம்
பக்மிட்டியாவ, தொட்டம

2021.03.20 08.30-17.00
இடம்
முவன்கல, ஹிங்குரான

2021.03.22 08.30-17.00
இடம்
பக்மிட்டியாவ, தொட்டம

2021.03.24 08.30-17.00
இடம்
தீகவாபிய, இறக்காமம்

2021.03.25 08.30-17.00
இடம்
முவன்கல, ஹிங்குரான

2021.03.26 08.30-17.00
இடம்
பக்மிட்டியாவ, தொட்டம

2021.03.27 08.30-17.00
இடம்
இறக்காமம், வரிபத்தான்சேனை,

மின்பாவனையாளர் சேவை நிலையம் இங்கினியாகல

2021.03.13 08.30-17.00
இடம்
அம்பகஹவெல

2021.03.16 08.30-17.00
இடம்
தேவாலஹிந்த, வடினாகல, கொடாகொட, புத்தம, பள்ளேவெல

2021.03.18 08.30-17.00
இடம்
பொல்வத்த, நாமல்ஓயா, நாமல்தலாவ

2021.03.22 08.30-17.00
இடம்
கொக்னாஹர, கெத்சிறிகம

2021.03.25 08.30-17.00
இடம்
இங்கினியாகல

2021.03.31 08.30-17.00
இடம்
பொல்வத்த, நாமல்ஓயா, நாமல்தலாவ

மின்பாவனையாளர் சேவை நிலையம் பொத்துவில்

2021.03.17 08.30-17.00
இடம்
மஹாகளுகொல்ல, 20ம் கட்டை

2021.03.30 08.30-17.00
இடம்
அறுகம்பே, உள்ளை, பாணம, சர்வோதயபுரம், பசரச்சேனை, குருலன்பொக்குன

பிரதேசம் மட்டக்களப்பு

மின்பாவனையாளர் சேவை நிலையம் வாழைச்சேனை

2021.03.15 09.00-16.00
இடம்
நாசிவன்தீவு

2021.03.16 09.00-16.00
இடம்
பன்சல வீதி, சந்தை, புதுக்குடியிருப்பு, மருதநகர்

2021.03.17 09.00-16.00
இடம்
கறுவாங்கேனி, கிண்ணயடி, வாழைச்சேனை, சுங்கங்கேனி

2021.03.18 08.30-16.00
இடம்
ஓட்டமாவடி, வாழைச்சேனை, தியாவட்டுவான்

2021.03.20 09.00-16.00
இடம்
ஓட்டமாவடி, செம்மண்ணோடை

2021.03.24 09.00-16.00
இடம்
கறுவாங்கேனி, கிண்ணயடி, வாழைச்சேனை, சுங்கங்கேனி

2021.03.25 08.30-16.00
இடம்
ஓட்டமாவடி, வாழைச்சேனை, தியாவட்டுவான்

2021.03.27 08.30-16.00
இடம்
மாங்கேனி, காயங்கேனி, நாசிவன்தீவு

2021.03.31 09.00-16.00
இடம்
கறுவாகேனி, கிண்ணயடி, வாழைச்சேனை, சுங்கங்கேனி

மின்பாவனையாளர் சேவை நிலையம் களுவாஞ்சிக்குடி

2021.03.15 09.00-17.00
இடம்
புதுக்குடியிருப்பு, கிரான்குளம்

2021.03.16 08.30-16.00
இடம்
களுவாஞ்சிகுடி, கல்லாறு, ஒந்தாச்சிமடம்

2021.03.17 09.00-17.00
இடம்
பண்டாரியாவெளி, படையாண்டவெளி, மகிழடித்தீவு

2021.03.18 09.00-17.00
இடம்
தும்பங்கேனி, திகிலிவெட்டை, பிரிவு 40, 40ம் வெட்டை, தாந்தாமலை

2021.03.19 09.00-17.00
இடம்
வெள்ளாவெளி இருந்து பக்கிஎல

2021.03.19 09.00-17.00
இடம்
காக்காச்சிவட்டை சின்னவத்தை

2021.03.20 08.30-16.00
இடம்
களுவாஞ்சிக்குடி நகரப்பகுதி

2021.03.22 08.30-16.00
இடம்
புதுக்குடியிருப்பு, கிரான்குளம்

2021.03.23 08.30-16.00
இடம்
களுவாஞ்சிகுடி, கல்லாறு, ஒந்தாச்சிமடம்

2021.03.24 09.00-17.00
இடம்
பண்டாரியாவெளி, படையாண்டவெளி, மகிழடித்தீவு

2021.03.25 08.30-16.00
இடம்
மண்டூர், வெள்ளாவெளி, கோவில்போறதீவு

2021.03.27 09.00-17.00
இடம்
பளுகாமம், முனைத்தீவு, பெரியபோறதீவு

2021.03.29 08.30-16.00
இடம்
புதுக்குடியிருப்பு, கிரான்குளம்

2021.03.30 08.30-16.00
இடம்
களுவாஞ்சிகுடி, கல்லாறு, ஒந்தாச்சிமடம்

2021.03.31 09.00-17.00
இடம்
பண்டாரியாவெளி, படையாண்டவெளி, மகிழடித்தீவு

மின்பாவனையாளர் சேவை நிலையம் கிரான்

2021.03.16 09.00-16.00
இடம்
கிரான், புலிபாய்ந்தகல், தரவ, குடும்பிமலை, பொண்டுகல்சேனை, கிம்புலுதோனா, பாலையடிதோனா

2021.03.18 09.00-16.00
இடம்
கிரான், பரங்கியாமடு, சந்திவெளி

2021.03.23 09.00-16.00
இடம்
கிரான், கிம்புலுத்தோனா, பாலையடிதோனா

2021.03.23 08.30-16.00
இடம்
தேவாபுரம் பகுதி

2021.03.25 09.00-16.00
இடம்
கிரான், பரங்கியாமடு, சந்திவெளி, கிம்புலுத்தோனா, பாலையடிதோனா

2021.03.26 09.00-16.00
இடம்
சித்தாண்டி, மெரகொட்டான்சேனை, சந்திவெளி

2021.03.30 09.00-16.00
இடம்
கிரான், கிம்புலுத்தோனா, பாலையடிதோனா

மின்பாவனையாளர் சேவை நிலையம் காத்தான்குடி

2021.03.24 08.30-16.00
இடம்
தாளங்குடா, மண்முனை, ஒல்லிக்குளம், பாலமுனை, கர்பல

2021.03.27 09.00-16.00
இடம்
டெலிக்கொம் வீதி, பரீட் நகரம் றிஸ்வி நகரம் மீன்பிடி கூட்டுத்தாபனம்

2021.03.27 08.30-16.00
இடம்
புதிய காத்தான்குடி, டெலிக்கொம் வீதி, FC வீதி

2021.03.31 08.30-16.00
இடம்
தாளங்குடா, மண்முனை, ஒல்லிக்குளம், பாலமுனை, கர்பல

மின்பாவனையாளர் சேவை நிலையம் மட்டக்களப்பு நகரம்

2021.03.13 08.30-16.00
இடம்
நாவலடி, கல்லடி, பூநெச்சிமுனை, மியூசிக் கல்லூரி

2021.03.20 09.00-17.00
இடம்
வவுனதீவு இருந்து பஸ்நிலைய பார்க்

2021.03.22 09.00-16.00
இடம்
கல்லடி, மியூசிக் கல்லூரி

2021.03.23 08.30-16.00
இடம்
ஜெயந்திபுரம், மாமாங்கம், கருவேப்பங்கேனி, புன்னைச்சேனை

2021.03.29 08.30-16.00
இடம்
ஜெயந்திபுரம், மாமாங்கம், கருவேப்பங்கேனி, புன்னைச்சேனை

மின்பாவனையாளர் சேவை நிலையம் வாகரை

2021.03.19 09.00-16.00
இடம்
கிரிமிச்சை, மதுரங்குளம்

மின்பாவனையாளர் சேவை நிலையம் ஏறாவூர்

2021.03.15 08.30-16.00
இடம்
கரடியனாறு, இராஜபுரம், கித்துல், கோப்பாவெளி, புல்லுமலை பகுதி

2021.03.16 08.30-16.00
இடம்
கரடியனாறு, இலுப்படிச்சேனை, மயிலவெட்டுவான், பண்குடாவெளி, செங்கலடி பகுதி

2021.03.16 09.00-17.00
செங்கலடி இருந்து கரடியனாறு சந்தி, தம்பலம்வெளி, தலவாய், பண்குடாவெளி

2021.03.17 08.30-16.00
இடம்
தலவாய், ஐயங்கேனி

2021.03.18 08.30-16.00
இடம்
வந்தாறுமூலை, செங்கலடி

2021.03.19 08.30-16.00
இடம்
கரடியனாறு, இராஜபுரம், கித்துல், கோப்பாவெளி, புல்லுமலை பகுதி

2021.03.19 08.30-16.00
இடம்
கரடியனாறு, இலுப்படிச்சேனை, மயிலவெட்டுவான், பண்குடாவெளி, செங்கலடி பகுதி

2021.03.20 08.30-16.00
இடம்
மயிலம்பாவெளி, சவுக்கடி, ஆறுமுகத்தான்குடியிருப்பு, தன்னாமுனை.

2021.03.22 08.30-16.00
இடம்
கரடியனாறு, இராஜபுரம், கித்துல், கோப்பாவெளி, புல்லுமலை பகுதி

2021.03.22 08.30-16.00
இடம்
கரடியனாறு, இலுப்படிச்சேனை, மயிலவெட்டுவான், பண்குடாவெளி, செங்கலடி பகுதி

2021.03.24 08.30-16.00
இடம்
தலவாய், ஐயங்கேனி

2021.03.25 08.30-16.00
இடம்
வந்தாறுமூலை, செங்கலடி

2021.03.26 09.00-17.00
இடம்
கரடியனாறு சந்தி இருந்து உன்னிச்சை

2021.03.26 08.30-16.00
இடம்
கரடியனாறு, இராஜபுரம், கித்துல், கோப்பாவெளி, புல்லுமலை பகுதி

2021.03.27 08.30-16.00
இடம்
சவுக்கடி பகுதி

2021.03.29 08.30-16.00
இடம்
கரடியனாறு, இராஜபுரம், கித்துல், கோப்பாவெளி, புல்லுமலை பகுதி

2021.03.29 08.30-16.00
இடம்
கரடியனாறு, இலுப்படிச்சேனை, மயிலவெட்டுவான், பண்குடாவெளி, செங்கலடி பகுதி

2021.03.31 08.30-16.00
இடம்
தலவாய், ஐயங்கேனி

பிரதேசம் திருகோணமலை

மின்பாவனையாளர் சேவை நிலையம் மூதூர்

2021.03.15 08.00-17.00
இடம்
தோப்பூர், அல்லைநகர், இக்பால் நகர், மொடல் கிராமம், செல்வாநகர், சுமேதங்கரபுர, சேருவில

2021.03.19 08.00-17.00
இடம்
உப்புகச்சிமடு, ஜாயா வீதி

2021.03.23 08.00-17.00
இடம்
தோப்பூர், அல்லைநகர், இக்பால் நகர், மொடல் கிராமம், செல்வாநகர், சுமேதங்கரபுர, சேருவில்

2021.03.30 08.00-17.00
இடம்
தோப்பூர், அல்லைநகர், இக்பால் நகர், மொடல் கிராமம், செல்வாநகர், சுமேதங்கரபுர, சேருவில்

மின்பாவனையாளர் சேவை நிலையம் திருகோணமலை நகரம்

2021.03.15 08.00-17.00
இடம்
பிறிமா தொழிற்சாலை

2021.03.16 08.00-17.00
இடம்
சீனக்குடா பகுதி, 5ம்கட்டை பகுதி, 4ம் கட்டை பகுதி, ஆண்டாங்குளம், கப்பல்துறை பகுதி,

2021.03.17 08.00-17.00
இடம்
தேசிய இளைஞர் பிரிவு (சர்தாபுர)

2021.03.18 08.00-17.00
இடம்
பாலையூத்து புகையிரதக்கடவை பகுதி, பூம்புகார் வீதி, முகமதியா நகர், பனந்தோட்டம் (பாலையூத்து)

2021.03.23 08.00-17.00
இடம்
தேசிய இளைஞர் பிரிவு (சர்தாபுர)

2021.03.24 08.00-17.00
இடம்
சீனக்குடா பகுதி, 5ம்கட்டை பகுதி, 4ம் கட்டை பகுதி, ஆண்டாங்குளம், கப்பல்துறை பகுதி

2021.03.25 08.00-17.00
இடம்
திருகோணமலை நகரப்பகுதி

2021.03.26 08.00-17.00
இடம்
பிறிமா தொழிற்சாலை

2021.03.27 08.00-17.00
இடம்
மஹமாய மாவத்தை, 4ம் கட்டை, ஹொட்பே, தீவரகம்மான, சங்கம, தானியகம சீனக்குடா

2021.03.28 08.00-17.00
இடம்
பிறிமா தொழிற்சாலை மற்றும் திருகோணமலை நகரப்பகுதி

2021.03.28 08.00-17.00
இடம்
டோக்யோ, சீனக்குடா பகுதி, 5ம்கட்டை பகுதி, 4ம் கட்டை பகுதி, ஆண்டாங்குளம், கப்பல்துறை பகுதி

2021.03.29 08.00-17.00
இடம்
டோக்யோ

மின்பாவனையாளர் சேவை நிலையம் நிலாவெளி

2021.03.12 08.00-17.00
இடம்
நிலாவெளி முழுப் பிரதேசம்

2021.03.22 08.00-17.00
இடம்
நிலாவெளி முழுப் பிரதேசம்

2021.03.27 08.00-17.00
இடம்
நிலாவெளி முழுப் பிரதேசம்

மின்பாவனையாளர் சேவை நிலையம் கிண்ணியா

2021.03.15 08.00-17.00
இடம்
முனைச்சேனை, குறிஞ்சாகேனி

2021.03.16 08.00-17.00
இடம்
பாலம்பட்டாறு பகுதி, தம்பலகாமம் பகுதி

2021.03.19 08.00-17.00
இடம்
உப்பாறு, கிண்ணியா பழைய வைத்தியசாலை சந்தி பகுதி, அன்னல் நகர், ரஞ்சித்கொடிகார சுனாமி வீட்டுத்திட்ட பகுதி, பைசல் நகர், கண்டலடியூத்து பகுதி (உப்பாறு பாலம்)

2021.03.24 08.00-17.00
இடம்
பாலம்பட்டாறு பகுதி, தம்பலகாமம் பகுதி

2021.03.27 08.00-17.00
இடம்
கிண்ணியா மின்பாவனையாளர் சேவை நிலைய முழுப்பிரதேசம்

2021.03.28 08.00-17.00
இடம்
பாலம்பட்டாறு பகுதி, தம்பலகாமம் பகுதி

மின்பாவனையாளர் சேவை நிலையம் கந்தளாய்

2021.03.20 08.00-17.00
இடம்
அல்பாசிகம, வராகெல, கந்தளாய் நெல் ஆராய்ச்சி மையம், அக்போபுர, 84ம் கட்டை

2021.03.25 08.00-17.00
இடம்
84ம் கட்டை பகுதி

2021.03.26 08.00-17.00
இடம்
கந்தளாய் நகரப்பகுதி

2021.03.29 08.00-17.00
இடம்
அல்பாசிகம, வராகெல, கந்தளாய் நகரப்பகுதி

மின்பாவனையாளர் சேவை நிலையம் கோமரங்கடவெல

2021.03.12 08.00-17.00
இடம்
கோமரங்கடவெல முழுப் பிரதேசம்

2021.03.22 08.00-17.00
இடம்
கோமரங்கடவெல முழுப் பிரதேசம்

2021.03.27 08.00-17.00
இடம்
கோமரங்கடவெல முழுப் பிரதேசம்

பிரதேசம் கல்முனை

மின்பாவனையாளர் சேவை நிலையம் கல்முனை

2021.03.13 08.30-16.15
இடம்
தரவைகோவில், கடற்கரைபள்ளி, அம்மன்கோவில், பீச் வீதி, உடையார் வீதி, VV வீதி, இஸ்லாமபாத் வீட்டுத்திட்டம்

2021.03.16 08.30-16.15
இடம்
7ம்,15ம் கொலனி, வேப்பயடி மற்றும் அன்னமலை பகுதி

2021.03.16 08.30-16.15
இடம்
நட்பிட்டிமுனை, மணல்சேனை, சேனைக்குடியிருப்பு

மின்பாவனையாளர் சேவை நிலையம் நிந்தவூர்

2021.03.15 08.30-17.00
இடம்
சின்னபாலமுனை, கோனவத்தை, திரையரங்கு வீதி, 1ம், 2ம், 3ம் குறுக்கு, பீச் வீதி பகுதி

2021.03.16 08.30-17.00
இடம்
ஒலுவில் கிராமம், திராய்கேனி

2021.03.17 08.30-17.00
இடம்
வைத்தியசாலை வீதி பகுதி

2021.03.18 08.30-17.00
இடம்
சின்னபாலமுனை, கோனவத்தை, வெளவாலோடை

2021.03.20 08.30-17.00
இடம்
அட்டாளைச்சேனை, GTC தெற்கு, வடக்கு வீதி, நிந்தவூர் முஸ்தபாபுரம் பகுதி

2021.03.22 08.30-17.00
இடம்
சின்னப்பாலமுனை, நிந்தவூர் முஸ்தபாபுரம்

2021.03.23 08.30-17.00
இடம்
ஒலுவில் கிராமம், திராய்க்கேனி, வெளவாலோடை

2021.03.25 08.30-17.00
இடம்
சின்னபாலமுனை, நிந்தவூர் வெளவாலோடை

2021.03.27 08.30-17.00
இடம்
ஒலுவில் கிராமம், அட்டாளைச்சேனை, GTC தெற்கு, வடக்கு வீதி

2021.03.29 08.30-17.00
இடம்
திராய்க்கேனி, உதுமாபுரம், நிந்தவூர் முஸ்தபாபுரம்

2021.03.30 08.30-17.00
இடம்
ஒலுவில் கிராமம், திராய்க்கேனி, வெளவாலோடை

மின்பாவனையாளர் சேவை நிலையம் சாய்ந்தமருது

2021.03.13 08.30-16.15
இடம்
தரவைகோவில், கடற்கரைபள்ளி, அம்மன்கோவில், பீச் வீதி, உடையார் வீதி, VV வீதி, இஸ்லாமபாத் வீட்டுத்திட்டம்

2021.03.25 09.00-17.00
இடம்
ஓஸ்மான் வீதி பகுதி

மின்பாவனையாளர் சேவை நிலையம் சம்மாந்துறை

2021.03.13 08.30-17.00
இடம்
அம்பாறை பிரதானவீதி, கல்முனை பிரதான வீதி, விழினியடி 01,02,03, அன்டி சந்தி பொலிஸ் வீதி, தைக்காபள்ளி, நகர்பள்ளி, புதுப்பள்ளி, அலிவன்னியார் வீதி, வீரமுனை, சின்னப்பள்ளி, பெரியபள்ளி, நூர்பள்ளி, பழைய சந்தைப்பகுதி, சொரிக்கல்முனை, வீரச்சோலை

2021.03.15 08.30-17.00
இடம்
மல்கம்பிட்டி, நைனாகாடு

2021.03.18 08.30-17.00
இடம்
தென்னங்கிராமம், சென்னல்கிராமம் 1,2, உடங்க, 40ம் வீட்டுத்திட்டம்

2021.03.20 08.30-17.00
இடம்
ஹிச்ராபுரம், சம்புமடு

2021.03.23 08.30-17.00
இடம்
அம்பாறை வீதி, ஹிலால்புரம், வங்கலாவாடி

2021.03.25 08.30-17.00
இடம்
ஹிச்ராபுரம், சம்புமடு

2021.03.30 08.30-17.00
இடம்
ஹிச்ராபுரம், சம்புமடு

பிரதி பொது முகாமையாளர் (கிழக்கு)
இலங்கை மின்சார சபை.
உப்புவெளி.
திருகோணமலை.

வளமான வாழ்விற்கு மின்சாரம்

நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்

புத்தளம் கரைத்தீவு கிராமத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அலி சப்ரி ரஹீம் மற்றும் சிந்தக அமல் மாயாதுன்ன ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

(படங்கள்: புத்தளம் தினகரன் நிருபர்)

திருகோணமலை இராவணன் கல்வெட்டுக்கருகில் பழமை வாய்ந்த தமிழ் கல்வெட்டு கண்டுபிடிப்பு

வரலாற்றுத்துறை பேராசிரியர் புஸ்பரட்ணம்

கிளிநொச்சி குறூப் நிருபர்

திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்திற்கு அருகில் உள்ள இராவணன் கல்வெட்டுக்கருகில் பழமை வாய்ந்த தமிழ் கல்வெட்டு ஒன்று கடந்தவாரம் கண்டுபிடிக்கப்பட்டது என யாழ் பல்கலைகழகத்தின் வரலாற்றுத்துறை பேராசியர் ப.புஸ்பரட்ணம் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் திருகோணமலை மத்திய கலாசார நிதியத்தின் ஆய்வு உத்தியோகத்தர்கள் தமிழ் கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஒரு நீண்ட கல்வெட்டின் ஒரு பகுதியை அதாவது உடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அந்த கல்வெட்டுக்களில் உள்ள ஆறு வரி எழுத்துக்களை தெளிவாக வாசிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த கல்வெட்டு அங்கிருந்த ஆலயம் ஒன்றுக்கு அது பெரும்பாலும் கோணேஸ்வரர் ஆலயம் ஆக இருக்க வேண்டும் அரிசி, நெல் என்பவற்றை தானமாக வழங்கியது பற்றி கூறுகின்றது. அவ்வாறு வழங்கப்பட்ட நெல் அரிசி என்பவற்றின் அளவுகள் குறியீட்டு முறையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டு பற்றி மேலும் ஆய்வு செய்த தமிழகத்தில் முதன்மை கல்வெட்டு அறிஞரான சுப்பராயலு, கலாநிதி ராஜகோபால் போன்றவர்கள் இக் கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டது என அடையாளப்படுத்தியுள்ளனர்.

இதிலிருந்து இக் கல்வெட்டு சோழர் ஆட்சி முடிந்ததன் பின்னரும் கோணேஸ்வரர் ஆலயம் அங்கு வாழ்ந்த சைவர்களால் பராமரிக்கப்பட்டது ஒரு முக்கிய ஆதாரமாக

காணப்படுகின்றது. தமிழகத்தில் பக்தி இயக்கத்தை தலைமை ஏற்று நடத்திய நாயன்மார்கள் தமிழகத்தை அடுத்து முக்கியமான சைவ ஆலயங்கள் உள்ள இடங்களாக கிழக்கிலங்கையில் கோணேஸ்வரர் ஆலயத்தையும் வட இலங்கையில் திருக்கேதீஸ்வர ஆலயத்தையும் போற்றிப் பாடுகின்றன.

சோழர் ஆட்சியில் பொலனறுவை தலைநகராக இருந்தாலும் அவர்களுடைய அரசியல், இராணுவ, நிர்வாக, பண்பாட்டு நடவடிக்கைகள் திருகோணமலையை மையப்படுத்தியே நடைப்பெற்றமைக்கு அதிக ஆதாரங்கள் காணப்படுகின்றன.

அதனால்தான் சோழர்கால உப தலைநகராக திருகோணமலையை குறிப்பிடுகின்றனர். 1070ல் சோழ ராட்சி முடிந்ததன் பின்னர் பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டாலும் அவர்களும் தொடர்ந்து இந்து ஆலயங்களுக்கு ஆதரவு கொடுத்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இப்போது கிடைத்திருக்கின்ற இந்த கல்வெட்டு சோழர் ஆட்சியின் பின்னர் திருகோணமலையில் வாழ்ந்த இந்துக்களால் கோணேஸ்வரர் ஆலயம் பராமரிக்கப்பட்டு வந்ததற்கு நல்ல ஒரு சான்றாகக் காணப்படுகின்றது.16ஆம் நூற்றாண்டிலிருந்து போத்துக்கேயர் ஒல்லாந்தருடைய ஆட்சியில் கலை அழிவு கொள்கையால் பல இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் ஒன்றாக கோணேஸ்வரர் ஆலயம் காணப்படுகின்றது. கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு சூழலில் மேலும் சில கல்வெட்டுக்கள், சில கட்டட அழிபாடுகள் இருப்பதாக அறிய முடிகின்றது. ஆகவே அந்த இடத்தில் மேலும் ஆய்வுகள் செய்வதன்

மூலம் கோணேஸ்வரர் ஆலயத்தின் பழமையான வரலாற்றை அறிய கூடிய அரிய பல கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கலாம் என நம்பப்படுகிறது என்றார்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகி விவசாயி மரணம்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

முள்ளியவளை முறிப்பு பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயி ஒருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

குமாரபுரம் முள்ளியவளையை சேர்ந்த 51 வயதான கந்தசாமி சத்தியநாதன் என்ற விவசாயியே இதன்போது உயிரிழந்துள்ளார்.

விவசாய நிலத்தில் நேற்று முன்தினம் மாலை விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை குளவிக் கொட்டுக்கு இலக்காகி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

பலாகள பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட 691 கிராம அலுவலகர் பகுதியிலுள்ள ஹல்மில்லேவ மற்றும் மிரிஹம்பிட்டிகம கிராம மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீர் வழங்கும் திட்டம் கடந்த 25ம் திகதிஅங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன மற்றும் கிராமப்புற, உள்ளூர் குடிநீர் வழங்கல் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த ஆகியோர் இதனை திறந்து வைத்த போது பிடிக்கப்பட்ட படம்.

(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன், கல்நேவ தினகரன் விசேட நிருபர்கள்)

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

மின் விநியோகத் தடை

பின்வரும் இடங்களில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் அத்தியாவசிய நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் நிமித்தம் மின்சார விநியோகம் தடைப்படுமென வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். பொதுவான மின்சாரத் தடைக்கான நேரம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரையாகும். எவ்வாறாயினும் ஒவ்வொரு பகுதிகளுக்கான நேரங்கள் வெவ்வேறாகக் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

2021 மார்ச் மாதத்திற்கான மின்சாரத் தடை அட்டவணை

திகதிகள் மற்றும் மின் கம்பியிணைப்புள்ள இடங்கள்

காலி

1 **மார்ச் 15**
கன்னம்பிட்டிய வீதி, மக்குளுவ புதிய ஒழுங்கை, வெதகெதரவத்த, சுதுஜன வீதி, 1ம் மற்றும் 2ம் ஒழுங்கைகள், வில்சன் வீடமைப்புத் திட்டம், தென்கல்கொட வீதி, மஹகெதரவத்த, ஜாமில் மாவத்தை, ஸ்ரீ சுபத்ராராம வீதி, எச்.கே. எட்மன்ட் மாவத்தை, சேர்கியலர் வீதி, மொரிஸ் வீதி, பண்டாநாயக்க மாவத்தை, கோன்கஹ வீதி, தனிபொல்கஹ 1ம் ஒழுங்கை, மொஹிதீன்வத்த, மலித்துவ புதிய ஒழுங்கை, நாகஹவத்த பிளேஸ், மஹவத்த, மல்திபே 3ஆம் ஒழுங்கை, ஹேலி வீதி, எத்திலிகொட வீதி, கப்புஹேனபொல, மில்லிதுவ, செம்சன் ராஜபக்ச வீதி, பிரவுன்ஸ் வீதி (பகுதி), லபுதுவ மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 15**
கெக்கிரிபொக்கவத்த, பொலிஸ் விடுதி, வக்வெல்ல வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 16**
ஹிரிம்புர வீதி மற்றும் ஒழுங்கை, கித்துலன்பிட்டிய வீதி, புதிய ஒழுங்கை, மடவலமுல்ல, டொரிங்டன் டெரஸ், பாடசாலை ஒழுங்கை மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 17, 31**
தன்கெதர வீதி, ஹிரிம்புர வீதி, ஜிப்ரியா வீதி, சரணங்கர வீதி, ஸ்டீல் வீதி, செனரத்கடே சந்தி, கிரிப்ஸ் வீதி, மல்வத்த டெம்பல் வீதி, சமகிவத்த, பெலிகஹ சந்தி, ஹேமானந்த மாவத்தை (பகுதி), ஜயவர்தனாராம வீதி, டிக்சன் வீதி (பகுதி), மடபாத்தல வீதி, மேதானந்த மாவத்தை, டொனால்ட் ஜேன்ஸ் வீதி மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 18**
விஜேகுலசூரிய மாவத்தை, கங்காராம வீதி, மாத்தறை வீதி (பகுதி), பெட்டிகலவத்த, தலபிட்டிய, கோன்கஹ வீதி, சேர்கியூலர் வீதி, கில்பேட் ஒழுங்கை, பிரதான வீதி (பகுதி), பண்டாரநாயக்க பிளேஸ் (பகுதி), தக்கியா வீதி மற்றும் ஒழுங்கை, அப்துல் வஹாப் மாவத்தை, சமகி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

6 **மார்ச் 18**
மஹலியவத்த, சேர்கியுலர் வீதி, மக்குளுவ புதிய ஒழுங்கை மற்றும் கிளை வீதிகள்

7 **மார்ச் 24**
பியத்திகம, ஜின்தொட்ட, கொழும்பு வீதி (பகுதி), போபே வீதி, தாதெல்ல குறுக்கு வீதி, வெலிபிட்டிமோதர, சுதர்மாராம மாவத்தை, கோவில மாவத்தை, ஜின்தொட்ட, IDH வத்த மற்றும் கிளை வீதிகள்

8 **மார்ச் 25**
மாத்தறை வீதி, கட்டுகொட வீதி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அக்குரெஸ்ஸ வீதி, கட்டுகொட பள்ளிவாசல் வீதி, மாகாலி, கில்பேட் ஒழுங்கை, உடுகம வீதி (பகுதி) தெவட்ட, சேர்கியூலர் வீதி, மாகவத்த வீதி, கிளோசன்பர்க் மற்றும் கிளை வீதிகள்

9 **மார்ச் 29**
கொழும்பு வீதி (பகுதி), வளவ்வத்த, ஜயந்தி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

10 **மார்ச் 30**
ஸ்ரீ தேவமித்ர மாவத்தை, காமினி மாவத்தை, சைனா கார்டன், மத்திய வீதி, பஸ் நிலையம் மற்றும் கிளை வீதிகள்

ஹிக்கடுவ

1 **மார்ச் 15, 29**
பாலம்கொட, தொடங்கொட வீதி (பகுதி), பள்ளியபிட்டிய, பெனிவத்த மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 17**
வேவல மில்ல வீதி, காலி வீதி (பகுதி), சுதுவெல்ல வீதி, சோதர மாவத்தை, நலகஸ்தெனிய, பத்தேகம வீதி (பகுதி), பன்னன்கொட வீதி, வவுலாகொட வீதி, கொடவத்த, காலி வீதியில் சுனில் பீச் ஹோட்டலிலிருந்து குமாரகந்த சந்தி வரை, நரிகம, வீ.சீ. வீதி, லீனவத்த, வேவல்கொட வீதி, பன்னன்கொட வீதி, மில்ல வீதி (பகுதி), கொஹுஅம்பே வீதி, அமரசேன மாவத்தை, வவுளாகொட வீதி, பன்னங்கொட வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 19**
கந்தேகொட, கல்லிந்துவத்த, விஜேரத்ன மாவத்தை, ஸ்ரீ தர்மராஜ மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 22**
தொலேவத்த, ஹேகொட, அன்ஹந்திகொட, பள்ளியபிட்டிய மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 24**
காலி வீதியில் ஜின்தொட்ட பாலத்திலிருந்து பூஸா இராணுவ முகாம் வரை, கடுருப்ப வீதி, கந்தல வீதி, K.U.D. மாவத்தை, வத்துராவில வீதி மற்றும் கிளை வீதிகள்

6 **மார்ச் 24**
ரனபானாதெனிய, தொடங்கொட வீதி (பகுதி), தெஹிகஸ் சந்தி மற்றும் கிளை வீதிகள்

7 **மார்ச் 26**
பத்தேகம வீதி புகையிரதக் கடவையிலிருந்து நலங்கஸ்தெனிய வரை, சோரத மாவத்தை, மில்ல வேவல வீதி, ஜினசேன மாவத்தை, எகொடகொட வீதி, வடுகொட வீதி, ஜோன் சில்வா மாவத்தை, கிரஹந்திகொட வீதி, ஜோமஹந்திகொட, மஹவத்த வீதி, குருந்துவத்த, சுதுவெல்ல வீதி, ஸ்ரீ சுமங்கள வீதி, பொல்வத்தை, காலி வீதியில் ஹிக்கடுவ பீச் ஹோட்டலிலிருந்து ஹிக்கடுவ சந்தி வரை, அமரசேன மாவத்தை (பகுதி), பத்தேகம வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

அம்பலாங்கொட

1 **மார்ச் 16**
காலி வீதியில் தர்மாசோக்க கல்லூரியிலிருந்து ஹரிஸ்சந்திர டயர் வேர்க்ஸ் வரை, பட்டபெந்திமுல்ல, சந்திரவாச வீதி, மகாவித்தியாலய, ஸ்டேஷன் வீதி, களுத்துறை வீதி, கடற்கரை வீதி (பகுதி), 5ம் குறுக்குத் தெரு, விக்கிரமசூரிய வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 23**
துடுவேகொட (பகுதி), கெரமினிய வீதி, கெரமினிய பொக்குன வீதி, பத்திராஜ வீதி, டிஸ்னி வீதி, பின்னதுவ, பொல்வத்த, பங்கலோக்க மாவத்தை, எப்பிட்டமுல்ல வீதி, தல்கஸ்கொட வீதி, நுகேதுடுவ, பீரிஸ் வெத மாவத்தை, பி.எச்.ஆர். சுமணதாச மாவத்தை, பலதுவ வீதி, கலுவடுமுல்ல, போரபா, பெனியன்ன, போரபா தொட்டுபொல வீதி, தேவால வீதி, வலவ்வத்த வீதி, ரொபர்ட் விக்கிரமசூரிய வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 23**
தேவகொட வீதி, இடம்தொட்ட மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 30**
குலீகொட வீதி, குலீகொட, மஹருப்ப, வளவ்வத்த, மாதம்பகம, வெனமுல்ல, மாதம்பே, திம்புல்துவ மற்றும் கிளை வீதிகள்

களுத்துறை

1 **மார்ச் 16**
காலி வீதியில் மொல்லிகொடயிலிருந்து தல்பிட்டிய பாலம் வரை, கிரமசங்வர்தன வீதி, உபாலி மாவத்தை, தம்பியகம, கடற்கரை வீதி, ஸ்ரீ விக்கிரம வீதி, வசந்தராராம வீதி, சமுத்ர மாவத்தை, குரே வீதி, சேர்ச் வீதி, அக்னஸ் குரே மாவத்தை, எம்.ஈ.குரே மாவத்தை, சென். பெட்ரிக் மாவத்தை, ரோஸ் கார்டன், விஜட வீதி, ஸ்டேஷன் வீதி, பாலிகா வித்தியாலய வீதி, மொரன்துடுவ வீதி (பகுதி), சோபித்த மாவத்தை, தர்மாராச்சி மாவத்தை, மஹிந்தாராம மாவத்தை, சேர்ச் வீதி, வராகம வீதி (பகுதி), அல்பட் குணதிலக்க மாவத்தை, தலதாவத்த வீதி, தலதாவத்த ஒழுங்கை, யூ.சி. வீடமைப்புத் திட்டம், ரத்நாயக்க வீதி, உபாலி மாவத்தை (பகுதி), மத்திய வீதி (பகுதி), மத்திய ஒழுங்கை, உடகஹபத்துவ வீதி, ஹொலிடே ரிசோட் வீதி, திப்பெத்த வீதி, காமினி வீதி, கொன்வென்ட் வீதி, விவேகாராம வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 18**
இசுறு உயன, கித்துலாவ, லகொஸ்வத்த, அல்விஸ்வத்த, பஸ்வத்த, லின்டன்வத்த, எட்டவில வீதி, எட்டவிலவத்த, கெமுனு மாவத்தை, தூவ தேவாலய வீதி, ரிச்மன்ட்வத்த, சமகி மாவத்தை, கட்டுகுருலுகஹலந்த, அரலிய உயன, சுவசேவா மாவத்தை, சாயம்வத்த, ரோயல் பார்க், இசுறு உயன 11, பலாதொட்ட வீதியில் மணிக்கூண்டுக் கோபுரத்திலிருந்து புல்லர்டன் வரை மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 20 மு.ப. 8.00 முதல் ந.ப. 12.00 வரை**
காலி வீதியில் மணிக்கூண்டு கோபுரம் முதல் கெத்தாராம வீதி வரை, புகையிரத நிலைய வீதி, சரணந்த மாவத்தை, கிரகரி வீதி, சில்வா வீதி, குட்செட் வீதி, பழைய வீதி, வைத்தியசாலை வீதி, விஜேரத்ன பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 23**
எட்டவில வீதி, அரலிய உயன, இசுறு உயன, கெமுனு மாவத்தை, தூவ கோவில் வீதி, அல்விஸ் பிளேஸ், ஹில் ஸ்ட்ரீட், மரிக்கார் வீதி, சோனக வீதி, விக்கிரமசிங்க பிளேஸ், மாபூர் கிரசன்ட், செனவிரத்ன பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 25**
பலாதொட்ட வீதியில் மணிக்கூண்டுக் கோபுரத்திலிருந்து பலதொட்ட சந்தி வரை, கங்கபட வீதி, புதிய வீதி, லிஹினியாகந்த வீதி, PTS வீதி (பகுதி), ஆசிரி உயன, லின்டன்வத்த, மில்லகஹவத்த, பஸ்வத்த மற்றும் கிளை வீதிகள்

பயாகல

1 **மார்ச் 17 மு.ப. 8.00 முதல் ந.ப. 12.00 வரை**
பள்ளிவாசல் வீதி, மசூர் வீதி, கலீல் பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 17**
ராகலவெல, வேவாலகந்த, போம்பிரியகஹலந்த, பஸ்தியன் மாவத்தை, ஹல்கந்தவில, ஜுட் பியகம, பொட்டல்தெனிய, கந்தகஹவில மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 19**
காலி வீதியில் தலுவத்த சந்தியிலிருந்து ரொக்லண்ட் வீதி சந்தி வரை, யட்டதொல வீதி (பகுதி), மாபிட்டிய, தியலகொட, சென் வின்சன்ட் வீதி, இந்திரியகொல்ல வீதி மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 19**
தஹம்பன்னகம, 16 ஏக்கர் மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 22**
கொரக்கதூவவத்த மற்றும் கிளை வீதிகள்

6 **மார்ச் 26**
கல்லஸ்ஸ வீதி, ஆசிரி உயன, வெனிவெல்கெட்டிய, குணதிலக்கவத்த, விஜய மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

7 **மார்ச் 30**
கோமரகந்த, முனசிங்ககொட, மூனமல்கஹவத்த மற்றும் கிளை வீதிகள்

8 **மார்ச் 31**
பழைய விமான நிலைய வீதி, விவசாய சேவை வீதி மற்றும் கிளை வீதிகள்

9 **மார்ச் 31**
முலட்டியன, கல்லிந்த வீதி, பம்பே, மெஹிமுல்ல வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

10 **மார்ச் 31**
இஹலவடுகொட வீதி மற்றும் கிளை வீதிகள்

அலுத்கம

1 **மார்ச் 15**
மத்துகம வீதி (பகுதி), மிஹிரிபென்ன வீதி, மிலிட்டரி வீதி, மீனாச்சிகந்த, புதிய வீதி, பிரதான வீதி, மன்சூர் மாவத்தை, ஷேக் பெஸ்சி மாவத்தை, குருந்தவத்த வீதி, கடியவத்த, பத்திராஜகொட, பகஹவத்த மார்கட் வீதி, தர்கா நகர், ஜெம் வீதி, அம்பகஹ சந்தி, வைத்தியசாலை வீதி, சமகி மாவத்தை, மரிக்கார் வீதி, டெம்பள் வீதி, சம்சம் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 15 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
கந்தேவிகார வீதி (பகுதி), தேவால வீதி, வெதமுல்ல, கந்தேவிகார வீதி, ஸ்ரீபத்திய வீதி, லோட்டஸ் வீதி, புதிய வீதி, இஸ்னபுள்ளே வீதி. கருணாரத்ன வீதி, கல்ஹேன வீதி, சாவியா வீதி, ஸாஹிரா வீதி, எஸ்.எம். வீதி, ஷேக் மதாரா வீதி, கடியவத்த வீதி, வெலிப்பிட்டிய, சம்சுதீன் மாவத்தை, தர்கா நகரம் மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 15 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
மத்துகம வீதி (பகுதி), சாவியா வீதி, லோட்டஸ் வீதி, சிறிபத்தி வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 24**
அராபி வீதி, ராசிக் மரிக்கார் வீதி, தக்கியா வீதி, அபூபக்கர் வீதி, மருதானை வீதி (பகுதி), பண்டாரவத்த, ஜோசப் குரே மாவத்தை, மரிக்கார் பிளேஸ், வத்தும ராஜபுர, ஹலவாகொட (பகுதி), கபடாகொடபுர (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

5 **மார்ச் 24**
கங்காணங்கொட மற்றும் கிளை வீதிகள்

6 **மார்ச் 24**
ஸ்ரீ பஞ்ஞானந்த மாவத்தை, கனேஅரம்ப வீதி, கங்காணம்கொட வீதி, கீரந்தடிய வீதி மற்றும் கிளை வீதிகள்

7 **மார்ச் 29 மு.ப. 8.00 முதல் பி.ப. 2.30 வரை**
சென் ஆன்ஸ் வீதி, நளீம் ஹாஜியார் மாவத்தை (பகுதி), பெரேரா வீதி, காலி வீதி (பகுதி), கப்பித்தான்கொட வீதி (பகுதி), நவுபர் மாவத்தை, கரன்னாகொட வீதி, கல்பொத்த வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

மொரட்டுவ

1 **மார்ச் 16 மு.ப. 8.00 முதல் பி.ப. 2.00 வரை**
உஸ்வத்த சேர்கியுலர் வீதி, கோவிஸ் மாவத்தை, பிரான்சிஸ்கோ மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **மார்ச் 18**
டி மெல் வீதி (பகுதி), புரன்அப்பு மாவத்தை, ரத்துகுருசவத்த, பிஷப் டெரஸ் (பகுதி), டி மெல் வீதி, பிஷப் டெரஸ் (பகுதி), மேதானந்த மாவத்தை (பகுதி), அபொன்சோ மாவத்தை, ஏனர்ஸ்ட் மாவத்தை, மஹவிஹார வீதி, குருபள்ளிய வீதி, பொன்சேக்கா வீதி (பகுதி), லக்ஸபத்திய, கேளம்பி வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **மார்ச் 23**
வீரபுரன்அப்பு ரஜ மாவத்தை, சாகர 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் ஒழுங்கைகள், ஹோலி குரொஸ் அவன்யூ மற்றும் கிளை வீதிகள்

4 **மார்ச் 25**
காலி வீதி (பகுதி), சுரம்யா பிளேஸ், டி மெல் வீதி, மொடல் டவுண், மொடல் அவன்யூ, கார்டன் சிட்டி, ராகுல மாவத்தை (பகுதி), பண்டாரநாயக்க மாவத்தை (பகுதி), கட்டுபெத்த சந்தி மற்றும் கிளை வீதிகள்

பாணந்துறை

1 **மார்ச் 16**
